

# மந்திர கம்பளம்



வாண்டுமாமா

# மந்திர கம்பளம்



## வாண்டுமாமா

## அத்தியாயம் - 1

ரொம்ப ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே விசித்திரபுரி என்று ஒரு நாடு இருந்தது. இந்த மந்திரபுரியை மந்தஹாச மகாராஜா என்பவர் ஆட்சி புரிந்து வந்தார். அவர் ரொம்ப மந்தபுத்தியுள்ளவர், ஆனால் ரொம்ப நல்லவர். ராணியின் பெயர் ரத்தினாவதி. ராணியும் ராஜாவும் சௌக்கியமாக சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இது கொஞ்ச காலம்தான் நீடித்தது. அவர்களை மெள்ள மெள்ள ஏக்கம் வாட்டலாயிற்று. ஏன், எதனால்?

விசித்திரபுரிக்கு அடுத்த வாரிசாக ஒரு இளவரசன் இன்னும் தோன்றாதுதான். மன்னருக்குக் குழந்தைகள் என்றால் ரொம்பப் பிடிக்கும். ராணிக்கோ இன்னும் குழந்தையே பிறக்கவில்லை. 'ஒரு குழந்தையைக் கொஞ்சி விளையாடக் கொடுத்து வைக்கவில்லையே? தான் தாயாகவில்லையே என்ற ஏக்கம்

பெருகலாயிற்று ரத்னாவுக்கு. மன்னர் மந்தஹாசரின் நாட்டை அடுத்திருந்த கானகத்தில் பல மலைக்குகைகள் இருந்தன. அதில் காலமெல்லாம் கண் மூடிக் கடவுளை நினைத்துத் தவம் புரியும் முனிவர்கள் பலர் இருந்தார்கள். இவர்களிடம் போய் ஆசி பெற்று வந்தால் தமக்கு ஒரு மகன் பிறக்க அவர்கள் அருள்வார்கள் என்று நம்பினார் மன்னர். ஆனால், ராணியோ இந்த எண்ணத்துக்கே எதிரியாக இருந்தாள். அவளுக்கு சாமியார்களைக் கண்டாலே பிடிக்காது. அவர்களால் சின்ன வயதில் ரொம்பவும் அவதிப்பட்டவள் ராணி. அதனால்தான் ஜடாமுடி தரித்த சாமியார்களைக் கண்டாலே அவள் ஓடி ஒளிவாள். முகம் சுளிப்பாள். ஆத்திரப்படுவாள். இதெல்லாம் மன்னருக்குத் தெரியும். ஆகவே தம் எண்ணத்தைக் கைவிட்டு விட்டார். நாட்டையே கூட ராணிதான் நிர்வகித்து வந்தாள். அவர் விருப்பத்துக்கு மாறாக எதுவும் செய்ய மாட்டார் மன்னர். ராணிக்கு அடங்கிய பொம்மை அவர்.

தங்களது காலத்துக்குப் பிறகு விசித்திரபுரி வேறு மன்னரின் வசமாகி விடுமே என்று தமக்குப் பிள்ளை இல்லாத குறையை எண்ணியபடி நான்மாடக் கூடலில் அமர்ந்திருந்த மந்தஹாச மகாராஜா அரைத்தூக்கத்தில் இருந்தார். அப்போது அவர் மனத்திரையிலே ரத்தினாவதியைத் தம் மனைவியாக்கிக் கொண்ட அந்த நிகழ்ச்சி தோன்றலாயிற்று.

இளவரசராக இருக்கும் போதே மந்தஹாசர் மந்தமாகத்தான் இருப்பார். வீர விளையாட்டுக்களிலோ வேட்டையாடுவதிலோ நாட்டம் கிடையாது. ஒரு சமயம் பெரிய ராஜா தம் மகனைக் கட்டாயப்படுத்தி வேட்டைக்கு அனுப்பினார். காட்டுக்குப் போனவரர் தம்மோடு வந்தவர்களுக்குப் போக்குக் காட்டி விட்டுத் தனியாகப் பிரிந்து போனான் மந்தஹாசன். 'முயலையும் மானையும் புலியையும் துரத்திக் கொண்டு ஓடுவதாவது? கானகத்து நிழலில் கண்மூடிப் படுத்தால் எவ்வளவு சுகமாகத் தூக்கம் வரும். இதை அனுபவிக்காமல் குதிரையை விரட்டிக் கொண்டு வேட்டையாட அலைவது முட்டாள்தனம்' என்று ஒரு

குகைக்குள் புகுந்து வசதியாகப் படுத்துக் கொண்டான் இளவரசன் மந்தஹாசன். குளுகுளுவென்ற காற்று இதமாக இருந்தது. இனிமையான தூக்கமும் அவனைத் தழுவிக் கொண்டது.

அந்தக் குகைக்குள் ஒரு பெரிய மிருகம் வசித்து வந்தது. நீண்ட வால், பயங்கரமான முகம், பெரிய வாய், அனல் கக்கும் அதன் மூச்சுக் காற்றுப் பட்டால் அத்தனையும் சாம்பல். இளவரசன் மந்தஹாசனின் குறட்டைச் சத்தம் குகைக்குள் தூங்கிக் கொண்டிருந்த பயங்கர மிருகத்தை எழுப்பி விட்டது. கோபத்துடன் வாலைச் சுழற்றித் தரையில் அடித்தபடி, வாயிலிருந்து தீ சுவாலை கக்க, அம்மிருகம் குகையின் வாசலுக்கு வந்தது. அப்போதும் இளவரசன் எழுந்திருக்கவில்லை. தன் கர்ஜனையைக் கேட்டும் கலங்காமல் கண் தூங்கும் மனிதனைக் கண்ட மிருகத்துக்கு வியப்பான வியப்பு. ஈட்டிகள் போன்ற செதில்களையுடைய தன் வாலினால் தூங்கும் இளவரசனின் காதருகில் கிசுகிசு மூட்டியது மிருகம். தன்னுடன் வேட்டையாட வந்தவர்கள்தான் தன் இன்பத்தைக்க லைக்க ஏதோ

குறும்பு செய்வதாக எண்ணிய இளவரசன், 'என்னப்பா! இதெல்லாம் விளையாட்டு?" என்று கண்களைத் திறக்காமலேயே ஒரு கையால் மிருகத்தின் முள் வாலை ஒதுக்கித் தள்ளினான்.

அந்தக் காலத்து அந்தப் பொல்லாத மிருகம் பேசக் கூடச் செய்தது? "எதை விளாயாட்டு என்கிறாய்? நன்றாகக் கண்ணைத் திறந்து பார்" என்று அவன் முகத்துக்கு நேரே தன் நெருப்பு தன் நெருப்பு மூச்சை ஊதிற்று மிருகம்.

ஆனால் மந்தஹாசன் இப்போதும் கண்களைத் திறக்கவில்லை. தூக்கத்தின் இனிமையை இழக்க விரும்பாவில்லை அவன். "கொஞ்ச நேரம் நிம்மதியாகத் தூங்க விடுங்கப்பா. தொந்தரவு செய்யாதீர்கள்" என்று கூறியபடி மறுபுறம் திரும்பி வசதியாக முடங்கிக் கொண்டான். தன்னை லட்சியமே செய்யாத அந்த மனிதனைக் கண்ட அந்த மிருகத்தின் முகம் சிவந்தது.

"என்னை முத்தமிடு!" என்று கத்திற்று அந்தக் கொடிய மிருகம். எத்தனையோ வீராதி வீரர்களை எல்லாம் அது இப்படிக் கேட்டுமிருக்கிறது. அவர்கள் அந்த மிருகத்தை முத்தமிடச் சம்மதிக்காததினார் அதற்கு இரையாகி மாண்டு போயிருக்கிறார்கள். ஆனால் கண்களையே திறக்காமல் தூக்கத்தில் சொக்கிக் கிடக்கும் மந்தஹாசனுக்கு இதெல்லாம் எதுவுமே தெரியாதே. தன் முன்னால் ஒரு பயங்கர மிருகம் உட்கார்ந்திருப்பதைக் கூட அவன் புரிந்து கொள்ளவில்லை. கண்ணைத் திறந்து பார்த்தால்தானே?

"என்னை முத்தமிடு" என்ற குரல் கொஞ்சம் பெண் குரலைப் போலிருந்ததினால் இளவரசனும் கொஞ்சம் அசைந்து கொடுத்தான். அப்போதும் கண்களைத் திறக்கவில்லை. கண் மூடியபடியே, "முத்தம்தானே...? அதைக் கொடுத்து விட்டால் ஆளை நிம்மதியாகத் தூங்க விடுவாயல்லவா?" என்று கேட்டபடியே உதட்டைக் குவித்து தன் முகத்தருகே இருந்த

மிருகத்துக்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டுத் தன் தூக்கத்தைத் தொடரலானான். ஆனால்...?

இளவரசன் அந்தக் கொடிய மிருகத்துக்கு முத்தம் கொடுத்ததும் நடந்தது என்ன தெரியுமா? அழகே வடிவான ஒரு பெண்ணாக மாறியது அந்த மிருகம். ஒரு ராஜகுமாரிதான் ஒரு மந்திரவாதியினால் அப்படிக் கொடிய மிருகமாக்கப்பட்டிருந்தாள். 'மிருகமாக இருக்கும் உன்னை யாராவது துணிச்சலுடன் முத்தமிட்டால் உனக்கு உன்னுடைய பழைய உருவம் திரும்பி விடும்' என்று தன் மந்திர சக்திக்கு ஒரு மாற்றும் தெரிவித்திருந்தான் அவன். கோர ரூபமுடைய அந்த மிருகத்தைப் பார்த்தவர்கள் யார்தான் அவள் கேட்கும் முத்தத்தைக் கொடுப்பார்கள். ஆனால், இன்றோ மந்தஹாசன் தூக்க இன்பத்தால் இமைகளைத் திறக்காமலேயே அவள் கேட்டதைக் கொடுத்ததும் ராஜகுமாரி, தன்னுடைய சுய உருவத்தைப் பெற்று விட்டாள்.

"வீராதி வீரரே! என் அன்பரே! என் மணாளா!" என்று இனிய குரலால் மந்தஹாஸனைக் கூப்பிட்டுத் தொட்டு எழுப்பினாள் இளவரசி. "உங்களுக்காகத்தான் நான் இத்தனை காலமாக இந்தக் கொடிய உருவிலே காத்திருந்தேனே. இனி நான் உங்களுடையவள். என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றாள்.

அரைத் தூக்கத்திலிருந்த இளவரசன் மந்தஹாசன் இனிய குரல் கேட்டு அலறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். கண்களை அகலத் திறந்து எதிரில் இருக்கும் அழகியைக் கண்டான். நல்ல வேளை! சற்று முன்பு வரையில் அவள் எப்படி இருந்தாள் என்பதை அவன் இப்படிக் கண் திறந்து பார்த்திருப்பானானால் குதிரையையும் மிஞ்சும் வேகத்தில் ஓடியிருப்பான். அவன் இப்போது பார்த்துக் கொண்டிருப்பது ஒரு அழகிப பெண்ணை, அதுவும் அவள் தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளும்படி கெஞ்சுகின்ற நிலையில். மந்தஹாசன் எப்போதுமே அதைப் பற்றியும் அதிகமாக ஆலோசிக்க மாட்டான். இப்போதும் அப்படித்தான். அந்தப் பெண் தன் பெயர் ரத்தினாவதி

என்றாள். அவளைத் தன் குதிரையின் மீதி ஏற்றிக் கொண்டு விசித்திரபுரிக்குத் திரும்பினான். விரைவிலேயே ரத்தினாவதி மந்தஹாஸனின் மனைவியானாள். அவனை விட அவள் அறிவாளியாகவும் திறமைசாலியாகவும் இருந்தாள். ஆகவே மந்தஹாஸன் சிங்காதனம் ஏறியதும் நாட்டு நிர்வாகத்தை ரத்தினாவதியிடமே ஒப்புவித்து விட்டுப் பெயருக்கு மட்டும் மகாராஜாவாக வாழ்ந்து வந்தார் மந்தஹாஸர். மந்திரவாதிகளையும் முனிவர்களையும் கண்டாலே ரத்தினாவதிக்கு ஏன் பிடிக்காதென்று இப்போது புரிகிறதில்லையா?

ராணி ரத்தினாவதிக்குப் பயந்து கொண்டு முனிவர்களிடம் போகாதிருந்தாலும் அரண்மனையில் இருந்தபடியே அவர்களை உளமாற நினைத்து வேண்டிக் கொண்டார் மன்னர் மந்தஹாஸர். அவரது முன்னோர்களெல்லாம் யோகிகளை மதித்து மரியாதை செய்து வந்திருக்கிறார்களாம். மந்தஹாசருக்கும் அவர்களிடம் மரியாதை உண்டு. ராணிக்குப் பயந்துதான் அவர்களை

அணுகாதிருந்தார். இவருடைய மானசீக வேண்டுதலினால்தானோ என்னவோ, ரத்தினாவதிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. மன்னரின் மகிழ்ச்சிக்கும் நாட்டு மக்களின் ஆனந்தத்துக்கும் எல்லையே இல்லை. ராணியும் பூரித்துப் போனாள். குழந்தை பிறந்த பத்தவாது நாள் தொட்டிலில் இட்டுப் பெயர் சூட்டுவதை விழாவாகக் கொண்டாடுவது விசித்திரபுரியின் வழக்கம். அன்று நல்லோர் பெரியோர் எல்லோரையும் அழைப்பார்கள். எல்லோருடைய ஆசியையும் பெறுவதற்காக ஏற்பட்ட விழா அது. அரசகுமாரனுக்கான இந்த வைபவம் எப்படி இருக்கும் என்று சொல்லவா வேண்டும்? ஏகத் தடபுடலாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிறந்த குழந்தையை மங்கல நீராட்டினார்கள். மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது., மரகதக் கற்களினால் இழைத்த தொட்டில். அதில் பட்டாடை அணிந்தபடி பஞ்சு மெத்தையில் கண்மூடிக் கிடந்தான் இளவரசன். நாட்டு மக்களெல்லாம் வந்து

வாழ்த்தினார்கள். ஆனால் மன்னர் யாரை எதிர்பார்த்தாரோ, அவர்கள் யாருமே வரவில்லை.

மலைக் குகைகளில் தவம் புரியும் யோகிகளையும் துறவிகளையும் முனிவர்களையும்தான் அவர் எதிர்பார்த்தது. அவர்கள் வந்துதான் குழந்தைக்குப் பெயர் வைப்பார்கள். ஆனால் இதுவரையில் யாரையுமே காணோமே? மந்திரியை அழைத்து விசாரித்தார். "தவசிகளுக்கும் துறவிகளுக்கும் யோகிகளுக்கும் இன்றைய நல்ல காரியத்தை அறிவித்து அழைப்பு அனுப்பவில்லையா?"

"மகாராணி அவர்கள் அவர்களை அழைக்க வேண்டாம் என்று கூறி விட்டார்கள்" என்றார் மந்திரி.

மந்தஹாச மகாராஜாவுக்குக் கோபம் வந்தது. ஆனால் மகாராணியிடம் அதைக் காட்ட முடியுமா? அருகிலிருந்த அவளிடம், "எங்கள் வமிசத்தில் இம்மாதிரி சந்தர்ப்பங்களில்

அவர்களை மறக்கவே மாட்டோம். நீ ஏன் இப்படி அவர்களைப் பகைத்துக் கொள்கிறாய்?" என்று பக்குவமாகக் கேட்டார்.

"உங்களிடம்தான் நான் முன்பே கண்டிப்பாகக் கூறியிருக்கிறேனே. இந்தச் சாமியார்கள், மந்திரவாதிகள், யோகிகள் யாருமே நம் நாட்டுக்குள் வரக் கூடாது. நம் இளவரசனையும் அவர்களைப் பற்றிய எண்ணமே இல்லாதபடு வளர்க்கப் போகிறேன்" என்றாள் ராணி ரத்தினாவதி கடுப்புடன்.

"அவர்களெல்லாம் நம் குடும்பத்துக்கு நன்மை செய்யக் கூடியவர்கள். நீ நினைப்பது போல்..." என்று ஏதோ கூற முற்பட்ட அரசரை இடைமறித்தாள் மகாராணி.

"இந்தப் பேச்சை இத்துடன் விட்டு விடலாம். நம் குழந்தைக்கு நீங்களே பெயரிடுங்கள்" என்று உத்தரவிட்டாள்.

அதற்கு மேல் அவரால் வாதாட முடியாது. அவளுக்கு அடங்கியவர் அவர். ஆகவே பெருமூச்சுடன் எழுந்திருந்தார். மலையடிவாரத்திலிருந்தும் குகைகளிலிருந்தும் வந்து கூடப் போகும் தவ முனிவர்களையும் யோகிகளையும் வரவேற்று உபசரித்து விருந்து கொடுக்க ஏற்பாடு செய்து ஏராளமான தலைவாழை இலைகள் போடப்பட்டிருந்தன. வெறிச்சோடிக் கிடந்த அந்தக் கூடத்தைப் பார்த்து அவர் மனம் அழுதது. கீர்த்தி வர்மன் என்று குழந்தைக்குப் பெயர் சூட்டித் திலகமிடும்போது 'ஹோ' என்று பேரிரைச்சலுடன், ஊழிக் காற்றோ என்னும்படியாக ஒரு சத்தம் உண்டாயிற்று. கூடியிருந்தோர் பயத்தினாலும் காற்றின் வேகத்தினாலும் கண்களை மூடிக் கொண்டார்கள். சட்டென்று காற்றும் ஒலியும் நின்றன. கண் திறந்து பார்த்த போது, அந்தக் கூடத்தில் பரிமாறப்பட்டிருந்த அத்தனை இலைகளின் முன்னாலும் முனிவர்களும் யோகிகளும் மந்திர தந்திரங்களில் வல்லவர்களும் அமர்ந்திருப்பதைக் கண்டார் மன்னர் மந்தஹாஸர். அவர் உள்ளம் நிறைந்தது. முகத்தில்

மந்தஹாசம் குடி கொண்டது. ராணியோ முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கடுகடுப்புடன்.

மன்னரின் மானசீகமான வேண்டுதலை ஏற்று அவர்கள் வருகளை தந்தார்கள். வந்தவர்களை விரட்ட முடியுமா ராணியால்? மன்னரும் மற்றவர்களும் அகமும் முகமும் மலர அவர்களுக்கு அமுது படைத்து அடிபணிந்து வணங்கினார்கள். விருந்துண்ட பின் வந்திருந்த தவயோகிகளும் பெரியோர்களும் குழந்தையை ஆசீர்வதித்தார்கள். ஒரு யோகி குழந்தைக்கு ஒரு பட்டுப் பையைப் பரிசாகக் கொடுத்தார். அதில் உள்ள தங்க நாணயங்கள் எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டேயிருக்கும். இன்னொருவர் ஒரே தப்படியில் ஒன்பது காத தூரத்தைக் கடக்கும் பாதுகையைப் பரிசாக அளித்தார். தலையில் அணிந்து கொண்டால் மற்றவர்கள் கண்களுக்குத் தெரியாமல், மறைந்து உலாவக் கூடிய மந்திரக் குல்லாயை ஒரு முனிவர் அளித்தார். விரும்பியதைக் கொடுக்கும் குளிகையைக் கொடுத்தார் வேறொருவர். விரித்துப் போட்டுக் அதன் மீது

அமர்ந்து கொண்டு எங்கு போக வேண்டுமென்று நினைத்தாலும் அங்கு பறந்து செல்லும் மந்திரக் கம்பளத்தை ஒரு தவயோகி தந்தார். என்றும் இளமையோடு குன்றாத அழகுடன் விளங்கவும் மகாவீரனாகத் திகழவும், சகல சம்பத்துகளுடம் வாழவும் ஆசீர்வதிக்கப்பட்டான் கீர்த்தி வர்மன். கடைசியாக ஒரு தொண்டுக் கிழவர் தொட்டிலின் அருகில் வந்து தமது நடுங்கும் கரங்களால் குழந்தையின் தலையைத் தொட்டு வருடி, "குழந்தாய்! நீ எல்லோரையும் விட அதிக புத்திசாலியாக விளங்குவாய்" என்று ஆசீர்வதித்தார். எப்படி மாயமாகக் காற்று ரூபத்தில் வந்தார்களோ அப்படியே மறைந்தும் போனார்கள் அத்தனை பேரும்.

இத்தனை நேரமும் சிலையாக செய்வதறியாது உட்கார்ந்திருந்தாள் ராணி. குழந்தை பசியால் சிணுங்கினான். தன் உணர்வடைந்தவள் ஓடிப்போய் அவனை அள்ளி அணைத்துக் கொண்டாள். வேறொரு தாயாக இருந்திருந்தால் இத்தனை பெரியோர்களின் ஆசிகளையும் அன்பளிப்புகளையும் கண்டு

மட்டற்ற மகிழ்ச்சியடைந்து போயிருப்பாள். ஆனால் ரத்தினாவது யோகியர் அளித்த மந்திரத் தலைப்பாகை, பை, பாதரட்சை, கம்பளம், குளிகை, வாள் எல்லாவற்றையும் அப்படியே மூட்டையாகக் கட்டினாள். அரண்மனையின் வடக்குக் கோடியில் உள்ள ஓர் ஒதுக்குப் புறமான உப்பரிகையின் உச்சாணியில் ஒரு அறை உண்டு. குப்பை கூளங்களைக் கொண்டு போடுவது போல இவைகளையெல்லாம் அந்த அறையில் கொண்டு போய் போட்டு அதன் கதவைப் பூட்டிக் கொண்டு வரும்படி உத்தரவிட்டாள்.

# அத்தியாயம் - 2

விசித்திரபுரியின் இளவரசன் எல்லாக் குழந்தைகளையும் போலவே நாளொரு அழுகையும் பொழுதொரு சிரிப்புமாக வளர்ந்து வந்தான். இளவரசனின் பெயர் தெரியுமல்லவா உங்களுக்கு? அவன் அப்பா மந்தஹாச மகராஜா பெயர் வைத்தாரே நினைவில்லையா? முனிவர்களும் தவயோகிகளும் சித்தர்களும் வந்த கூடிக் குழுமிய அந்தக் கோலாலகத்திலே அதை மறந்து போனீர்களா? இளவரசனுக்கு இட்ட பெயர் என்னவென்று மந்தஹாச மகாராஜா மறந்து போகலாம். ஆனால், நீங்கள் மறக்கலாமா? மறக்கவில்லை அல்லவா? ஆம், கீர்த்திவர்மன் -- அதுவே தான்!

குழந்தை இளவரசன் கீர்த்திவர்மன் வெகு விரைவிலேயே பேச ஆரம்பித்தான். அப்போதுதான் அவன் மற்ற குழந்தைகளிலிருந்து மாறுபட்டவன் என்பது தெரிந்தது.

குழந்தையைக் கவனுக்கும் பொறுப்புடைய தாதிகளுக்குத்தான் அந்த முதல் அதிர்ச்சி ஏற்பட்டது. எந்தச் செயலுக்கும் 'ஏன், எப்படி, எதனால்?' என்று வினா எழுப்பி விடை கிடைத்த பிறகுதான் சமாதானமடைவான் கீர்த்தி.

சாப்பிடச் சொன்னால் 'சாப்பிடா விட்டால் என்ன?' என்று கேட்பான். குளிக்க வேண்டும் என்றால் 'எதற்காகக் குளிக்க வேண்டும்?' என்று விளக்கம் தரச் சொல்லுவான். ஆனால், அதே சமயம் சரியான பதில் விளக்கமாகக் கிடைக்குமானால் சமாதானமடைந்து சாதுவாக நடந்து கொள்வான். தவறான விளக்கத்தையோ குழப்படியான பதில்களையோ அந்தக் குழந்தையிடம் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. அவனுக்கு எது உண்மை, எது பொய் என்று தெரியும். காரணம் அவன் அதி புத்திசாலியாக விளங்கும்படி அந்தக் குடுகுடு கிழவரான முனிவர் ஆசீர்வதித்துப் போனாரில்லையா? ரொம்பவும் பெரியவர் அவர். தவவலிமை மிக்கவர். அவர் ஆசீர்வதித்தால் அப்படியே நடக்கும். நடந்து கொண்டு வந்தது.

கீர்த்திவர்மன் எல்லோரையும் விட அறிவாளியாக விளங்கினான். இது பலருக்குச் சங்கடமாகவும் இருந்தது. மந்தஹாச மகாராஜாவே கூட முகம் சுளித்தார், தம் மகனுடைய அறிவாற்றலைக் கண்டு அதிகப்பிரசங்கித்தனம் என்று அதற்கு விளக்கமும் கொடுத்தார். இளவரசனுக்கு எட்டு வயதான போது, "அப்பா! அரசர்கள் அரண்மனையிலும் ஏழைகள் குடிசையிலும் வசிப்பானேன்?" என்று கேட்டான். இப்படி வினா எழுப்பும் மகனை எந்த ராஜாதான் விரும்புவார்? அவன் கேட்டதோ எத்தனையோ நூற்றாண்டுகளாக யாராலும் விளக்க முடியாத ஒரு வினா, மந்தஹாசருக்கா விடை தெரியப் போகிறது.

அறுசுவை உண்டிகளும் விதம் விதமான பட்சணங்களும் பானங்களும் பழவகைகளும் வேண்டும் மந்தஹாசருக்கு. உணவு வேளையின் போது ரொம்பவும் உற்சாகமாக இருப்பார் மன்னர். சாப்பாட்டுப்பிரியர், ரசித்து உண்பார். ஒரு நாள் கீர்த்தி கேட்டான், "இத்தனை வகை வகையான உணவுகளைச் சாப்பிடுபவர்கள்தான் மன்னர்களா?

முழுவயிற்றுக்கு ஒரு வேளை உணவு கிடைக்க்காதவர்கள்தான் மக்களா?"

இப்படியெல்லாம் குத்தலான கேள்விகளைக் கேட்கும் மகனிடம் கோபமும் அதிர்ச்சியும் அடைந்தார் மன்னர். இளவரசனின் காதுகளைப் பிடித்துத் திருகிக் கொண்டே, "இப்படியெல்லாம் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசாதே, தெரிந்ததா? ரொம்பவும் புத்திசாலியாக இருப்பதும் ஆபத்துதான் புரிஞ்சுக்கோ?" என்றார். தம் மகன் இப்படிப் புரட்சிகரமான அதிபுத்திசாலியாக இருப்பது அந்தக் குடுகுடு கிழவரான முனிவரின் ஆசீர்வாதத்தினால் என்பதையும் உணர்ந்தார். முனிவர்களையும் யோகிகளையும் சித்தர்களையும் ரத்னாவதி வெறுத்து ஒதுக்கியதனால் வந்த வினை இது. முறையாக அவர்களை அழைத்து மரியாதை செய்திருந்தால் எல்லாமே நல்லபடியாக இருந்திருக்கும். அவர்களாக வந்து ஆசி வழங்கிவிட்டுப் போயிருப்பதால் கீர்த்திக்குக் குதர்க்கமான எண்ணங்களும் எழுச்சிகளும் ஏற்பட்டிருப்பதைப் போல் இன்னும்

என்னென்ன குளறுபடிகளெல்லாம் நடக்குமோ என்று கவலைப்படலானார் மன்னர்.

கீர்த்திவர்மன் சிவந்து விட்ட தன் காதுகளைத் தடவிக் கொண்டே, "என்னுடைய கேள்விகளுக்கு நீங்கள் உங்கள் பலாத்காரத்தினால் விடையளிக்கக் கூடாது அப்பா!" என்றானே பார்க்கலாம்.

அரண்மனைக்குள் மட்டும் அல்லாமல் நாட்டு நிர்வாகத்திலுள்ளோரிடமும் நாட்டு மக்களிடமும் கூட கீர்த்தி சகஜமாகப் பழகலானான். அதனால் அவர்களுடைய அன்பைப் பெறுவதற்குப் பதிலாக வெறுப்பைத்தான் சம்பாதித்துக் கொண்டான். அரண்மனை மடைப்பள்ளிக்குப் போவான். தலைமைச் சமையற்காரர் இளவரசனைக் கண்டதும் ஓடோடி வந்து வரவேற்பார். கீர்த்தி அன்றைய தயாரிப்புகளைப் பற்றிக் கேட்பான். அவர் சொல்லுவார். அவன் உடனே இன்னின்ன சாமான்களைக் கொண்டு இப்படி ஓர் உணவு வகை செய்யலாமே என்று விளக்குவான். அதுமட்டுமல்ல தானே கரண்டி பிடித்து

அடுப்படியில் அமர்ந்து அதை செய்து கொடுத்து விட்டுத்தான் நகருவான். பிரதம சமையல்காரருக்கு எப்படி இருக்கும்? வெளியிலே சிரித்துக் கொண்டிருந்தாலும் உள்ளுக்குள் 'இந்தச்சின்னப் பயல் நமக்குத் தயாரிப்பு முறை கற்றுத் தருவதாவது?' என்று கர்வத்துடன் கறுவுவார். ஆனால் இளவரசன் செய்து கொடுத்த பதார்த்தம் உண்மையிலேயே அருமையான சுவையோடு கூடியதாக இருக்கும். அதையும் அவர் மனதுக்குள் பாராட்டுவார். ஆனால் அதையும் மீறி 'இந்தச் சின்னப்பயல்' என்ற சினம்தான் மேலோங்கும்.

கத்திச்சண்டை பழக்கித் தருபவர், மற்போர் வீரர், குதிரையேற்றம் சொல்லிக் கொடுப்பவர் எல்லோருக்குமே கீர்த்திவர்மன் புதிய புதிய முறைகளையும் உத்திகளையும் கற்றுக் கொடுத்து அவர்கள் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டான். அவன் அதைச் செய்தாலும் அது எவ்விதக் குறையும் இல்லாதபடிக்கு இருக்கும். பாராட்டப்பட வேண்டியதற்குப் பதில்

'இவன் என்ன நமக்குக் கற்றுத் தருவது?' என்ற எண்ணத்தில் கீர்த்தியிடம் பகைமையே கொண்டார்கள்.

கல்வி கற்றுத் தரும் ராஜகுருவுக்குப் பல பாடங்களில் அவரே வியக்கும்படி விளக்கம் தரலானான். அவனது அபாரமான வாதத்திறமையையும் நுண்ணறிவையும் விசாலமான புத்தியையும் கண்டவர்கள் மனதுக்குள் வியந்தார்கள். அதே சமயம் வெறுக்கவும் செய்தார்கள். வெறுப்பின் காரணம், அவன் இத்தனை சின்ன வயதில் இப்படி எல்லாரையும் விழுங்கும் வகையில் வல்லவனாக இருக்கிறானே என்ற பொறாமைதான்.

நாட்டு மக்களுடன் அவர்களுள் ஒருவனாகப் பழகுவான் கீர்த்தி. அவர்களுடைய உழைப்புக்குக் கை கொடுப்பான். உதவிகள் செய்வான். இதனால் நாட்டு மக்களின் நல்லபிமானத்தைப் பெற்றான். இது மன்னருக்கும் மற்றவர்களுக்கும் பிடிக்கவில்லை. அவனைக் கண்டிக்கவும் முடியவில்லை. சராசரியான ஓர் இளவரசனைப் போலிருந்தால் அவனைக் கண்டிக்கலாம். ஆனால் கீர்த்திவர்மனோ

எல்லோரையும் விடப் புத்திசாலியாக இருந்ததினால் யாருக்குமே அவனுடன் வாதாடத் தைரியம் இல்லை. மற்றவர்களுக்குத் தெரிந்திருப்பதை விட எல்லா விஷயங்களுமே அவனுக்கு அதிகமாகத் தெரிந்திருந்தன. அவன் செயல்கள் எதுவுமே தவறான முடிவுகளைத் தருவதில்லை. அவன் கூறியபடி செய்யாத காரியங்கள் குழப்பத்திலும் தோல்வியிலுமே முடியும். அப்போது அவன், "நான் அப்போதே சொன்னேனே கேட்டீர்களா?" என்று கெக்கலி கொட்டிச் சிரிப்பான்.

வருடங்கள் உருண்டன. விசித்திரபுரியின் வாரிசுக்காகவும் கொஞ்சி மகிழ ஒரு குழந்தைக்காகவும் ஏங்கிய மந்தஹாச மகாராஜாவுக்குக் கீர்த்திவர்மனுக்குப் பிறகு அடுத்தடுத்து இன்னும் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். இரண்டாமவனுக்கு இன்பவண்ணன் என்றும் மூன்றாமவனுக்கு மோகனரங்கன் என்றும் பெயரிட்டார்கள். கீர்த்திவர்மனின் சகோதரர்களை எல்லோரும் விரும்பினார்கள். ஏனென்னால் அவ்விருவரும் எல்லோரையும் போலச் சராசரி மனிதர்களாக

விளங்கினார்கள். அவர்கள் அதிபுத்திசாலிகளல்ல. இன்பவண்ணன் கொழுகொழு என்று வளர்ந்திருந்தான். நல்ல அழகனும் கூட. ஆனால் அத்தனை புத்திசாலி என்று கூற முடியாது. மோகன் வாட்டசாட்டமாக இருந்தான். வாட்போரிலே வல்லவன்தான். ஆனால் சொற்போரிலே தோற்றுப் போவான் அண்ணா கீர்த்திவர்மனிடம்.

கீர்த்திவர்மனுக்கு உற்ற தோழர்களும் யாரும் கிடையாது. அவனுடன் நட்புக் கொள்ள யார் வந்தாலும் உடனே அவனுக்கே உரிய புத்திசாலித்தனம் தலைதூக்கும். 'வேதம், சாஸ்திரம் கலை ஞானம் ஆகியவற்றில் உனக்கு அது தெரியுமா, இது தெரியுமா?' என்று குடைவான். அதற்குப் பயந்தே யாரும் அவன் நட்பை நாடுவதில்லை.

மந்தஹாச மகாராஜாவின் சகோதரிக்கு ஒரு மகளும் ராணி ரத்தினாவதியின் சகோதரருக்கு ஒரு மகளும் இருந்தார்கள். அந்த இரண்டு இளவரசிகளும் விசித்திரபுரி அரண்மனையிலேயே வளர்ந்து வந்தார்கள். வனப்புமிக்க

அவ்விருவரையும் கீர்த்திவர்மனின் தம்பிகளான இன்பவண்ணனும் மோகனரங்கனும் காதலித்து வந்தார்கள். எவ்வளவு அழகான ஜோடிகள்என்று இவர்களைப் பார்த்தவர்கள் மனநிறைவோடு பேசிக் கொள்வார்கள். ஆனால் பாவம், பட்டத்து இளவரசனான கீர்த்திவர்மனைக் காதலிக்கு எந்த ராஜகுமாரியுமே இல்லை. அதற்காக அவன் கவலைப்படவும் இல்லை. எல்லோராலும் வெறுக்கப்பட்ட கீர்த்திவர்மனுடைய அளவுக்கு மீறிய ஆற்றலினால். அண்டை அயல்நாடுகளுடன் நிலவி வந்த நேசபாவம் குலைந்தது. போரையே விரும்பாதவர் மந்தஹாசர். கீர்த்திவர்மனுடைய குணத்தினால் சில போர்களை நடத்த வேண்டியிருந்தது. கீர்த்திவர்மன் தன் வீரத்தினால் அப்போர்களில் வெற்றி தேடித் தந்தாலும் போரை விரும்பாத விசித்திரபுரி மக்கள் போருக்குக் காரணமான கீர்த்திவர்மனை வெறுக்கலானார்கள். இப்படி எல்லோருக்குமே ஒரு பிரச்சனையாகி இருந்தான் இளவரசன் கீர்த்திவர்மன்.

# அத்தியாயம் - 3

மந்தஹாச மகாராஜா அரண்மனைப் பொக்கிஷ அறையிலே நிதி அமைச்சர் நீட்டி கணக்குகளைச் சரிபார்த்துக் கொண்டிருந்தார். அறையின் ஒரு பகுதியிலே குவிக்கப்பட்டிருந்த நவரத்தினங்களின் அழகை ரசிப்பதில் ஈடுபட்டிருந்தான் விசித்திரபுரியின் வருங்கால மன்னராகப் போகும் இளவரசன் கீர்த்திவர்மன். அவனுக்கு இப்போது பதினாறு வயதுக்கு மேலாகி விட்டது. மரகதக்கல்லையும் நீலக்கல்லையும் நெருப்பாய் ஜ்வலிக்கும் சிவப்பு ரத்தினக் கல்லையும் வெண்மை ஒளி வீசும் வைரத்தையும் மாற்றி மாற்றி அமைத்து அவை ஜ்வலித்து சிரிக்கும் அழகைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான் கீர்த்தி.

மன்னரோ கடந்த மாதம் கப்பமாக வந்த பணத்தைக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார். "மத்தளபுரியிலிருந்து முப்பத்திநாலாயிரம். வேங்கிநாட்டிலிருந்து எண்பத்தி இரண்டாயிரம். அரசங்காட்டிலிருந்து அறுபத்தி மூவாயிரத்து முந்நூறு. நாச்சியார் பட்டியிலிருந்து

நாலாயிரத்து எழுநூறு. மொத்தம் மூன்றும் எட்டும் பதினொன்று, பதினொன்றும் ஆறும்..." என்று விரல்களை மடக்கி நீட்டிக் கூட்டலானார் மந்தஹாசர். அவர் ரொம்பப் புத்திசாலி இல்லை. மந்தபுத்திக் காரர். கணக்கு என்றாலே கடுகடுப்பார். ஆனால் கஜானா விவகாரத்துக்குக் கணக்கில்லாமல் முடியுமா?

கீர்த்தி நவரத்தினங்களோடு விளையாடிக் கொண்டிருந்தாலும் தகப்பனார் வாய் விட்டுக் கூறிய தொகைகளை அவன் காதுகள் கேட்டுக் கொண்டுதான் இருந்தன. அத்தனை சின்னத் தொகையைக் கூட்டுவதற்கு விரல் விடும் அப்பாவை நினைத்துச் சிரிப்பாக வந்தது அதிபுத்திசாலியான கீர்த்திக்கு. "மொத்தம் ஒரு லட்சத்து எண்பத்திநாலாயிரம் அப்பா. சரியாக இருக்கிறதா என்று நிதியமைச்சரை எண்ணிப்பார்க்கச் சொல்லுங்கள்" என்றான் பளிச்சென்று. மகாராஜா பொட்டில் அடிபட்டவரைப் போலப் பொறி கலங்கிப் போனார். விரல் விட்டுக் கூட்டியே விடை வரவில்லை அவருக்கு. 'காதால் கேட்டே கச்சிதமாகச் சொல்லி விட்டானே' என்று கலங்கினார். தம் மகனின் புத்திசாலித்தனத்தை நினைத்து வெறுப்படைந்திருந்தவருக்கு இப்போது ஒருவிதப் பயமும் சேர்ந்து கொண்டது. 'இவன் நம்மைப் பதவியிலிருந்து விலக்கி விட்டுத் தானே

நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றிக் கொள்ளுவானோ?" என்ற நடுக்கம் ஏற்பட்டது.

தமக்குப் பிறகு இந்த நாட்டின் ஆட்சியை இரண்டாவது மகன் இன்பவண்ணனிடமோ மூன்றாவது மகன் மோகனரங்கனிடமோதான் ஒப்படைக்க வேண்டும் என்ற விபரீதமான முடிவுக்கு வந்தார் விசித்திரபுரி மன்னர். கீர்த்தியை வாரிசுப்போட்டியிலிருந்து எப்படி விலக்கலாம் என்பதைப் பற்றியே நாளெல்லாம் சிந்திக்கலானார். அவரது மூதாதையர்களின் சரித்திரங்களை எல்லாம் படித்தார். பட்டத்து இளவரசனுக்குப் பட்டம் கிடைக்காமல் செய்ய ஏதாவது வழி வகைகள் கிடைக்காதா என்ற ஆவலில், அவர் ஏராளமான நூல்களைப் படிக்கலானார். அவர் படித்த அத்தனை கதைகளிலும் ஓர் அரசருக்கு மூன்று குமாரர்கள் இருந்தால் அதில் கடைசிப் பிள்ளைதான் புத்திசாலியாகவும் காரியங்களைச் சாதித்து வரும் திறமை மிக்கவனாகவும் இருந்தான். அது அவர் மனதுக்கு இதமாகவும் இருந்தது. ஏதாவும சாகஸம் புரியக் கிளம்பும் அரசகுமாரர்களில் மூத்தவர்கள். அதில் ஏமாந்தோ அல்லது தங்கள் இன்னுயிரை இழந்தோ போனார்கள். கடைசி இளவரசன்தான் வெற்றியோடு திரும்பி முடி சூட்டிக் கொண்டான். அதன்படிப் பார்த்தால் கீர்த்தியைச் சுலபமாக

ஒழித்து விடலாம். ஆனால் ஒரு காரணமும் இல்லாமல் இன்பவண்ணனையுமல்லவா இழக்க வேண்டும்? இது மந்தஹாசருக்கு கொஞ்சம் மனவருத்தமாக இருந்தாலும் கீர்த்திக்கு எதுவும் கிடைக்காமல் செய்ய அந்த இழப்பை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

விசித்திரபுரியிலே அந்த ஆண்டு எந்த ஆண்டுமில்லாதபிட கோடை மிகக் கடுமையாக இருந்தது. மாசி மாதமே அக்கினியாகக் காய்ந்தது வெய்யில். குளம், குட்டை, கிணறு, ஏரி, ஆறு எல்லாம் வறண்டு போயின. புல்லெல்லாம் கருகியது. கல்லெல்லாம் உருகும்படியான கானல். மரங்களெல்லாம் பசுமை இழந்து பரிதாபமாக நின்றன. நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடலாயிற்று. மக்கள் வெப்பம் தாள முடியாமல் வேதனையோடு அரண்மனையைச் சூழ்ந்து கொண்டு கூச்சலிட்டார்கள்.

மன்னர் மந்தஹாசர் நாட்டில் ஏற்பட்ட இந்த விபரீதத்துக்கு என்ன காரணம் என்று அறிவாளிகளையும் சோதிடவல்லுநர்களையும் அழைத்து விசாரித்தார். எல்லோரும் ஒரே விதமாக நாட்டின் வடக்கு எல்லையிலே ஒரு பயங்கரமான நெருப்பு மிருகம் தோன்றியிருப்பதாகவும் அதனால்தான் நாட்டிலே இத்தனை வெப்பமும்

வேதனையும் பஞ்சமும் என்று கூறினார்கள். பல நூல்களின் ஆதாரப்படி எந்த மிருகத்தின் தோற்றம் எப்படி இருக்கும் என்றும் அவர்கள் விவரித்தார்கள். ஒரு பெரிய யானையைப் போன்ற ஆகிருதியும் உடல் இரும்பினால் ஆனதாகவும் எப்போதும் பழுக்கக் காய்ச்சிய பாத்திரத்தைப் போல் தகதகவென்று தணலைப் போலவும் இருக்கும். அக்கினி அரக்கன் என்ற அந்த மிருகம் பார்வைக்குப் பறவையைப் போலவும் இருக்கும். அதன் பயங்கரத்தையும் பலத்தையும் கற்பனை செய்ய முடியாது. அதன் அருகில் யாராலுமே போக முடியாது. போனவர்கள் பிடிசாம்பலாகக் கருகிப் போவார்கள்.

இப்படியொரு கொடிய மிருகம் இருப்பதை அறிந்து மன்னர் மந்தஹாசர் மகிழ்ச்சியடைந்தார். தம் பிள்ளைகளை எந்த விதமான சாகஸச் செயல் செய்ய அனுப்பலாம் என்று காத்திருந்தவரல்லவா அவர்? நாட்டின் எல்லையிலே அக்கினி அரக்கன் தோன்றியிருப்பதை ஒரு நல்ல சூசகமாகக் கருதினார். 'அந்தக் கொடிய மிருகத்தைக் கொன்று வரும்படி என் புதல்வர்களை அனுப்புவேன் முதலில் மூத்த மகன் போவான். வழக்கப்படி அவன் அந்த அரக்கனால் அழிந்து போவான். பிறகு இரண்டாமவன் போவான். அவனுக்கும் அதே கதி. அதை நினைக்கையில் மந்தஹாசரின் கண்கள் கலங்கின. இரண்டாவது

மகன் இன்பவண்ணனைக் காரணமின்றி அதற்குக் காவு தர வேண்டியிருக்கிறதே என்று. கடைசியில் மூன்றாவது இளவரசனான மோகனரங்கன் அதைக் கொன்று வருவான். எப்படியோ கீர்த்திவர்மன் ஒழிந்தால் சரி' இப்படி ஓடிற்று மந்தஹாசரின் எண்ணங்கள். பிறக்கமாட்டானா என்று பரிதவித்துப் பெற்ற ஒரு மைந்தனிடம் அரசருக்கு ஏன் இத்தனை வெறுப்பு, விரோதம்? அவன் எல்லோரையும் போல் இல்லாமல் அதிபுத்திசாலியாக இருந்ததுதான்!

மன்னர் கீர்த்திவர்மனைக் கூப்பிட்டனுப்பினார். அவன் வந்து வணங்கி நின்றான். அவனிடம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அபாயத்தை விளக்கினார். அந்த மிருகத்தைக் கொன்று அதன் கொம்புகளையும் (அதற்குக் கொம்பிருந்தது) வாலையும் கொண்டு வருபவர்களுக்கு விசித்திரபுரியின் முடிசூட்டப்படும் என்றார்.

'அறிவாளிகளின் கூற்றுப்படி அது கொடிய மிருகம்தான். அதனாலென்ன? மூத்த இளவரசனான நீ உன் கவசங்களை அணிந்து கொள். ஆயுதங்களை எடுத்துக் கொள். அந்தக் கொடிய மிருகத்தைக் கொன்று விட்டு வா. சாகஸம் புரிய இது உனக்கு ஒரு சந்தர்ப்பம். உடனே கிளம்பு?" என்றார் மன்னர்.

தகப்பனார் பேசி முடித்ததும், "அப்பா நீங்கள் குறிப்பிட்டபடி எந்த விடமான மிருகமும் கிடையாது. நாட்டில் மழை பொய்த்துப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதற்குப் பருவ நிலைக் கோளாறுதான் காரணம். அப்படியா நீங்கள் கூறுவது போல் அக்கினி அரக்கன் என்று ஒரு கொடிய மிருகம் இருக்குமானால் அதை அழிக்க மூத்தவனான என்னை அனுப்பிப் பிரயோசனமில்லை. இம்மாதிரிக் காரியங்களுக்கு முதலில் மூத்த மகன் போவதும் அவன் தோல்வியைச் சந்திப்பதும் சகஜமாயிற்றே. மூன்றாவது மகன்தான் இத்தகைய சாகஸங்களில் வெற்றி பெறுவது வழக்கம். ஆகவே தம்பி மோகனரங்கனை அனுப்புங்கள். அந்த மிருகத்தைக் கொல்லும் தந்திரம் அவனுக்குத்தான் தெரிந்திருக்க முடியும். அவனால் முடியாவிட்டால் -- அப்படி நடப்பது அபூர்வம் -- அடுத்து இன்பவண்ணனுக்கு வாய்ப்பளியுங்கள்" என்று கூறித் தனது கணித ஆராய்ச்சியில் மூழ்கி விட்டான் கீர்த்தி.

மந்தஹாச மகாராஜா வேறு வழியின்றுத் தமது இளைய குமாரர்களை வரவழைத்தார். முகத்தில் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டே வந்தார்கள் இன்பவண்ணனும் மோகனரங்கனும். நாட்டின் கொடிய வெப்பத்தை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை, பாவம்!

"உங்கள் அண்ணன் கீர்த்தியைப் பாருங்கள். எந்த வெய்யிலையும் கானலையும் அவன் லட்சியம் செய்வதேயில்லை. எதையும் இலேசாக எடுத்துக் கொண்டு விடுகிறான். நம் நாடு அக்கினி அரக்கனுடைய கொடுமைக்குள்ளாகியிருக்கிறது. நம் நாட்டின் எல்லையில் உள்ள குகையில் அது குடியிருப்பதினால்தான் இத்தனை வெப்பமும் வேதனையும். அதை அழிப்பது நாட்டை ஆளும் மன்னரின் பொறுப்பு. மன்னரின் மகன்களாகிய நீங்கள்தான் அதை அழிக்கக் கடமைப் பட்டவர்கள். ஆனால் உங்கள் அண்ணன் கீர்த்தி சொல்லுகிறான்..."

"இம்மாதிரி அசட்டுத்தனமான கற்பனையகிலெல்லாம் அவனுக்கு நம்பிக்கை இல்லை என்று. தவிர வேட்டையாடப் போவதற்கு ஏற்ற பருவ நிலையும் இதுவல்ல" என்று தகப்பனாரின் பேச்சை முடித்தான் கீர்த்தி.

"அக்கினி அரக்கம் என்றபது அசட்டுத்தனமான கற்பனையா? யார் சொன்னார்கள்?" என்று கர்ஜித்தான் மோகனரங்கன் -- மூன்றாவது இளவரசன். "உனக்கு எதில்தான் நம்பிக்கை? யாரையுமே நம்பாதவனாயிற்றை நீ" என்றவன், "யாரங்கே கொண்டு வாருங்கள் உடனே என்னுடைய இரும்புக் கவசத்தையும் ஈட்டியையும்

உடைவாளையும். ஜேய் ஜக்கம்மா... பொம்மக்கா!" என்று வீர முழக்கமிட்டான்.

இளவரசனுடைய ஆணைப்படி அவனுடைய இரும்புக் கவசத்தையும் முகமூடியையும் உடைவாளையும் எடுத்து ஏவலாள் அதன் சூடு தாங்காமல் -- கனம் தாங்காமலல்ல! -- பொத்தென்று கீழே போட்டு விட்டு விரல்களை வாயில் வைத்து "உஸ் அப்பாடி!" என்று கைகளை உதறிக் கொண்டான். அந்தக் கவசங்களும் உடைவாளுமே அத்தனை சூடாக இருந்தன என்றால் நாட்டில் உஷ்ணம் எப்படி இருந்திருக்கும் என்று ஊகித்துக் கொள்ளுங்கள்.

"தம்பி, இம்மாதிரிக் காரியங்களுக்கெல்லாம் கொஞ்சம் முன் யோசனை வேண்டுன். நானாக இருந்தால் அக்கினி அரக்கனைக் குளிப்பாட்டிக் குளிரப் பண்ண வண்டி வண்டியாகப் பீப்பாய்களில் குளிர்ந்த நீரை நிரப்பிப் போவேனாக்கும்." என்றான் கீர்த்தி. ஆனால் கடைசி இளவரசன் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. 'கிளம்பும்போதே கவசமும் உடைவாளும் கை நழுவி விழுகின்றனவே, சகுனம் சரியில்லையே' என்றெல்லாம் மோகனரங்கள் குழம்பிக் கொள்ளவில்லை. தன் குதிரை மீது தாவி ஏறினான், 'ஜெய்! ஜக்கம்மா, ஜெய் பொம்மக்கா!' என்று முழங்கினான். உப்பரிகையிலே கண்களில்

நீர் பளபளக்க நின்று கொண்டிருந்த அத்தை மகளைப் பார்த்துக் கையசைத்து விடை கேட்டான். அடுத்த வினாடி அக்கினி அரக்கனைத் தாக்கி அழிக்கத் தன் குதிரையை விரட்டிக் கொண்டு சென்றான்.

சென்றவன் சென்றவன்தான். திரும்பவேயில்லை. மாதங்கள் பலவாயின. நாட்டில் உஷ்ணம் தணியவில்லை. பஞ்சம் கொஞ்சமும் குறையவில்லை.

இளவரசன் திரும்பி வராததை நினைத்து எல்லோரும் வருந்தினார்கள். கீர்த்திவர்மனைத் தவிர. அவன் சொன்னார் "உலகத்தைச் சுற்றிப் பார்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது மோகனரங்கனுக்கு. அதை நழுவ விடுவானா? தேச சஞ்சாரம் செய்து கொண்டிருப்பான். அக்கனி அரக்கன் - அப்படி ஒன்று இருக்குமானால் அதன் அருகே கூடப் போக மாட்டான் அவன். கவலைப்படாதீர்கள்." ஆனால் இப்படி உண்மையைச் சொன்ன கீர்த்திவர்மனிடம் எல்லாருக்கு வெறுப்புத்தான் வளர்ந்தது. ஒரு விசித்திரமான பிறவியைப் பார்ப்பது போல் அவனை முறைத்து பார்த்து முணுமுணுத்தார்கள்.

# அத்தியாயம் - 4

அக்கினி அரக்கனை வென்று வருவதாகக் கூறிச் சென்ற விசித்திரபுரியின் மூன்றாவது இளவரசன் மோகனரங்கன் மூன்று மாதங்களாகியும் திரும்பி வரவில்லை. அவனைப்பற்றிய தகவலும் தெரியவில்லை. மன்னர் மந்தஹாசரின் செல்லப்பிள்ளை அவன். அவன் மறைவு அவரை வெகுவாகப் பாதித்திருந்தது. அழுது அழுது அவர் முகம் வீங்கிப் போயிற்று. முன்பே பருத்த முகம், இப்போது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"ஏதோ எங்கேயோ தவறு ஏற்பட்டிருக்கிறது" என்றான் பட்டத்து இளவரசன் கீர்த்தி. அப்பாவின் அழுகை அவனால் சகிக்க முடியாததாக இருந்தது.அ வரைச் சமாதானப்படுத்தா விட்டால் சிவந்த அவருடைய மூக்கு இன்னும் பழுத்து வெடித்துப் போகுமோ என்று நினைத்தபோது சிரிப்புத்தான் வந்தது கீர்த்திக்கு. ஆனால் சிரிக்க அது சமயமல்ல என்று, "வழி வழியாக வந்துள்ள வரலாற்றுச் செய்திகளின் படியும், நம் முன்னோர்கள் மூதாதையர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை

ஒப்பு நோக்கும் போதும் எப்போதுமே கடைசி இளவரசன்தான் இத்தகைய வீரச் செயல்களில் வெற்றி வீரனாக வாகை சூடியாக வருவது வழக்கம். ஆனால் இந்த முறை இன்று இங்கு ஏனோ பொய்த்து விட்டது. போனால் போகட்டும். என் தம்பி இன்பவண்ணன் எப்படியும் வெற்றியோடு வருவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அவனை அனுப்பி வையுங்கள். அக்கினி அரக்கனை அழித்து வர" என்றான் கீர்த்திவர்மன்.

மூக்கைச் சிந்திக் கண்களைத் துடைத்துக் கொண்டு இன்பவண்ணனை அழைத்து வரும்படி ஆணையிட்டார் மந்தஹாச மகாராஜா. இரண்டாவது இளவரசனான இன்பவண்ணனும் வந்தான். மோகனரங்களைப் போல தன் வீரத்தைத் தம்பட்டம் அடித்துக் கொள்ளக் கூடியவன் அல்ல இவன். கொஞ்சம் பயந்த சுபாவம் உடையவன். அலங்கார புருஷன்.

"இன்பவண்ணா, என் மகனே!" என்றார் மந்தஹாசர். அதற்கு மேல் பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "கடமை உன்னை அழைக்கிறது. வெற்றித் தேவதை உனக்கு மாலை சூட்டி மகிழ்விக்கக் காத்திருக்கிறது." கீர்த்தியின் பேச்சுக்களைக் கேட்டுக் கேட்டு

மந்தஹாசருக்கும் ராயசமாகப் பேச வந்து விட்டது. "அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் வெட்டிக் கொண்டு வரும் உன்னைக் கட்டித் தழுவிக் கொள்ளக் காத்திருக்கிறேன் இங்கே. வெற்றியோடு திரும்பும் உனக்கே இந்நாட்டின் மணிமுடி. உன் அண்ணன் கீர்த்தியை கல்விச் சாலையின் தலைவனாக்குவேன். அவனுக்கு ஏற்ற இடம் அதுதான். என் அருமை மகனே சென்று வா, வென்று வா!" என்றார்.

தந்தையின் விருப்பம், நாட்டு மன்னரின் ஆணையை மறுக்க முடியுமா? மூன்று மாதங்களுக்கு முன்பு போன தம்பி திரும்பாதது அவன் நெஞ்சை என்னவோ செய்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

ஆனாலும் என்ன? அக்கினி அரக்கனைச் சந்திக்கப் போவதை ஒத்திப் போட முடியுமா? மறுநாள் தன் குதிரையின் மீதேறிக் கிளம்பினான் - ஈட்டி, வாள், கேடயம், இரும்புக் கவசம் இத்தனையுடனும்தான். ஆனால் அவ்வளவுதான்! அவனும் திரும்பி வரவில்லை. அந்த அரக்க மிருகம் அழிக்கப்படவும் இல்லை.

மாதங்கள் பல சென்றன. மன்னரின் கண்ணீரும் கதறலும் ஒரு வழியாக அடங்கிய பிறகு ஒருநாள் கீர்த்தியிடம் வந்தார். 'மூத்தவனே! முதலில் போயிருக்க வேண்டியவனே! கடைசியில் நீயும் போக வேண்டிய வேளை வந்து விட்டது. அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும் உன் வாளினால்தான் வெட்டப்பட வேண்டுமென்று இருக்கிறதோ என்னவோ! இந்த நாட்டின் அரியணை உன்னுடையதாகலாம். ஆனால் என்னுடைய இன்பவண்ணனையும் மோகனரங்கனையும் இனி யார் எனக்குக் கொடுக்க முடியும்?" என்றவர் கண்களைத் துடைத்துக் கொண்டார். அவர் தொண்டை கம்மியது.

"அப்பா உங்கள் உணர்ச்சிகளை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இனியாவது உங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்" என்றான் கீர்த்தி. மன்னர் மௌனமாக அவனைத் தம் பார்வையால் குத்தினார். அவன் தொடர்ந்தான். "பயங்கரமானதும் கொடியதுமான அந்த மிருகத்தைக் கொல்லுவதற்காக உங்கள் பிள்ளைகளை அனுப்பினீர்களே, எதற்காக? உங்களுக்குப் பிறகு - உங்கள் மரணம் சமீபத்தில் ஏற்படக் கூடாதென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன! இந்த நாட்டை ஆளும் தகுதி யாருக்கு என்பதை முடிவு கட்டுவதற்காகத்தானே? இன்றைய நிலையில், 'தகுதி யாருக்கு?'

என்று வினாவே அவசியமற்றதாகி விட்டது. உங்களால் வெறுக்கப்படும் நான் ஒருவனே இன்று இந்த நாட்டின் ஒரே வாரிசு. ஆகவே என்னையும் அந்தக் கொடிய அக்கினி அரக்கனைக் கொன்று வரும்படி அனுப்புவது தேவையில்லாததும் தவிர்க்கப்பட வேண்டியதுமாகும். நீங்கள் பூரணமாக நம்புவது போல் அந்த மிருகம் என் தம்பிகளைக்கு அளித்த முடிவையே எனக்கும் அளிக்குமானால் விசித்திரபுரியின் சிங்காதனம் அதில் உட்காருவதற்கான தகுதி படைத்தவர் இல்லாம்ல வெறிச்சோடிக் கிடக்குமே! நான் அந்த மிருகத்தைக் கொன்று திரும்பினால்தானா எனக்கு இந்நாட்டை ஆளும் உரிமை கிடைக்கும். அது இல்லாமலேயே அந்த உரிமைக்குரியவனாக இப்போது நான் ஒருவன்தானே இருக்கிறேன்? என்னையும் இழக்க விரும்புகிறீர்களா என்பதை நாட்டிலுள்ள நல்லோர் பெரியோரைக் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வாருங்கள்" என்றான் இளவரசன்.

நியாயமான இந்த வாதத்துக்கு மந்தஹாசரால் பதில் கூற முடியவில்லை. மௌனமாகத் தம் அரண்மனைக்குத் திரும்பினார் மன்னர். தனிமையில் அமர்ந்து சிந்திக்க வேண்டும் போல் இருந்தது அவருக்கு. கீர்த்திக்கும் ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன.

விசித்திரபுரி அரண்மனை களை இழந்து, கலகலப்புக் குன்றி, மகிழ்ச்சி மறைந்து காணப்பட்டது. எல்லோருடைய முகங்களிலும் சோகம் கப்பிக் கிடந்தது. இளவரசர்கள் இருவரை இழந்த வேதனை மன்னருக்கு மற்றவர்களுக்கும், அதே சமயத்தில் கீர்த்திவர்மன் அக்கினி அரக்கன் விஷயத்தில் தப்பித்துக் கொண்டதும் அவர்கள் மனத்தைப் பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது. அவனோடு வாதிட்டு வழிக்குக் கொண்டு வர யாராலும் முடியவில்லை. ராணி ரத்னாவதி மட்டும்தான் கீர்த்தியின் பக்கம். ஏனென்றால் அவளுக்கும் இந்த மந்திரம் தந்திரம் இவைகளில் நம்பிக்கை கிடையாது. அக்கினி அரக்கன் என்று ஒன்று இருப்பதை அவள் நம்ப மறுத்தாள். அம்மாவைத் தவிர அத்தனை பேரும் அவனுக்கு எதிரிகளானார்கள். அவனைக் கோழை, வீரம் இல்லாதவன், பயங்கொள்ளி என்றெல்லாம் ஏசினார்கள். அந்த ஏச்சுப் பேச்சுக்களை அறிவாளியான கீர்த்தி கொஞ்சமும் இலட்சியமே செய்யவில்லை.

ஆனால்... அறிவை வளர்க்கும் கீர்த்தி தன்னுடைய ஆராய்ச்சிகளுக்கு அப்பால், எல்லோரையும் போல் உல்லாசமாகப் பொழுது போக்க விரும்பும் போது அத்தை மகள் கனகாவையும், மாமன் மகள் மஞ்சுளாவையும்தான் நாடிப் போவான். விளையாட்டாக

அவர்களுடன் ஏதாவது பேசிச் சிரித்துக் கொண்டிருப்பான். அப்போது அவர்களும் இவனைக் கண்டதும் முகத்தைத் தூக்கிக் கொண்டு வேகமாகப் போனார்கள்.

அன்று மஞ்சுளாவும் கனகாவும் உத்தியானவனத்தில் மான் குட்டிக்குப் பசும்புல்லை ஊட்டிக் கொண்டிருந்தார்கள். ஏதோ காரணமாக அந்தப் பக்கம் வந்த கீர்த்தி அவர்களைச் சந்தித்தான்.

"மஞ்சு...! நீங்கள் கூட என்னிடம் பேசாதபடி நான் உங்கள் இருவருக்கும் என்ன தீங்கு செய்தேன்?" என்று கேட்டான்.

கண்கள் பளபளக்கத் திரும்பியவள் "என் பெயர் மஞ்சு இல்லை மஞ்சுளா! உங்கள் தம்பிகளைப் பரலோகத்துக்கு அனுப்பி விட்டுப் பரம சந்தோஷமாக இருக்கிறீர்கள் இல்லையா?" என்றாள்.

"அதனால்தான் உங்களுக்கு என் மீது கோபமா? இதோ பார் மஞ்சு -- இல்லை மஞ்சுளா. இன்பவண்ணன் எங்கும் போய் விடவில்லை. ராஜ குமாரர்கள் தேசசஞ்சாரம் செய்து வருவது வழக்கமில்லையா? பல தேசங்களுக்குப் போய் வந்தால்தானே உலக அனுபவம் ஏற்படும். அதற்காக ஊர் சுற்றப் போயிருக்கிறார்கள் அலுப்பு

ஏற்பட்டதும் அண்ணனும் தம்பியும் தாமாக நாடு திரும்புகிறார்கள். இதற்காகப் போய்..." என்று கலகலவென்று சிரித்தான் கீர்த்தி.

"இளவரசர் இன்பவண்ணன் தேச யாத்திரை போயிருக்கிறாரா? ஊர் சுற்றுவதில் சலிப்பு ஏற்பட்டால் நாடு திரும்புவாராக்கும். அப்படியானால் அவருக்கு என் மீதும் சலிப்புதானா?" என்று கேட்ட மஞ்சு, தான் ஓர் இளவரசி என்பதையும் மறந்து 'கோ' என்று அழ ஆரம்பித்து விட்டாள்.

பாவம் கீர்த்தி அவன் இதுவரையில் யாரையும் காதலித்ததில்லை. காதலர்களின் மனநிலையைப் பற்றியும் அவனுக்குத் தெரியாது. மஞ்சுளாவின் கதறல் அவனைக் கலகலக்கச் செய்து விட்டது. "மஞ்சு, மஞ்சுளா... இது என்னது குழந்தை மாதிரி..?" என்று அவள் கைகளைப் பற்றினான். அவள் தன் கையை வெடுக்கென்று விடுவித்துக் கொண்டு வேகமாக அரண்மனையை நோக்கி ஓடினாள். கீர்த்திக்கு ரொம்ப அவமானமாகிவிட்டது. பரிதாபமாக அவள் ஓடுவதையே பார்த்துக் கொண்டு நின்றான். அப்போதுதான் தன்னைச் சுடர் விழிகள் இரண்டு சுட்டெரித்துக் கொண்டு நிற்பதைக் கண்டான். கனகாதான் அப்படி மூக்கைத் தூக்கிக் கொண்டு அப்படி அலட்சியமாக நின்று கொண்டிருந்தாள்.

மோகனரங்கனிடம் மோகம் கொண்டிருந்தவள் கனகா. கர்வியும் கூட. மஞ்சுளா அழுது கொண்டு ஓடவே இவள் ஏதுமே பேசாமல் தலையை நிமிர்த்துக் கொண்டு கீர்த்தியிடமிருந்து ஒதுங்கிப் போனாள்.

பல நாட்கள் வரை மன்னர் மந்தஹாசர் தம் மகன் கீர்த்தியைச் சந்திக்கவே இல்லை. இழந்த பிள்ளைகளை நினைத்து ஏங்கவும், இருக்கும் மகனுக்குச் சரியான புத்தி கற்பிக்கவும் என்ன செய்யலாம் என்று ஆலோசிக்க ஏகாந்தத்தை நாடி எங்கோ போயிருந்தார்.

திரும்பி வந்த போது ஒரு திட்டத்துடனேயே வந்திருந்தார் மன்னர். பல தலைமுறைகளாக அரச குடும்பத்தினர் வாழ்ந்து வரும் அரண்மனையை - கோட்டையை விட்டு மன்னர் தமது இருப்பிடத்தை வெகு தூரத்தில் உள்ள வேறொரு நகரத்துக்கு மாற்றிக் கொண்டு கீர்த்திவர்மனிடருந்து தாமே ஒதுங்கிப் போய் விடுவதென்று தீர்மானித்து விட்டார். அந்தப் பெரிய அரண்மனையில் இளவரசன் கீர்த்திவர்மனை மட்டும் விட்டுவிட்டு மற்ற எல்லோரும் உடனே புதிய அரண்மனைக்குக் குடிபெயர்ந்து விடுவது என்ற திட்டத்தில் மிகவும் உறுதியாக இருந்தார் மன்னர். அது மட்டுமல்ல இதைக் கீர்த்திக்குத் தெரியாமல் செயல்படுத்த வேண்டும் என்பதிலும் அவர் குறியாக

இருந்தார். ராணியின் அன்புக்குகந்த மகன் கீர்த்தி. அவள் ஒருத்திதான் இந்த ஏற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தாள். ஆனால் இத்தனை ஆண்டுகளாக ராணிக்குப் பயந்து வந்த மந்தஹாசர் இப்போது திடீரென்று வெகுண்டார். ரத்தினாவதியே பயந்து போனாள் என்றால் மந்தஹாசரின் கோபம் எப்படி இருந்திருக்க வேண்டும்! அரண்மனையில் உள்ள மற்றவர்கள் இந்த ஏற்பாட்டினால் மகிழ்ச்சியே அடைந்தார்கள்.

அரண்மனைக்குள் நிலவும் அசாதரணமான மௌனமும் செயல்களும் ஏதோ விபரீதம் நடக்கப் போவதாகிறது என்பதை கீர்த்தியின் உள்ளுணர்வு உணர்த்தியதானாலும் அவன் அதில் அக்கறை காட்டவில்லை.

ஒரு நாள் காலை…

இளவரசன் கீர்த்திவர்மன் கண் விழித்து எழுந்து தன் படுக்கையில் அமர்ந்தபடி உடலை முறுக்கிச் சோம்பலை உதறிவிட்டுக் கொண்டு எழுந்திருந்தான். குளிர்ந்த காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது. மனத்திலே புதிய உத்ஸாகம் பொங்கியது. அதே சமயம் வயிற்றில் பசியும் பரபரத்தது. இரவு ஆராய்ச்சி நூலொன்றைப்

படித்துக் கொண்டிருந்தவன் அப்படியே சாப்பிடப் போகாமல் கண்ணயர்ந்து விட்டான்.

கீர்த்தி தன் அறையிலிருந்து வெளி வந்தான். அரண்மனை வெறிச்சோடிக் கிடந்தது. யாரையுமே காணோம். ஆட்களை மட்டும்தானா? அரண்மனையில் உள்ள பொருள்கள் எதையுமே கூடக் காணோம். எல்லாம் எல்லோரும் எங்கே? ஒவ்வோர் அறையாக ஓடிப் போய்ப் பார்த்தான். வெறுமையாகிக் கிடந்தன. தன் அறைக்கே வந்தவனுக்கு இன்னும் அதிக அதிர்ச்சி காத்திருந்தது. அவனுடைய உடைகள் எதையுமே காணோம். காலணிகள், உடைவாள், தலைப்பாகை, மேலங்கி ஏதுமில்லை. அவன் உடுத்தியிருக்கும் ஆடையைத் தவிர வேறு ஏதுமே இல்லை. அரண்மனையில் அவர்கள் எதையும் விட்டுப் போயிருக்கவில்லை.

கீர்த்திக்குக் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாம் விளங்கின. தன்னை அவமானப்படுத்தவும் உதாசீனப்படுத்தி ஒதுக்கவும் மன்னர் செய்த காரியம் இது என்று உணர்ந்து கொண்டான். இத்தனைக்கும் அவன் செய்த தவறுதான் என்ன? அதிக புத்திசாலியாக இருந்ததுதான். புத்திசாலியாக இருப்பவர்களிடம் அப்படி இல்லாதவர்கள் பொறாமையும் விரோதமும் கொள்வது இந்த உலகில் வழி வழியாக

நடந்து வரும் காரியம்தான். இதோ கீர்த்தியின் நிலைமையைப் பாருங்கள். அவன் அறிவாளியாக இருந்ததினால் எத்தகைய தொல்லைகளுக்கு ஆளாகியிருக்கிறான். இளவரசனான அவனுக்கு மாற்றுடை இல்லை. பசித்த வயிற்றுக்குச் சூடான சுவையான உணவில்லை. வெளியே நடந்து போக வேண்டுமானால் காலில் அணிந்து கொள்ளப் பாதரட்சை இல்லை. கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்கக் கூட அத்தனை பெரிய அரண்மனையில் ஒரு பணியாள் இல்லை. கையிலே பைசாவும் இல்லை. கீர்த்திக்குப் பசியோ வயிற்றைக் குடைந்தது. என்ன செய்வான்?

# அத்தியாயம் - 5

**கோ**ட்டைகளால் சோழப்பட்ட விசித்திரபுரி அரண்மனை நகரத்திலிருந்து ஒதுங்கியிருந்தது. மக்களிடமிருந்து மன்னர்கள் எப்படி ஒதுங்கி வாழ்வார்களோ எப்படியே அவர்களுடைய அரண்மனைகளும் அந்தக் காலத்தில் மக்கள் வசிக்கும் இடங்களிலிருந்து தனித்துத்தான் இருக்கும். விஸ்தாரமான நிலப்பரப்பில் தோட்டங்களால் சூழப்பட்ட அத்தனை பெரிய அரண்மனைக் கோட்டையில் இப்போது கீர்த்தி மட்டுமே தன்னந்தனியனாக இருந்தான். அத்தனை பெரிய மாளிகையில் தான் மட்டுமே இருக்கிறோம் என்ற எண்ணம் அவன் உள்ளத்தில் என்னவோ செய்தது. அது பயமில்லை ஆனால் ஒரு வித பாரமாக இருந்தது.

அரண்மனையில் ஒவ்வோர் அறையாக ஓடிஓடிப் பார்த்தான். யாருமே இல்லை. எந்த விதமான

பொருள்களுமில்லை. களைப்பையே அறியாத கீர்த்திக்குக் களைப்பாக, கலக்கமாக இருந்தது. பசியைப் பற்றி அதிக அக்கறை காட்டாத கீர்த்தியை இன்று ஏனோ அது பாடாகப் படுத்தியது. அவன் பரிதாப நிலையைக் கண்டு வானமே அழுவது போல திடீரென்று இடியோடு மழை கொட்டியது. காலியான அரண்மனையில் இங்குமங்குமாக ஓடிக் கொண்டிருந்த கீர்த்தி மழையில் நனையாதிருக்கத் திரைச் சீலை ஒன்றை உருவித் தலைமேல் போட்டுக் கொண்டு ஓடினான். "அடேயப்பா! அரண்மனைதான் எத்தனை பெரியது? இத்தனை அறைகளா? இன்னும் நான் பார்க்க வேண்டிய பகுதிகள் நிறைய இருக்கின்றனவே!" என்று தன்னைச் சூழ்ந்திருக்கும் உப்பரிகைகளையும் கூட கோபுரங்களையும், மாட மாளிகைகளையும் வியப்புடன் அண்ணாந்து பார்த்தான் கீர்த்தி. இதுவரை அவன் அரண்மனை முழுவதையும் சுற்றிப் பார்த்ததில்லை. அதற்கான சந்தர்ப்பமும் ஏற்பட்டதில்லை.

கோட்டையின் வடக்கு வாயில் பக்கமாகத் தன்னந்தனியாக ஓர் உப்பரிகை தெரிந்தது. அங்கு அவன் போனதே இல்லை. "என்னிடம் வா" என்று அழைப்பது போலிருந்தது நீல வானத்தின் பின்னணியிலே நிமிர்ந்து நின்ற அதன் கோபுரம். இலேசாக மழை பெய்து கொண்டிருந்தது. திரைச்சீலையை முட்டாக்காகத் தலைமீது போட்டு அதையே உடல் மீதும் மூடிக் கொண்டு வடக்குக் கோட்டை மதில் மீதிருக்கும் உப்பரிகையே நோக்கி ஓடினான் கார்த்தி. கோட்டையில் காவல் இல்லை. அதன் பழங்காலத்துக் கதவு காற்றில் தானாக அசைந்து கொண்டிருந்தது. எண்ணைய் இடப்படாத அதன் கீல்கள் 'கிய் கிய்' என்று சப்தமிட்டன. நிர்மானுஷ்யமான அந்த அரண்மனையில் இந்த ஒலியே அமானுஷ்யமாக இருந்தது. வேறு யாராவதாக இருந்தால் பயத்தினால் பாதி உயிர் போயிருக்கும். ஆனால் கீர்த்தி பயம் என்றால் என்ன என்றே அறியாதவன். பிரம்மாண்டமான அந்த மரக்கதவைக் காலால் ஓர் உதை கொடுத்து அகலத் திறக்க வைத்தான். அவன் கொடுத்த உதையில் கதவு சுவரில் போய்

மடார் என்று மோதியது. அதனால் ஏற்பட்டு சத்தம் அந்தக் காலி அரண்மனையிருன் அலை அலையாகப் பரவி பயங்கரமாக எதிரொலி செய்தது. உப்பரிகைக்குப் போக மாடிப்படிகள் கொடியாக வளைந்து சென்றன. இருள் மண்டிக் கிடந்தது என்று சொல்லி விட முடியாதபடி இலேசாக மங்கலான ஒளி எங்கிருந்தே வந்து கொண்டிருந்தது. கீர்த்தியின் உள்ளத்தில் ஏதோ ஓர் உணர்வு 'மாடிக்குப் போ' என்று பிடித்துத் தள்ளியது. படிகளில் கால் வைத்தான். முகத்தில் கம்பியாக ஒட்டடைகள் வந்து சிக்கிச் சிதைந்தன. சிலந்தி வலைகளை ஒதுக்கி வழி ஏற்படுத்திக் கொண்டு மேலே ஏறினான் கீர்த்தி. படியெல்லாம் புழுதி. காலடி ஓசை கேட்டு ஓடும் எலிகள், பல்லிகள். 'இந்த உப்பரிகை புறக்கணிப்பட்ட இடமா? பல காலமாக இங்கு யாருமே வந்ததில்லை போலிருக்கிறதே' என்று சிந்தித்தபடியே படிகளைக் கடந்து உச்சிக்குப் போனான் கீர்த்தி. அங்கு அவன் முன்னால் ஒரு பழங்காலத்து மரக்கதவு. அது மூடியிருந்தது. ஆனால் பூட்டியிருக்கவில்லை. அதன் கீல்களில் துரு ஏறியிருந்ததால் அதைச் சுலபமாகத் திறக்க முடியவில்லை.

கீர்த்தி அதை அழுத்தித் தள்ளிய போது விகாரமான ஒலி எழுப்பி ஒதுங்கிக் கொண்டது அந்தக் கதவு. உள்ளே...?

காலைச் சூரியனின் பளீர் ஒளியை உள்ளே நுழைய விடாமல் அந்த அறையில் மண்டிக் கிடந்த ஒட்டடைகளும் சிலந்தி வலைகளும் தடுத்துக்கொண்டிருந்தன. சின்ன அறைதான். ஒரே ஒரு மாடம்தான். அதுவும் சுவரின் மேல் மட்டத்தில் இருந்தது. அறையின் நடுவே ஒரு பெரிய மேஜை கிடந்தது. அதில்...?

கீர்த்தியின் கண்கள் வியப்பால் விரிந்தன. அத்தனை பெரிய அரண்மனையில் எத்தனையோ அறைகளில் ஓடி ஓடித் தேடினான். ஒரு பொருளும் இல்லை. ஆனால் இங்கு...? இதை ஒழித்துக் கொண்டு போக மறந்து விட்டார்களா? வடக்குக்கோட்டை வாசலின் மதில் மீதுள்ள உப்பரிகை அவர்களின் நினைவுக்கு வரவில்லையா? அந்த மேஜை மீதும் தரையிலும்தான் எத்தனை பொருள்கள்! எல்லாம் சிதறிக்கிடந்தன, குப்பையாக அள்ளிக் கொண்டு வந்து

போட்டதைப்போல. மேலங்கிகள், பாதரட்சைகள், உடைவாள்கள், தலையணிகள், ரத்தினக்கம்பளங்கள், விளக்குகள். முத்துமாலைகள். குல்லாய்கள். தூசி படிந்து பழசாகி இருந்தாலும் பயன்படக்கூடிய நிலையில் இருந்தன அத்தனையும். அதுமட்டுமல்ல. கீர்த்திவர்மனுக்கே அளவெடுத்துத் தயாரித்தது போலவும் அவை இருந்தன. அவற்றின் மேலாக ஒரு தொப்பி சற்று விநோதமாக இருந்தது. கீர்த்தி அதை எடுத்துத் தூசு தட்டினான். அழகான ஒரு பறவை இறகு சொருகப்பட்டு மிகவும் எளிமையாகக் காட்சியளித்தது அந்தக் குல்லாய். அதைத் தலையில் அணிந்து கொண்டான். ஒரு மூலையில் ஒரு ஜோடிக் காலணிகள் வைக்கப் பட்டிருந்தன. தன் காலிலிருந்த செருப்புகளை உதறி விட்டு அந்தப் புதிய காலணிகளை அணிந்து கொண்டான். அவன் காலுக்குக் கச்சிதமாக அளவெடுத்தாற் போலிருந்தன. அதுமட்டுமல்ல, அதை அணிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு வேகமும் ஏற்பட்டது, அவன் மனத்தில்.

மேஜை மீது பார்வையை ஓட விட்டான். இளவரசர் உல்லாசப் பயணம் போகும் போது கையில் எடுத்துச் செல்லும் பணப்பை ஒன்று இருந்தது. கீர்த்தியிடம் இப்போது சல்லிக்காசு கூடக் கிடையாதே. பணமில்லாவிட்டால் என்னா? இந்தப் பணப்பையை எடுத்துக் கொள்வோம் என்று அதை எடுத்துத் தட்டினான். 'கிணிங்' என்ற ஓசை கேட்டது. ஆவலுடன் அதில் கை விட்டான். மூன்று பொற்காசுகள் பளபளத்தன. கீர்த்திக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. பையின் அருகிலே ஓர் அழகான பட்டாக் கத்தியும் இருந்தது. பணம் கிடைத்த சந்தோஷத்தில் அந்தக் கத்தியையும் எடுத்து இடையில் கட்டிக் கொண்டான். நல்ல வேலைப்பாடுடைய உறையினுள் ஒப்பற்ற வாள் ஒன்று உறங்கிக் கொண்டிருந்தது. இன்னும் அந்த அறையினும் ஏதேதோ பொருள்கள் எல்லாம் இறைந்து கிடந்தன. ஆனால், கீர்த்தி அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. கையிலே காசு கிடைத்து விடவே அவன் வயிற்றுப் பசி தீவிரமடைந்தது. வெகு வேகமாகக் கீழே இறங்கி வந்தான்.

அந்த அறையைப் பற்றியோ அதில் குவிந்திருந்த பொருள்களைப் பற்றியோ அதன் அதிசய சக்திகளைப் பற்றியோ அவனுக்கு ஏதும் தெரியாது. கீர்த்திவர்மன் பிறந்த போது அவனுடைய அம்மாவின் உதாசீனத்தினால் புறக்கணிக்கப்பட்ட சக்தி வாய்ந்த மந்திரவாதிகளும் முனிவர்களும் திடீரென்று தோன்றி வாழ்த்தி வழங்கி விட்டுப் போன பொருள்கள்தான் அவைகள் எல்லாம். அவர்களிடமுள்ள வெறுப்பினாலும் மந்திர தந்திரங்களில் நம்பிக்கை இல்லாததினாலும் ராணி ரத்தினாவதி அந்த மந்திரப் பொருள்களை யெல்லாம் ஒட்டு மொத்தமாகக் குப்பை போல அள்ளிக் கொண்டு போய் வடக்குக் கோட்டை உப்பரிகையில் உள்ள ஓர் அறையில் போட்டு மூடிவிட்டு வரும்படி ஆணையிட்டாலளல்லவா? அதன் பிறகு யாரும் அங்கு போகவில்லை. இப்போது கீர்த்திதான் அங்கு போனான். அவனுக்காக அளிக்கப்பட்ட அவனுடைய உடைமைகள் தானே அவை? சரியான சமயத்தில் அவைகள் அவனை வந்தடைந்து விட்டன. இப்போது அவன் அணிந்து கொண்டிருக்கும் குல்லாய் எப்படிப்பட்டது தெரியுமா? அதை அணிந்து கொண்டவர்கள் யார்

கண்களுக்கும் தென்பட மாட்டார்கள். ஆனால் அவர்கள் எல்லோரையும் பார்க்க முடியும். பிறர் பார்வையில் படாமல் மாயமாக மறைந்திருந்து உலாவலாம். கீர்த்தி அணிந்திருந்த பாதரட்சைகளோ ஒரே தப்படிக்கு ஒன்பது மைல்களை ஒரே தாவலில் கடக்கும் ஆற்றல் படைத்தவை. அதை அணிந்து கொண்டு வெகு தொலைவில் உள்ள இடத்துக்குப் போக வேண்டும் என்று நினைத்தால் போதும். கணத்திலே அங்கு கொண்டு விட்டுவிடும். கீர்த்தியிடமுள்ள பணப்பையின் மகத்துவம்? அதில் உள்ள அந்த மூன்று நாணயங்களும் வளர்ந்து கொண்டே இருக்கும். அவற்றுக்குள் கை விட்டு எடுக்க எடுக்கக் குறையாது. அந்த வாள்...? அதுவும் மந்திர சக்தியுடைய வாள்தான். அது சரி இந்தப் பொருள்களின் சக்தியைப் பற்றியெல்லாம் கீர்த்திக்குத் தெரியுமா? தெரியாது. அவைகளின் அபூர்வ சக்திகளைப் பற்றி ஏதும் அறியாதவனாகவே அவன் விசித்திரபுரி அரண்மனையின் முற்றத்திலே நின்றான். உங்களால் ஏன் யாராலுமே அவனைக் காண முடியாது. அவன் தலையில் உள்ள அந்த மந்திரக் குல்லாய் அவனைப் பிறர் கண்களுக்குத்

தெரியாமல் மாயமாக மறைந்திருந்தான். ஆனால் தன் உருவத்தைப் பிறரால் காண முடியாது என்ற ரகசியம் கீர்த்திக்குத் தெரியாது. இந்த நிலையில்தான் பல குழப்படிகள் நடந்தன.

கீர்த்திக்குப் பசித்தது. பையிலுள்ள தங்க நாணயங்களைத் தடவிப் பார்த்துக் கொண்டதும் அவன் பசி பல மடங்காயிற்று. அரண்மனைச் சமையலறையோ காலி. விசித்திரபுரியின் கடைத்தெருவுக்குப் போய் ஏதாவது ஓர் உணவு விடுதியில்.. கீர்த்திக்குச் சட்டென்று ஒரு காட்சி நினைவுக்கு வந்தது. மந்தஹாசரின் ஆட்சிக்கு உட்பட்டது மங்களகிரி என்ற நாடு. ஒரு தடவை எதற்காகவோ அங்கு போய் இருக்கிறான் கீர்த்தி. அப்போது அங்கிருந்த ஓர் உணவு விடுதியில் விருந்து கொடுத்தார்கள் இளவரசனுக்கு. 'ஆகா! அத்தனை சுவையான பதார்த்தங்களை நான் அதன் பிறகு சாப்பிட்டதேயில்லை. எத்தனை அருமையாகப் பக்குவம் செய்யப்பட்ட உணவுகள்! விசித்திரபுரிகாரர்களுக்கு விருந்தாளிகளை வரவேற்கவும் தெரியாது, சுவை மிக்க உணவுகளைப் பக்குவம் செய்து தரவும்

தெரியாது' என்று எண்ணிப் பெருமூச்சு விட்ட கீர்த்தி "இந்தப் பசிக்கு நான் மட்டும் மங்களகிரியில் இருந்தேனானால் எத்தனையோ இன்சுவை உண்டிகளை உண்டு மகிழலாமே" என்று எண்ணினான்.

என்ன நடந்திருக்கும் என்றுதான் உங்களுக்குத் தெரியுமே கீர்த்தி அணிந்திருந்தது மந்திரப் பாதுகையாயிற்றே ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்கள் பாயக்கூடிய வல்லமை உள்ளதாயிற்றே! கண்மூடித் திறப்பதற்குள் கீர்த்தி தான் மங்களபுரியின் புகழ்பெற்ற உணவு விடுதியின் முன்னால் நிற்பதை அறிந்து ஆச்சரியப்பட்டுப் போனான். விசித்திரபுரியிலிருந்து எண்பத்தி ஏழு மைல்கள் தொலைவில் உள்ள மங்களகிரிக்கு எப்படி மாயமாக வந்தோம் என்று பிரமிப்பு ஏற்பட்டாலும் அதை எண்ணிக் குழம்பிக் கொள்ளவில்லை கீர்த்தி. காரணம் அவன் பசி. அத்துடன் அற்புதங்களில் அவநம்பிக்கை உள்ள அறிவாளியாயிற்றே அவன்!

உற்சாகமாக உணவு விடுதியினுள்ளே நுழைந்தான் இளவரசன் கீர்த்தி. ஆனால் யாருமே அவனைக் கவனித்ததாகத் தெரியவில்லை. விசித்திரபுரி சாம்ராஜ்யத்தின் இளவரசனான அவன் சென்ற தடவை இங்கு வந்திருந்த போது எத்தனை மரியாதை? எத்தனை வரவேற்பு. நகரம் விழாக்கோலம் பூண்டிருந்ததே. என்னைக் காண்பவரெல்லாம் தலை வணங்கி முகம் கூறினார்களே அப்படிப்பட்டவர்களுக்கு இன்று என்னைத் தெரியவில்லையா? மறந்து விட்டார்களா?" என்று சிந்தனை செய்தபடியே காலியாக இருந்த ஒரு மேஜை முன்னால் போய் அமர்ந்து கொண்டான். தான் அணிந்துள்ள மாயக் குல்லாய் தன் உருவத்தைப் பிறர் காண முடியாதபடி மறைத்திருக்கிறது என்பதை அவன் அறியவில்லை. அவனால் மற்றவர்களைக் காண முடிந்தது. ஆனால் பிறர் கண்களுக்கு அவன் தெரியவில்லை.

மேஜை அருகில் அமர்ந்த கீர்த்தி அங்கு உண்பவர்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தவனைக்

கூப்பிட்டான். தனக்கு வேண்டிய பதார்த்தங்களை கொண்டு வரச் சொல்லுவதற்காக. இவன் அதிகாரக் குரல் கேட்டு அங்கிருந்தவர்களும் உணவு பரிமாறுபவனும் திடுக்கிட்டுத் திகைத்துச் சுற்று முற்றும் பார்த்தார்கள். ஆனால் கீர்த்தி பக்கம் யாரும் திரும்பவில்லை. கால் மீது கால் போட்டுக் கொண்டு கம்பீரமாக அமர்ந்திருக்கும் இளவரசனை அவர்களில் யாருமே கண்டு கொள்ளவில்லை. மரியாதை செலுத்தவில்லை. கூப்பிட்ட அவனிடம் 'என்ன' என்று கேட்டுப் பணியாளன் வரவில்லை காரணம் கீர்த்தி தன் தலையிலிருந்த குல்லாயைக் கழற்றாதுதான்!

உண்மையை அறியாத இளவரசனின் எண்ணமோ வேறு மாதிரியாகச் சென்றது. "என்னை இப்படி இவர்கள் அலட்சியம் செய்து அசட்டையாக இருப்பதற்குக் காரணம் அப்பாதான். என்னுடன் யாரும் பேசக் கூடாது. எனக்கு எவ்வித உதவியோ உபசரணையோ செய்யக் கூடாது என்று நாடெங்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். மீறுகிறவர்கள் கடுமையான

தண்டனைக்குள்ளாவர்கள் என்று மிரட்டப்பட்டிருப்பதனால்தான் இவர்கள் இப்படி என்னிடம் அசட்டையாக இருக்கிறார்கள். இதனால் நான் பட்டினி கிடக்க வேண்டுமா என்ன?" இப்படி எண்ணிய கீர்த்தியின் பசியை அந்த உணவு விடுதியின் சுவை மிக்க உணவுப் பொருள்களின் 'கமகம' மணம் 'பகபக' வென்று கிளப்பி விட்டது. பல்சுவைப் பண்டங்களும் விடுதியின் ஒரு பக்கம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வேண்டியவர்களுக்கு வேண்டியவற்றை அந்தக் குவியலிலிருந்து எடுத்து வந்து பரிமாறினார்கள் பணியாளர்கள். கீர்த்தியை யாரும் கவனிக்கவில்லை. அவன் மேஜை அருகே வரவும் இல்லை. இதனால் கீர்த்திக்குக் கோபம் வந்தாலும் அதை அடக்கிக் கொண்டான். அவன் அறிவாளியாயிற்றே. மௌனமாக எழுந்து போனான். சற்றைக்கெல்லாம் அங்கு உணவு அருந்திக் கொண்டிருந்தவர்கள் எல்லாரும், எடுத்த கவளத்தை வாயிலிடாமல், வாயிலிட்ட பண்டத்தை மென்று விழுங்காமல் பிரமிப்பும் திகைப்பும் கொண்டவர்களாகக் கிலிபிடித்துச் சிலை போலானார்கள். ஏன்?

உணவுக் குவியலின் அருகிலிருந்து ஒரு பெரிய தட்டு தானாக அந்தரத்திலே நின்றது. அதில் இட்டிலிக் குவியலிலிருந்து நான்கு இட்டிலிகள் போய் உட்கார்ந்தன. வடைகள் சில நர்த்தனமாடியபடியே தட்டை நோக்கிப் போயின. அப்பமும் அதிரசமும் கொழுக்கட்டைகளும் முறுக்கும் ஒன்றோடொன்று பின்தொடர்ந்து அந்தரத்திலே நிற்கும் தட்டிலே போய் அமர்ந்து கொண்டன. ஒரு தம்ளர் தானாக எழும்பிப் போய்த் தவலைக்குள் மூழ்கி நீருடன் அந்த உணவுத் தட்டினருகே போய் அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டது. இத்தனையும் நிகழ்ந்தானதும் பதார்த்தங்கள் நிறைந்த உணவுத் தட்டும் நீர்க்குவளையும் காலியா இருந்த மேஜை மீது போய் அமர்ந்தன. பிறகு அதிலிருந்த பண்டங்கள் விள்ளல் விள்ளலாக அதிலிருந்து கிளம்பி மாயமாக மறைந்தன! ஆனால் மனிதர்கள் யாரையும் அவர்கள் பார்க்கவில்லை. இப்படியொரு காட்சியை நீங்கள் காண நேர்ந்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்? அதே நிலையில்தான் மங்களகிரி உணவு விடுதியிலுள்ள மக்களும் திக்பிரமை பிடித்துப் போயிருந்தார்கள். இளவரசன் கீர்த்தி அவர்கள் கண்களுக்குத்

தெரியவில்லை. அந்தரத்திலே தட்டும் உணவுப் பொருள்களும் தண்ணீர்க் குடுவையும் கிளம்பிப் போய் மறைந்த மாயத்தைக் கண்டு கிலி பிடித்தவர்களானார்கள். ஆனால் கீர்த்தியோ இதையொன்றையும் கவனியாதவனாக ரசித்துச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

# அத்தியாயம் - 6

உணவு விடுதியில் உள்ளோர் அங்கு பொருள்கள் தானாகக் கிளம்பி அந்தரத்தில் மிதந்து மறைந்த அதிசயத்தைக் கண்டு பிரமை பிடித்தவர்களாகிக் கலகலத்துப் போனார்கள். ஆனால் கீர்த்தியோ எவ்விதப் பதற்றமுமில்லாமல் நிதானமாக உணவைச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பெரிய மனிதர் உள்ளே வந்தார். பிரபுவைப் போலக் காட்சியளித்த அவரைக் கண்டடதும் உணவுக்க டை உரிமையாளர் தம் இருக்கையிலிருந்து எழுந்து அவரை வரவேற்றார். அத்தனை கௌரவப்பட்டா அவர் ரொம்பவும் கர்வத்துடன், யாரையுமே காணாதவர் போல, மூலையிலிருந்த ஒரு காலி இடத்துக்குப் போனார். அவர் கண்களுக்கு அது காலியாகத் தெரிந்தது. அங்கு இளவரசன் கீர்த்இ அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதை அவர் காணவில்லை. அது கீர்த்தி அணிந்திருந்த குல்லாயின் மகிமை.

"யாரப்பா அங்கே... இதோ அந்த மேஜையைச் சுத்தம் பண்ணு. யாரோ பஞ்சத்திலடிபட்ட பட்டிக்காட்டான் ஏகமாகச் சாப்பிட்டுப் போயிருக்கிறான்." என்று மேஜை மீது கிடந்த ஏராளமான பாத்திரங்களைப் பார்த்துக் கூறிக் கொண்டே மேஜை முன்னாலிருந்த நாற்காலியில் அமர்ந்தார். அடுத்த வினாடி...?

அந்தப் பெரிய மனிதர் கீர்த்தியின் மடியில் போய் உட்கார்ந்தார். கீர்த்தி அந்த இருக்கையில் உட்கார்ந்திருப்பது அவரது ஊனக் கண்களுக்குத் தெரியவில்லை. இரட்டை நாடியான அவர் மூட்டையாகக் கீர்த்தியின் மடியில் போய் உட்கார்ந்ததும் கீர்த்திக்குக் கடுங் கோபம் வந்து விட்டது. அந்த மனிதரைப் பிடித்துக் கீழே தள்ளி விட்டு விட்டு வேகமாக எழுந்திருந்தான். அந்த வேகத்தில் அவன் தலையிலிருந்த குல்லாய் நழுவிக் கீழே விழுந்தது.

அடுத்த வினாடி...?

தன் முன்னே திடீரென்று தோன்றிய விசித்திரபுரி இளவரசரைக் கண்டதும் அந்தப் பெரிய மனிதரின் உடல் கிடுகிடுவென்று ஆடியது. குரல் நடுங்கியது.

"என்னை மன்னியுங்கள் இளவரசே! மன்னியுங்கள். நீங்கள் அங்கே உட்கார்ந்திருப்பதை நான் கவனிக்கவில்லை" இப்படி அவர் சொன்னது கீர்த்தியின் கோபத்தைக் கொழுந்து விடச் செய்தது.

"முட்டாள்தனம். உன் கண்களில் படாமலிருக்க நானென்ன எறும்பா, ஈயா? இத்தனை பெரிய உருவம் உம் பார்வையில் படவில்லையானால் நீர் மதுவின் மயக்கத்தில் இருக்கிறீர் என்றாகிறது. உமது நாட்டு இளவரசரை நீர் அவமானப்படுத்தி விட்டீர். இதற்குரிய வெகுமதியை நீர் அடைந்தேயாக வேண்டும்" என்று ஆத்திரத்துடன் கூறிய கீர்த்தி அதே வேகத்தில் கீழே கிடந்த தன் குல்லாயை எடுத்துத் தலையில் அணிந்து கொண்டு வேகமாக அந்த உணவு விடுதியிலிருந்து வெளியேறுவதற்குத் தயாரானான். குல்லாயைத் தலையில் அணிந்து கொண்ட அந்தக்

கணமே கீர்த்தியும் மறைந்து போனான். நடுங்கிக் கொண்டிருந்த அந்தப் பெரிய மனிதரின் நிலையோ இப்போது இன்னும் மோசமாகப் போயிற்று. இளவரசரின் திடீர்த் தோற்றம், அவரது கோபம், திடீர் மறைவு எல்லாமாகச் சேர்ந்து அவரைக் குழப்பி விட்டன. ரொம்பவும் கர்வமாக உள்ளே வந்த அவர் நிலை இப்போது பரிதாபமாக இருந்தது. அங்கிருப்போரிடமெல்லாம் "நான் இளவரசர் இங்கிருந்ததைக் கவனிக்கவில்லை. தவறு என் மீதுதான். நான் அவர் மீது போய் அப்படி உட்கார்ந்திருக்கக் கூடாதுதான்" என்று புலம்பினார். ஆனால் உணவு விடுதியில் உள்ளவர்களோ அங்கு இளவரசர் வந்ததைத் தாங்கள் பார்க்கவே இல்லை என்றார்கள். "தலைநகரிலிருந்து இவ்வளவு தூரம் அவர் ஏன் இங்கு வர வேண்டும்? வருவதற்கான அவசியமும் இல்லையே" என்கிறார்கள்.

கீர்த்தியோ தான் இப்படியெல்லாம் அலட்சியப்படுத்தப்படுவதற்கும் அவமானப்படுத்தப்படுவதற்கும் தனது தகப்பனார்தான் காரணம் என்ற முடிவில் உணவு விடுதி

முதலாளியின் இருக்கையருகில் போய் "உமது நாட்டு இளவரசருக்கு நீங்கள் காட்டும் மரியாதையும் மதிப்பும் இதுதானா ஐயா? உமது சாப்பாட்டுக் கடையில் உணவு சுவையாக இருக்குமென்று தலைநகரிலிருந்து ஓடோடி வந்தவனுக்கு தகுந்த வரவேற்புக் கொடுத்து விட்டீர்கள். இருக்கட்டும். இந்நாட்டின் மன்னராக நான் ஒரு நாள் வரத்தான் போகிறேன். அப்போது உங்களையெல்லாம் கவனிக்கிறபடி கவனித்துக் கொள்கிறேன்" என்று சுடச்சுடப் பேசினான் கீர்த்தி. முதலாளியின் உடல் நடுங்கியது. விழிகள் பிதுங்கின. பீதியினால் பேச முடியாமல் பேந்தப் பேந்த விழித்தபடி நின்று கொண்டிருந்தார். குரல் வரும் திக்கில் கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார். ஆனால் வெறும் வெளியைத் தவிர வேறெதுவும் தெரியவில்லை.

தான் மறைந்திருக்கிறோம் என்பது கீர்த்திக்கும் புரியவில்லை. கோபத்துடன் மந்திரப் பையினுள் கை விட்டு மூன்று தங்க நாணயங்களை எடுத்து, மேஜை மீது வீசி விட்டுத் திரும்பிப் பார்க்காமல் வேகமாக அங்கிருந்து வெளியேறினான்.

இத்தனை நேரம் உருவில்லாமல் ஒலி மட்டும் கேட்டது. இப்போது தங்க நாணயங்கள் பொத்தென்று முன்னால் வந்து விழவே விடுதிக்காரர் அப்படியே கிலிபிடித்து மயங்கிக் கீழே விழுந்தார்.

கீர்த்திக்கு கோபமோ ஆத்திரமோ வரவே வராது. இதுவரை அவன் இப்படிப்பட்ட மனநிலையில் ஒரு போதும் இருந்ததில்லை. மங்களகிரியின் பிரதான வீதியில் நடந்து போய்க் கொண்டிருந்தான் விசித்திரபுரியின் பட்டத்து இளவரசன். அவரவரும் தம் தம் போக்கில் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் யாருடைய கண்களுக்கும் கீர்த்தி நடந்து செல்வது தெரியவில்லை. அதனால் சிலர் அவன் மீது மோதுவது போல மிக அருகே வந்தார்கள். கீர்த்தி தான் ஒதுங்கிக் கொண்டான். "இந்த நாட்டு மக்களுக்கு திடீரென்று என்ன வந்து விட்டது? கண் பார்வையே போய் விட்டதா? எதிரில் வருபவரைக் கண்டு ஒதுங்காமல் இப்படி வந்து மோதிக் கொள்ளுகிறார்களே?" என்று எண்ணமிட்டான் கீர்த்தி. "என்னைக் கண்டும் காணாதவர்களைப்

போல இவர்கள் இப்படி நடந்து கொள்வதென்றால் அது மன்னருடைய கட்டளைக்குப் பயந்துதான் இருக்க வேண்டும்" என்ற முடிவுக்கு வந்தான் அவன். இன்று போல என்றுமே அவன் மனம் சஞ்சலப்பட்டலில்ஜ. 'ஏன் இவர்கள் இப்படி?' என்ற வினாவே அவன் சிந்தனையில் வண்டாகக் குடைந்து கொண்டிருந்தது. அப்போது கீர்த்தியின் மீது ஒரு வயதான கிழவி வந்து மோதிக் கொண்டு அந்த அதிர்ச்சியில் அப்படியே நடி வீதியில் நிலை தடுமாறிக் கீழே விழுந்து விட்டாள். கீர்த்தி சிந்தனையுடன் வேகமாக நடந்து வருவது கிழவியின் கண்களுக்குத் தெரியாததினால் ஏற்பட்ட விபரீதம் இது. ஆனால் கிழவி தன் மீது மோதிக் கொண்டு கீழே விழுந்தது கீர்த்திக்குத் தெரிந்தது. எப்போதுமே பெரியோர்களிடம் மரியாதையும் வயோதிகர்களிடமும் ஏழைகளிடமும் இரக்கமும் கொண்டவன் கீர்த்தி. கிழவி கீழே விழுந்த அதிர்ச்சியில் முழங்கையில் சிராய்ப்பு ஏற்பட்டு ரத்தம் கசிந்தது. உடனே கீர்த்தி கீழே உட்கார்ந்து கிழவியைத் தன்மீது தாங்கியபடி நிமிர்த்தி வைத்துக் கொண்டு அவள் கையிலிருந்து வழியும் ரத்தத்தைத் துடைக்கச்

சட்டென்னு தன் குல்லாயைக் கழற்றி அதனால் ஒற்றப் போனான். அடுத்த விநாடி கீர்த்தியின் உருவம் பிறர் பார்க்கும்படி தெரியலாயிற்று. தான் இளவரசனின் கைத்தாங்கலில் இருப்பதைக் கண்ட கிழவி "மகாராஜா! என்னை மன்னிச்சிடுங்க, நான் தெரியாத்தனமா உங்க மேலே மோதிட்டேன்" என்று குழறினாள். இதற்குள் நடு வீதியில் பட்டத்து இளவரசன் மண்டியிட்டு அமர்ந்து ஓர் ஏழைக் கிழவிக்கு முதலுதவி செய்வதைக் கண்ட ஜனங்கள் "இளவரசர் --- இளவரசர் -- கீர்த்திவர்மர்...! இங்கே எப்படி வந்தார்? எதற்காக... எப்போது...? " என்று தலைக்குத் தலை பேசியபடியே, அருகில் இருந்தவர்கள் கலைந்து ஓடினார்கள், எட்ட இருந்தவர்கள் வந்து கூடினார்கள். அப்போதுதான் தன்னைக் கண்டவர்களைப் போல மக்கள் பரபரப்படைவதைப் பார்த்த கீர்த்திக்கு எரிச்சலாக வந்தது. 'இத்தனை நேரமும் என்னை லட்சியமே செய்யாத இவர்கள் இப்போது திடீரென்று சலசலப்படைவானேன்? இவர்களிடேயே நான் இனி இருக்கவே கூடாது' என்று முடிவு செய்தவனாக கிழவிக்குத் தன் அன்பளிப்பாகச் சில பொற்காசுகளைக் கொடுத்து

விட்டு அங்கிருந்து போய் விட வேண்டும் என்று பைக்குள் கை விட்டான். அப்போதுதான் கடை உரிமையாளரிடம் மூன்று தங்கக் காசுகளையும் வீசி விட்டு வந்தது நினைவுக்கு வந்தது. 'இதில் மூன்றே பொற்காசுகள் தானே இருந்தன. இனி ஏதும் அதில் இருக்காதே' என்ற ஏமாற்றம் மேலோங்கு முன் கீர்த்தியின் விரல்கள் நாணயங்களை ஸ்பரிசிக்கும் உணர்வில் வியப்படைந்தான். "பைக்குள் மூன்றே காசுகள்தானே இருந்தன? அவைகளை நான் உணவுக் கடையில் கொடுத்து விட்டேனே. அப்படியிருக்க இதில் இப்போது இன்னும் மூன்று காசுகள் இருக்கின்றனவே, எப்படி?" வியப்பு ஏற்பட்டாலும் அந்த வினாவுக்கு விடை காண குழம்பிக் கொள்ளவில்லை அவன். 'தன்னிடமுள்ளது மந்திரப்பை. அதிலுள்ள நாணயங்கள் எத்தனை தடவே எடுத்தாலும் அப்படியே குறையாமல் இருக்கும்' என்ற ரகசியம் அவனுக்குத் தெரியாது. கைக்கு வந்த அந்த மூன்று நாணயங்களையும் கிழவியின் கைக்குள் திணித்து விட்டுக் கூட்டத்தினரிடமிருந்து ஒதுங்கிப் போக எண்ணிக் குல்லாயை எடுத்துத் தலையில் அணிந்து கொண்டு வேகமாக

நடக்கலானான். அதே சமயம் மக்களிடம் இருந்து வியப்பொலியும் கிறீச்சென்ற கூச்சலும் அவன் செவிகளில் விழத்தான் செய்தன. "என் இப்படி இவர்கள்?" என்று அவர்கள் செயலில் அதிசயமடைந்தான். அதற்குக் காரணம் தன்னிடம்தான் இருக்கிறது என்பதை அவன் உணரவே இல்லை.

விசித்திரபுரி இளவரசனான கீர்த்தியைக் காண வந்து கூடிய மக்கள் பீதியடைந்து சிதறி ஓடினார்கள். "ஊரிலே யாரோ ஒரு மந்திரக்காரன் தோன்றி இருக்கிறேன். திடீரென்று தோன்றுகிறான். படீரென்று மாயமாக மறைகிறான் அந்த மாயாவி!" என்று பேசிக் கொண்டு ஓடலானார்கள். நகரெங்கும் ஒரே பரபரப்பு. இதே பேச்சு.

சிந்தனை வயப்பட்டவனாக ராஜபாட்டையில் நடந்து கொண்டிருந்தான் கீர்த்தி. அப்போது ஜாதிக் குதிரைகள் பூட்டிய ரதம் ஒன்று வெகு வேகமாக இவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. கொஞ்சமும் ஒதுங்காமல் நேரே தன்னை நோக்கியே கண் மண் தெரியாத வேகத்தில் வரும் ரதத்தைக்

கண்டான் கீர்த்தி. ஆனால் ரதம் ஓட்டும் சாரதியின் கண்களுக்குக் கீர்த்தியின் உருவம் தெரியவில்லையே? ஆனால் யானை ஏற்றம், குதிரை ஏற்றம், ரத ஓட்டம் ஆகியவைகளில் வல்லவனான கீர்த்தி சட்டென்று மின்னல் வேகத்தில் ஒதுங்கிக் கொண்டதோடு குபீரென்று அந்த ரதத்தின் பின்பக்கத்தை லாகவமாகப் பிடித்துத் தாவி அதில் தொற்றிக் கொண்டான். "இத்தனை வேகமாகவும் வீதியில் உள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்யாமலும் தேர் ஓட்டும் சாரதிக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுன்ம. அத்துடன் இதனுள் வரும் பெரிய மனிதர்களையும் எச்சரிக்க வேண்டும்' என்ற முடிவுடன் கீர்த்தி அந்த ரதத்தின் பின்னால் ஏறி நின்று சவாரி செய்து கொண்டு போனான். ரதம் போயக் கொண்டிருக்கும் போதே மேலிருந்து குனிந்து உள்ளே நோக்கிய கீர்த்தி பிரமித்து விட்டான். ரதத்தினுள் ஒரு பெரியவருடன் ஓர் அழகிய பெண்ணும் இருந்தாள். கீர்த்தியே அவளை 'அழகி' என்று கருதினானென்றால் அவள் எப்படிப்பட்ட அழகியாயிருக்க வேண்டும்.

ரதம் ஓர் அரண்மனையின் முன்னால் போய் நின்றது. அவர்களிடம் தான் சொல்ல நினைத்ததை அங்கேயே ஒரு பெண்ணின் முன்னிலையில் கூறிச் சங்கடமான சூழ்நிலையை உருவாக்க விரும்பவில்லை. அவன் நாகரிகம் தெரிந்தவன். ஆகவே ரதத்தில் அந்தப் பெண்ணோடு வந்த பெரியவர் தனித்திருக்கும் போது அவருடன் இது பற்றிப் பேசலாம் என்று அவர்களுடனேயே அந்த அரண்மனைக்குள் நுழைந்தான். அவனைத்தான் பிறரால் பார்க்க முடியாதே. ஆகவே அவன் அவர்களுடன் உள்ளே நுழைவதற்கு எவ்விதத் தடங்கலும் இருக்கவில்லை.

அந்த அரண்மனையில் ஒரே கோலாகலம். ஏதோ ஒரு விழாவுக்கான ஏற்பாடு போலிருந்தது. அங்கு முன்பே பல பிரபுக்களும் பெரிய மனிதர்களும் வந்து கூடி இருந்தார்கள். அவர்களிடையே கீர்த்தி நடந்து போனான். அவனை யாருமே கவனித்ததாகத் தெரியவில்லை. (அவன் தலையில் மாயக்

குல்லாயிருந்தது!) ஆனால் அவர்களுடைய சம்பாஷணை எல்லாமே அவனைப் பற்றியதாயிருந்தது.

"இளவரசனுக்குச் சரியான தண்டனைதான்....' இப்படி ஒருவர்.

"இருந்தாலும் இத்தனை அதிபுத்திசாலியாகவும் இருக்க வேண்டாம். அதிபுத்திசாலித்தனமும் ஆபத்துதான்' இது ஒருவரின் விமரிசனம்.

"நெருப்பு மிருகத்தோடு போராட தான் போகாமல் தம்பிகளை அனுப்பித் தப்பித்துக் கொண்டானாமே?" இப்படியாக யாருமே கீர்த்திக்கு ஆதரவாகப் பேசவேயில்லை - ஒரே ஒருவரைத் தவிர. அது யார் தெரியுமா? அந்த அழகிதான். அவள் எப்படிப்பட்ட பேரழகி என்று சொல்லவில்லையே உங்களுக்கு?

நல்ல உயரம் - ஒடிய ஒடியக் கொடி போல. ரோஜா நிறக் கன்னங்கள். தங்க மேனி. காதளவோடிய வண்டுக் கண்கள். அதில் கருணையும் அன்பும் குறும்பும் குழைந்திருந்தன. கருங்குழல் நெளிநெளியாகக் கடல் அலைய நினைவூட்டின.

பசியை மறக்கச் செய்யும் மோகனச் சிரிப்பு. முத்துப்பல் வரிசை. மொத்தத்தில் அவள் ஒரு கைதேர்ந்த சிற்பி தன் கற்பனையைக் கொட்டி உருவாக்கிய சிற்பமாக விளங்கினாள்.

மற்றவர்கள் கீர்த்தியைப் பற்றிக் குறைவாகப் பேசும் போது அவள் அவனை ஆதரித்து வாதாடினாள்.

"விசித்திரபுரியின் இளவரசராகப் பிறந்தது அவருடைய துரதிர்ஷ்டம். நான் அவரைப் பார்த்ததில்லை. ஆனால் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். ரொம்ப அழகாக இருப்பாராமே? பெரிய வீரராமே, ரொம்ப இரக்க குணம் உடையவராமே?" என்று அந்த அழகி பேசுவதைக் கேட்கக் கேட்கக் கீர்த்திக்கு என்னவோ போலிருந்தது. தன்னைப் பற்றி ஒரு பெண் அதுவும் ஓர் அழகி புகழ்வதைக் கேட்க மகிழ்ச்சியாகவும் அதே சமயம் வெட்கமாகவுமிருந்தது. 'ஆமாம், இந்த அழகிதான் என்னைப் பார்த்ததில்லை என்கிறாள். இங்குள்ள இத்தனை பேரில் யாருக்குமேயே என்னைத் தெரியவில்லை? அதோ, அதோ அவர்கள்... கீர்த்திக்குத் தெரிந்த பழக்கமான முகங்கள் பல அந்தக்

கூட்டத்தில் இருந்தன. ஏன் அவர்களில் ஒருவர் கூடத் தன்னைக் கவனித்தும் வந்து வரவேற்கவில்லை? அப்போதுதான் கீர்த்தியின் மூளையில் பளீரென ஒரு மின்னல் பாய்ந்தது.

# அத்தியாயம் - 7

கீர்த்தியின் எண்ணத்திலே ஒரு மின்னல் பாய்ந்ததல்லவா? இத்தனை நேரமாக அவனுக்கு விசித்திரமாகத் தோன்றிய செயல்களும் காட்சிகளும் ஏன் எதலான் என்பதற்கான காரணம் அவனது மூளையில் படீரென்று உதயமாயிற்று. 'நிஜமாகவே? அப்படியும் இருக்குமா?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அவன் மனம் இப்போதைப் பால் என்றுமே படபடத்ததில்லை. தலை மீது உள்ள குல்லாயைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். இடையிலிருந்த பையை அவன் கைகள் அவனை அறியாமல் ஸ்பரிசித்தன. தலைநகரிலுள்ள தன் அரண்மனையில் வடக்குக் கோட்டை வாசல் உப்பரிகை மீதுள்ள அறைக்குப் போனதிலிருந்து இது வரை நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நினைவுபடுத்திக் கொண்டான் கீர்த்தி. அவன் உடல் சிலிர்த்தது.

"ஒதுக்கப்பட்ட அந்த அறையில் குவிக்கப்பட்டிருந்த பொருள்களெல்லாம் மந்திர சக்தி வாய்ந்தவைகளா? நான் அணிந்திருக்கும் குல்லாய், எடுத்து வந்த பை, போட்டுக் கொண்டிருக்கும் காலணி...? ஆமாம், அப்படித்தான் இருக்க வேண்டும். மங்களகிரி உணவு விடுதிக்குப் போக வேண்டும் என்று நினைத்து நாலு தப்படி நடந்த உடனேயே அங்கிருந்தேனே! எனக்கு இருந்த பசியில் அது எப்படிச் சாத்தியமாயிற்று என்று நான் இப்போது யோசிக்கவில்லை. உணவு விடுதியிலும் மங்களகிரி வீதியிலும் நடந்த குளறுபடிகளுக்கும் என்னை மக்கள் உதாசீனப்படுத்துதவதாக நினைத்ததற்கும் காரணம், என் உருவம் அவர்கள் கண்களுக்குத் தெரியாமல் ஏதோ ஒரு மாய சக்தியால் மறைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். அது நான் அணிந்திருக்கும் இந்தக் குல்லாயின் மகிமையா இருக்குமோ? இருக்கத்தான் வேண்டும். குல்லாய் தவறி விழுந்த போதோ, நானாக அதை எடுத்தபோதோ என்னைப் பிறர் கண்டிருக்கிறார்கள். அதனாஃதான் திடீரென்று தோன்றித்

திடீரென்று மறையும் என்னைக் கண்டு அவர்கள் பீதியடைந்தார்களோ?

கீர்த்திக்கு மூன்று தங்கக் காசுள்ள பையின் நினைவு வந்தது. "உணவு விடுதி உரிமையாளருக்குக் கொடுத்த பிறகும் அதில் மூன்று நாணயங்கள் அப்படியே இருந்தனவே. கிழவியிடம் கொடுத்த பிறகும் இதில்...?" பரபரப்புடன் பைக்குள் கையை விட்டான். அவன் விழிகள் வியப்பினாலும் புதியதோர் அனுபவத்தாலும் விரிந்தன. பைக்குள் மூன்று நாணயங்கள் கலகல என்று அவன் கைகளில் பட்டுச் சிரித்தன.

"அப்படியானால்...? இத்தனை நாட்களாக நான் எண்ணி வந்த முடிவு தவறானது. அம்மா கூறியது அசட்டுத்தனம். மந்திரங்கள் உண்டு. மாயங்கள் நடக்கும்.. அற்புதங்கள் நிகழும். மந்திரவாதியும் மந்திரப்பொருள்களும் உண்டு! புராதனப் புத்தகங்களில் அதைப் பற்றிப்படித்தபோதெல்லாம் நம்பிக்கைப் படாமல் நகைத்தேனே? அது எத்தனை அசட்டுத்தனம்? இதோ இங்கே நான் எல்லோரையும் பார்க்கிறேன். ஆனால் என்னை

யாரும் காண முடியாதபடி மறைந்திருக்கிறேனே. இந்த அதிசயம் மந்திரசக்தியினால்தானே?" இப்படி நடந்தவற்றை நினைவுக்கு கொண்டு வந்து வரிசைப்படுத்திய போது கீர்த்தி வாய்விட்டுக் கடகடவென்று சிரித்தான். தன்னை மறந்து சூழ்நிலையை மறந்து வெறி பிடித்தவனைப் போலச் சிரித்தான். அவனுடைய சிரிப்பொலியைக் கேட்டு கூடத்திலிருந்தவர்கள் திடுக்கிட்டார்கள், திகைத்தார்கள். நாலா பக்கமும் தவிப்போடு திரும்பிப்பார்த்தார்கள். இப்படிச் சிரிக்கும் ஆள் யாரென்று அறிந்து கொள்ள ஆனால் யாரையும் அவர்களால் காண முடியவில்லை.

வியப்பும் திகைப்பும் அடங்கித் தெளிவு பிறந்த பிறகே கீர்த்தி தான் சிரிப்பதை நிறுத்தினான். தன் நிலைக்கு வந்த அவனுக்கே அவன் செயல் வெட்கத்தைக் கொடுத்தது. இந்நாட்டின் வருங்கால மன்னனாகிய தான் இப்படி அநாகரிமாகச் சிரித்ததை எண்ணிய போது என்னவோ போலிருந்தது. அங்கு கூடியிருந்தவர்களையெல்லாம் தன் உருவமற்ற சிரிப்புக் கலவரப்படுத்தியிருப்பதைக் கண்டான். 'இவர்களிடம் நான்

என்னை வெளிப்படுத்திக் கொண்டு என் செயலுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் என்ன?" என்ற எண்ணம் ஏற்பட்டது. அவன் நல்லவன், பிறருடைய உணர்ச்சிகளுக்கு மதிப்பும் மரியாதையும் தரக்கூடிய பண்புடையவன்.

கீர்த்திக்கு உடனே இன்னொரு விஷயமும் நினைவுக்கு வந்தது. சட்டென்று தன்னைக் குனிந்து பார்த்துக் கொண்டான். ஒரு பெரிய நாட்டின் இளவரசன் கௌரவமிக்க பலர் கலந்து கொள்ளக் கூடிய ஒரு விருந்து மண்டபத்திலோ, கேளிக்கை நிகழ்ச்சிகளிலோ தோன்றுவதற்க ஏற்ற உடையில் தான் இல்லாதிருப்பதை அறிந்தான். படுக்கைக்குச் செல்லும் போது அணிந்து கொள்ளும் மிகச் சாதாரண உடையில் இருந்தான் கீர்த்தி. இந்தக் கோலத்தில் என்னைப் பற்றி மிக உயர்வாகக் கருதிக் கொண்டிருக்கும் அந்த அழகியின் முன்பு தோன்றக் கூடாது' என்ற முடிவுக்கு வந்தான். கன்னத்தில் குழிவிழ யாருடனோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள் அந்த அழகி. அவன் மீது பதிந்த தன் பார்வையை மீட்டுக் கொள்ள முடியாமல்

சில நிமிஷங்கள் அவள் சிரிப்பை, அழகை, அசைவையே பார்த்துக் கொண்டிருந்தான் கீர்த்தி. 'எந்தப் பெண்ணிடமும் என் மனம் இவ்வளவு ஈடுபாடு கொண்டதில்லையே? இது என்ன விந்தை?' என்ற வினாவையும் அவன் உள்மனம் எழுப்பிக் கொண்டிருந்தது. ஆனாலும் அவள் அழகில் லயிக்கும் தன் கண்களை அவனால் மீட்க முடியவில்லை.

மந்திர சக்தியால் மறைந்திருந்து மக்களை இன்னமும் குழப்பத்திலாழ்த்த விரும்பாத கீர்த்தி உடனே அந்தக் கூடத்தை விட்டு ஒதுக்குப்புறமான ஓர் இடத்துக்கு வந்தான். தான் அணிந்திருக்கும் காலணிகளைக் குனிந்து பார்த்துக் கொண்டான். 'இதற்குத்தான் என்ன அற்புத சக்தி? நினைத்த இடத்துக்குச் சில விநாடிகளில் கொண்டு போய் விட்டு விடுகிறதே' என்று எண்ணி வியந்தவன், 'நான் என்னுடைய விசித்திரபுரி அரண்மனையின் வடக்குக் கோட்டை வாசல் உப்பரிகையில் உள்ள அந்த மந்திரப் பொருள்கள் அடங்கிய அறையில் இருக்க வேண்டும்' என்று நினைத்து மூன்றே தப்படிகள் வைத்தான். அவ்வளவுதான். அடுத்த

சில விநாடிகளில் கீர்த்தி, புழுதியும் ஒட்டடையும் படிந்த அந்த ஒதுக்குப் புறமான உப்பரிகையின் அறைக்குள் இருந்தான். அப்போது மாலை மயங்கி இருள் கவியும் நேரமாக இருந்தது.

அந்த அறையில் சிதறிக் கிடந்த பொருள்களை இப்போது அவன் அதிக அக்கறையுடன் நோட்டம் விட்டான். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் மந்திர சக்தி வாய்ந்தவை என்ற எண்ணம் அவன் உடலைச் சிலிர்க்க வைத்தது. 'ஏதோ ஒருகோபத்தில் மந்திரங்களே கிடையாது என்று அம்மா கூறி இருக்க வேண்டும். நானும் அதை இத்தனை காலமாக நம்பிக் கொண்டிருந்தேனே' என்று எண்ணிய கீர்த்தியின் முகத்தில் புன்முறுவல் படர்ந்தது.

மேஜை மீது இன்னொரு தலைப்பாகை இருந்தது. சலங்கைகள் கட்டி ஜரிகை வேலைப்பாடுடன் அழகாக இருந்தது. அந்தத் தலைப்பாகை. உருவத்தை மறைக்கும் தான் அணிந்திருந்த தலைப்பாகையைக் கழற்றி விட்டு அந்தப் புதிய தலைப்பாகையை அணிந்து கொண்டான். 'அந்த அழகியின்

முன்னால் சென்று என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளப்போகிறேன். அதற்கேற்ற வகையில் ஒரு ராஜகுமாரனுக்கு உரிய கம்பீரமான கவர்ச்சி மிக்க உடையலங்காரத்துடன் நான் விளங்க வேண்டும்' என்று நினைத்துக் கொண்டான். விரும்பியதை விரும்பியபடி அளிக்கும் விசித்திர தலைப்பாகை அது. ஆகவே அடுத்த விநாடியே கீர்த்தி அற்புதமான அழகான ராஜ கம்பீரமான ஆடையலங்காரங்களுடன் விளங்கினான். நவரத்திரங்களும், பொன்னும் பட்டும் பகட்டுமாக வைத்து இழைத்திருந்தன, உடைகளிலும் அணிகளிலும். காண்போரின் கண்களை அகல விரியச் செய்யும் அபூர்வமான வேலைப்பாடமைந்த உடைகள். ஆனால் காலிலே மட்டும் அந்தப் பறக்கும் பாதரட்சைகள்? ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்களை கடக்கக் கூடிய காலணிகள் அப்படியே இருந்தன. இந்த அழகிய உடைகளுக்கு ஏற்றதாக இல்லை, அந்த மந்திரக்காலணி. ஆனால் மங்களகிரியில் உள்ள அந்த அழகியின் முன்னால் இப்போதே போக அது பயன்படுமே என்று அதைக் கழற்றாமல் அணிந்திருந்தான் கீர்த்தி. 'மந்திர சக்தி உடையதானாலும்

எடுப்பாக இல்லை அது. நான் அணிந்துள்ள புதிய பகட்டான ஆடைக்கு ஏற்றதில்லை இது' என்று முடிவு செய்தவன் அங்குள்க பொருள்களை மறுபடியும் ஆராய்ந்தான். நெடுந்தூரத்தை விரைவில் கடக்கும் வேறு சாதன் இருக்காதா என்று அவன் கண்களும் கைகளும் பரபரத்தன. குவிந்து கிடந்த பொருள்களைக் கிளறின. 'ஆ! இதோ இந்தக் கம்பளம்? இதற்கு பறக்கும் சக்தி இருக்குமானால் பறக்கும் கம்பளங்களைப் பற்றி எத்தனையோ கதைகளைப் படித்திருக்கிறேனே!' இப்படி எண்ணமிட்டபடி அந்தக் கம்பளத்தைத் தூசி தட்டிவிட்டுத் தரையில் விரித்தான். தன் உடைகளுக்கு ஏற்ற புதிய காலணிகளை வரவழைத்து அணிந்து கொண்டான். தன்னைப் பிறர் பார்வையிலிருந்து மறைக்கும் மந்திரக் குல்லாயையும் மறக்காமல் எடுத்துக் கொண்டான். ஆனால் அதைத் தலையில் அணிந்து கொள்ளவில்லை. கம்பளத்தின் மீது அமர்ந்து, "மங்களகிரியில் அந்த விழா நடக்கும் மாளிகையின் தோட்டத்தில் போய் நான் இறங்க வேண்டும்" என்று ஆணையிட்டான் கம்பளத்துக்கு! அடுத்த நிமிஷம் கம்பளம்

விரைப்பாக நீட்டி நிமிர்ந்து கொண்டது ஜிவ்வென்று தரையிலிருந்து கிளம்பிச் சாளரத்தின் வழியே ஆகாய வீதியிலே பறக்கும் தட்டைப் போல மிதந்து செல்லலாயிற்று. மந்திர தந்திரங்களில் இது நாள் வரை நம்பிக்கை இல்லாதிருந்த கீர்த்திக்கு கம்பளம் தன்னைச் சுமந்தபடி பறக்கும் காட்சி ஒரே பிரமிப்பாகவு மகிழ்ச்சியாகவும் இருந்தது. இனி மந்திர மாயங்களைப் பற்றி ஆராய வேண்டியதுதான் என்று அப்போதே தீர்மானித்துக் கொண்டான்.

காற்றிலே பறந்து மிதக்கும் காகிதம் தரையிலே போய் இறங்குவது போல மங்களகிரியிலுள்ள அரண்மனைத் தோட்டத்தில் அலுங்காமல் நலுங்காமல் போய் இறங்கியது கீர்த்தியை ஏற்றி வந்த கம்பளம். தரையில் இறங்கியதும் அதில் தொய்வு ஏற்பட்டது. கீர்த்தி கம்பளத்தைச் சுருட்டி குண்டு மல்லிகைப் புதருக்கிடையே ஒளித்து வைத்து விட்டு அரண்மனைக் கூடத்துக்கு விரைந்தான் உருவை மறைக்கும் குல்லாயை அணியாமல்தான்.

இளவரசன் கீர்த்தியைக் கண்டதும் வாயில் காப்போர் சிரம் தாழ்த்தி வணங்கினார்கள். ஒரு காவலாளி உள்ளே ஓடினான். பரபரப்புடன் இளவரசரின் வரவை அறிவிக்க.

"மகாராஜாதி ராஜ, ராஜமார்த்தாண்ட, ராஜகுலதிலக, விசித்திரபுரி இளவரசர்.... அறிவின் பிறப்பிடம், அழகின் இருப்பிடம் வீரத்தின் உறைவிடம் கீர்த்திரவர்மர் வருகிறார், பராக்...! பராக்..." என்று முழக்கினான். புன்னகை தவழும் முகத்துடன் கம்பீரமான நடை நடந்து கட்டியக்காரனின் விளக்கத்துக்கு இலக்கணமாகக் கீர்த்தி அங்கு தோன்றினான். அலை அலையாக பேச்சும் சிரிப்புமாக இருந்த அந்தக் கூட்டத்திலே சட்டென்று ஒரு அமைதி ஏற்பட்டது. இளவரசன் கீர்த்திவர்மனுக்கு வழி விட்டு ஒதுங்கினார்கள். அவன் அருகே வரும்போது சிரம் தாழ்த்தி வணங்கி வரவேற்றார்கள். மங்களகிரியின் நிர்வாகப் பொறுப்பேற்றுள்ள மாணிக்கவர்மர் அரக்கப்பரக்க ஓடி வந்தார். இளவரசனை வரவேற்று அழைத்துக் கொண்டு வரும்போதே வினயத்துடன் கேட்டார்: "வருவதாகச்

செய்தியோ தூதுவனோ கூட வரவில்லையே...! தங்களை இப்படிச் சாதாரணமாக வரவேற்க வேண்டி இருப்பதற்கு வருந்துகிறேன்."

"அதனால் பரவாயில்லை. ஏதோ நினைத்துக் கொண்டேன். கிளம்பி விட்டேன். ம். சரி இங்கு என்ன கொண்டாட்டம்?"

"என் சகோதரியின் பொண்ணுக்கு இன்று பிறந்த நாள். அதைக் கொண்டாடுவதற்காகவே இந்தச் சிறுகூட்டம். தாங்கள் வருகை புரிந்தது அவள் அதிர்ஷ்டம்தான்..." என்று கூறியவாறே கீர்த்தியை ஓர் உயர்ந்த ஆசனத்தில் அமரச் செய்தார். கீர்த்தியின் கண்கள் அவன் இதயத்தில் குடியேறியிருந்த அழகியைத் தேடியலைந்தன. "அவள் எங்கே? ஒளி உமிழும் ஒப்பற்ற அந்த அழகுச் சுடர் எங்கே?" என்று தவித்தவனின் முன்னால், மாணிக்கவர்மர் வந்து நின்றார். அவர் அருகே... அது? கொடியெனத் துவண்ட நிலையில் நாணத்தின் சுமை தாங்காது தாழ்ந்த தலையுடன் கை கூப்பிய கரங்களுடன்...? கீர்த்தி பரபரப்புடன் நிமிர்ந்து அமர்ந்தான்.

"என் சகோதரியின் ஒரே செல்வமகள். குந்தளவல்லி என்று பெயர். இவளது பிறந்த தினவிழாவுக்குத் தாங்கள் வருகை தந்தது எங்கள் பாக்கியம்" என்றவர் அந்தப் பெண்ணின் பக்கம் திரும்பி, "குந்தளா! இளவரசன் கீர்த்திவர்மர். அறிவின் சிகரம். ஆற்றலின் இருப்பிடம்" என்றார். கீர்த்தியின் கண்கள் இமைக்க மறந்தன. குந்தளவல்லியோ அந்த அழகனை நிமிர்ந்து பார்த்தவள் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளுடைய அழகில் அவன் மயங்கியது போல அவளும் அவனுடைய அறிவொளி வீசும் கம்பீரமான தோற்றத்தில் தன்னைப் பறிகொடுத்தாள். இவர்கள் ஒருவரை ஒருவர் பார்வையால் விழுங்கிக் கொண்டிருக்க அந்தக் கூடத்தின் நிசப்தம் மெள்ள மெள்ளக் கலைந்தது. கசமுசவென்று பேச்சுக்கள் மெதுவாகத் தோன்றி வர வரப் பெரிதாகியது. இளவரசனையும் குந்தளாவையும் இணைத்துத்தான் அந்தப் பேச்சுக்கள் இருந்தது என்பதைச் சொல்லவா வேண்டும்?

தன் நிலையடைந்த இருவரும் சூழ்நிலையின் சூட்டை உணர்ந்தார்கள். "என் வருகையால் இங்கிருந்த சகஜ நிலைக்கு ஊறு விளைந்து விட்டது போலிருக்கிறது" என்றான் கீர்த்தி.

"அப்படியொன்றும் இல்லை. இளவரசர் விஜயம் செய்யக் கொடுத்து வைக்க வேண்டாமா?" என்றவர் மறுபக்கம் திரும்பி "ம். நடனம் ஆரம்பமாகட்டும்" என்றார்.

"நாட்டியமாட வேறு யார் வர வேண்டும்? உங்களது சகோதரியின் செல்வமகளே அற்புதமாக நடனமாடுவாள் போலிருக்கிறதே" என்றான் கீர்த்தி.

மாணிக்கவர்மரின் விழிகள் வியப்பால் விரிந்தன. "ஆமாம் உண்மைதான். அது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் திறந்த வாயை மூடாத திகைப்புடன்.

"இவள் நிற்கும் ஒயில், அவள் பார்வையில் தோன்றி மறையும் பாவங்கள், உடல் அமைப்பு, நீண்ட கைகள் இவைகளே இப்பெண் நாட்டியத்தில் வல்லவள் என்பதை

அறிவிக்கின்றனவே... அது மட்டுமல்ல, வீணை வாசிப்பிலும் திறமை மிக்கவளாக இருக்க வேண்டுமே" என்றான்.

"ஆமாம். நாங்கள் ஆருடத்திலும் வல்லவர் என்பதை இப்போதுதான் அறிந்தேன்." என்றார் மாணிக்கவர்மர்.

"ஆருடத்தின் சக்தியால் நான் இதை அறியவில்லை. அங்க லட்சணங்களினால் அறிந்தேன். வீணையை மீட்டி சப்த ஸ்வரங்களை எழுப்பும் வல்லமை பெற்றவை அந்த அழகிய விரல்கள் என்பதைப் பார்த்தாலே தெரிகிறதே" என்றான். மறைந்திருந்து அவள் வாதத்திறமையோடு பேசியதைக் கேட்டது நினைவுக்கு வரவே அந்தக் குரலின் இனிமையை எண்ணியவனாகப் புன்சிரிப்புடன், "உங்கள் குந்தளவல்லிக்கு அற்புதமான சாரீரமும் உண்டென்று எண்ணுகிறேன், இசைக்கலையை முறையாகப் பயின்றிருக்க வேண்டுமே?" என்றான்.

அங்கு கூடி இருந்த அத்தனை பேருக்கும் இளவரசனின் அறிவாற்றலைப் பற்றித் தெரியும் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆனால் இப்போது கண் முன்னாலேயே ஓர் உருவத்தின் அங்கலட்சணங்களைக் கொண்டே அதன் திறமைகளைக் கூறும் அபாரமான அறிவைக் கொண்டு திகைத்து திக்பிரமை கொண்டார்கள்.

"குந்தளவல்லி உன் அழகிய நாட்டியத்தை நான் கண்டு ரசிக்கலாமா?" என்று கேட்டான் கீர்த்தி.

அந்த அழகியின் முகம் செந்தாமரையாகச் சிவந்தது.

## அத்தியாயம் - 8

குந்தளவல்லிக்கு வியப்பான வியப்பு. விசித்திரபுரி இளவரசனான கீர்த்திவர்மனைப் பார்த்ததில்லையே தவிர அவனைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருந்தாள். பெண்களைக் கண்டாலே ஒதுங்கிப் போகும் சுபாவம் கொண்டவனென்று எத்தனையோ பேர் என்னென்னவெல்லாமோ சொல்லியிருந்தார்கள். அதிபுத்திசாலியான இளவரசன் தன்னுடன் நட்பு கொள்ள யார் வந்தாலும் அவர்களுடைய புத்திசாலித்தனத்தைச் சோதனை வைத்து அவர்களைத் தலைகுனியச் செய்வான் என்று கூறியிருந்தார்கள். "பகவத் கீதையில் தொண்ணூற்றி எட்டாவது சுலோகத்துக்கு என்ன பொருள்?' கலிங்க நாட்டை இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சி செய்தவர் யார்' 'நீ இதைப் படித்திருக்கிறாயா?... அதைப்பற்றித் தெரியுமா?' இப்படியெல்லாம் வினா எழுப்பி திக்குமுக்காடச் செய்து அவமானப்படுத்தி அனுப்புவான் என்று

கேள்விப்பட்டிருந்தவளுக்கு இளவரசனின் செயல்கள் வியப்பளித்தன. அதே சமயம் இளவரசனைப் பற்றி அவள் மனதில் உருவாகி இருந்த மதிப்பு மளமளவென்று உயர்ந்து கொண்டே போயிற்று.

குந்தளவல்லி கீர்த்தியின் விருப்பப்படி அற்புதமாக நடனமாடினாள். தான் ஆடுவதில், அபிநயம் பிடிப்பதில் ஏதாவது குறை கண்டுபிடித்துக் குத்தலாகக் கூறுவானோ என்று சற்றுப் பயத்துடனேயே நடனமாடினாள். ஆனால் தன் நாட்டியத்தை இத்தனை ஆர்வத்துடனும் ஆசையுடனும் யாரும் இதுவரை யாருமே ரசித்து மகிழ்ந்ததில்லை என்ற பூரிப்பு ஏற்பட்டது குந்தளவல்லிக்கு. அத்தனை ரசிகத்தன்மையோடு அவள் நடனத்தை ரசித்துக் கைதட்டிப் பாராட்டினான் கீர்த்தி. வீணை மீட்டியபடி அவள் பாடியபோதும் இதே மாதிரிதான் கீர்த்தியிடமிருந்து பாராட்டுக்கள் கிடைத்தன. விருந்தின் போதும் இளவரசன் அவள் அருகில் அமர்ந்துதான் உணவருந்தினான். அவளோடு பேசும் போதும் கீர்த்தி தன் அறிவாற்றலைக் காட்ட

அனாவசியமான விஷயங்களைப் பேசி அவளுக்குச் சங்கடத்தை உண்டாக்கவில்லை. அவன் பேச்சு முழுவதும் அவளைப் பற்றியதாகவே இருந்தது. அவள் எப்படி அற்புதமாகப் பாடினாள், ஆடினாள் என்பதைப் பற்றியும் அவள் அழகைப் பற்றியுமே கீர்த்தி புகழ்ந்து பேசினது அவளுக்கு ரொம்ப வெட்கமாகவும் பூரிப்பாகவும் இருந்தது. 'இத்தனை நல்லவரான, பெண்களுடன் இங்கிதம் தெரிந்து பழகக் கூடியவரான, ரசிகரான, அழகரான, அறிவாளியான இவரைப்பற்றியா ஏதேதோ வதந்திகள் பரவியிருக்கின்றன!' என்று எண்ணி வருந்தினாள் குந்தளவல்லி.

இரவு பூத்து மணம் பரப்பும் ஓர் அற்புத மலர்க்கொடி வீட்டின் நடுவே கீர்த்தியும் குந்தளவல்லியும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இளவரசனோடு பேசுவதற்குப் பாவம் அவளுக்கு எந்த விஷயமும் கிடைக்கவில்லை. அறிவாளியான அவனிடம் எதையாவது பேசித் தனது பலவீனத்தை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஆகவே, விசித்திரபுரியைப் பல விதங்களில் விசாரத்தில் ஆழ்த்திக்

கொண்டிருக்கும் அக்கினி அரக்கனான அந்தக் கொடிய மிருகத்தைப் பற்றிப் பேசலானாள்.

"அதென்ன அத்தனை பயங்கரமான மிருகமா? அதன் அருகிலே யாராலுமே போக முடியாதாமே?" என்று கேட்டாள் குந்தளா.

இதையே நேற்றுக் கேட்டிருந்தால் கீர்த்தி 'அக்கினி அரக்கனாவது மண்ணாவது; என்று கூறியிருப்பான். ஆனால் இப்போது மந்திரம் மாயம் இவைகளில் நம்பிக்கை ஏற்பட்டு விட்ட கீர்த்தியல்லவா?

"வீரமில்லாதவர்களுக்கு எதைக் கண்டாலும் பயங்கரமாகத்தான் தோன்றும். அக்கினி அரக்கன் என்ற அந்த மிருகம் கொடியதுதான். ஆனால் அதை அழிப்பதற்குத் தந்திரமும் திறமையும் வேண்டும்" என்றான் கீர்த்தி.

"திறமைசாலியும் வீர தீரமுமிக்க நீங்கள் அதை அழிக்கப் போகாமல் உங்கள் தம்பிகளை ஏன் அனுப்பினீர்கள்?

அதனால் உங்களுக்கு நாட்டில் எத்தனை அவப்பெயர் ஏற்பட்டிருக்கிறது தெரியுமா?"

"தெரியும். நான் என் தம்பிகளின் வீரம் வெளிப்பட வேண்டும் என்று எண்ணியே அப்படிச் செய்தேன். ஆனால் அது வேறு விதமான விளைவுகளை உண்டாக்கி விட்டது. அது சரி, அக்கினி அரக்கனைப் பற்றி இத்தனை அக்கறையாகக் கேட்கிறாயே ஏன்?"

"வேறொன்றுமில்லை. நம் நாட்டுக்கு நம்மாலான நன்மை ஏதாவது செய்யலாம் என்றுதான். உங்களிடமிருந்து அதைக் கொல்வதற்கான சூட்சுமத்தை அறிந்து கொண்டு போய் நானே அதை மாய்த்து நாட்டுக்கு சுபிட்சத்தை உண்டாக்கலாமே என்று நினைக்கிறேன்."

குந்தளவல்லியின் பேச்சு உறங்கிக் கிடந்த கீர்த்தியின் வீரத்தை உசுப்பி விட்டது. 'ஒரு பெண் அதுவும் இவ்வளவு அழகும்

நளினமும் உடையவள், நெருப்பு மிருகத்தை எதிர்த்துப் போராடப் போவதா?' அவனுடைய தன்மானத் தலைநிமிர்ந்து பார்த்தது.

"அந்த மிருகத்தை அழிக்க நீ போக வேண்டுமா என்ன? உனக்கு அதனுடைய கொம்பும் வாலும் வேண்டுமா சொல்லு. நாளைக்கே அதைக் கொன்று அவைகளை உன் விளையாட்டுப் பொருளாகக் கொண்டு வந்து தருகிறேன்" என்றான் கீர்த்தி.

"இதை நீங்கள் சொல்லும் போதே என் உடல் சிலிர்க்கிறது. ஆனால் அதனால் உங்கள் உயிருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமானால் அதை என்னால் தாங்கவே முடியாதே" என்ற போது குந்தளவல்லியின் சுந்தர முகம் வாடியது. கருவண்டு கண்கள் கலங்கின. தன்னிடம் இத்தனை அன்பும் அபிமானமும் கொண்டு விட்ட அழகிக்காக எதையும் செய்யலாம் என்று உறுதி பிறந்தது கீர்த்தியின் உள்ளத்திலே. "கவலைப்படாதே குந்தளா! இந்த மாதிரியான கொடிய மிருகங்களை எல்லாம் கொல்வதற்கு வீரம் இருந்தால் மட்டும் போதாது. விவேகமும், தந்திரமும், சாதுரியமும் வேண்டும். நான்

என் அப்பாவிடம் அந்த மிருகத்தைப் பற்றி ஏதோ கூறினாலும் அதை அழிப்பது எப்படி என ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருக்கிறேன். இப்போது நீயும் இது விஷயமாகப் பேசினாயல்லவா? இனி தீவிரமாகவே இதில் செயல்படுவேன், கவலைப்படாதே" என்றான். குந்தளவல்லிக்குத் தான் ஆகாசத்தில் பறப்பது போல இருந்தது. மன்னர் மந்தஹாச மகாராஜாவினால் கூட சாதிக்க முடியாததைத் தான் சாதித்து விட்டோம் என்ற பூரிப்பில் அவள் முகம் பிரகாசித்தது.

மங்களபுரியில் ஒரு பழக்கம். ஏதாவது முக்கிய விருந்து, கேளிக்கை, களியாட்டம் என்றால் அதில் பிரதானமானவர்கள் விடை கொடுக்கும் வரை வெளியேறக் கூடாது. இப்போது இந்த விருந்தில் பிராதனமானவராகக் கீர்த்திதான் இருந்தான். ஆனால் அவனோ குந்தளாவுடன் கொடி வீட்டில் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தான். விருந்தாளிகள் விடைபெற முடியாமல் பேசிப் பேசி, அப்படியப்படியே நிலா முற்றத்தில் பலவித கோலங்களில்

சாய்ந்தும் சரிந்தும் படுத்தும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். இளவரசன் விடை பெற்றுப் போன பிறகல்லவா அவர்கள் விடைபெற வேண்டும்? நள்ளிரவுக்கும் மேலாகி விட்டது. இன்னும் அவ்விருவரும் பேச்சை முடித்துக் கொண்டு வரவில்லை. விடிவெள்ளி கூட முளைத்து விட்டது. பறவைகள் தங்கள் கூடுகளிலிருந்து சோம்பல் முறித்தபடி எழுந்து படபடவென்று பறந்து செல்லலாயின. அப்பாடா! ஒரு வழியாகக் கீர்த்திக்கும் அப்போதுதான் வெகு நேரமாகி விட்ட நினைவு வந்து மாணிக்கவர்மரிடமும் குந்தளவல்லியிடமும் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினான்.

நிர்மானுஷ்யமான விசித்திரபுரி அரண்மனையின் தர்பார் மண்டபத்தில் வந்து கம்பளம் இறங்கிய போது கீழ்வானத்திலே சூரியன் தகதகவென்று கிளம்பிக் கொண்டிருந்தான். ஆள் நடமாட்டம் இல்லாத அரண்மனையானாலும் அந்த அதிகாலை வேளை அழகாகவே இருந்தது. புது மலர்களின் கம்மென்ற மணமும் புள்ளினங்களின்

ஒலியும் குளிர்ந்த மெல்லிய இதமான காற்றும் இரவு முழுதும் விழித்திருந்தும் கீர்த்திக்குத் தூக்கம் வரவில்லை. எப்படித் தூக்கம் வரும்? ஓர் அழகிக்கு அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் பரிசாகத் தருவதாக வாக்களித்து விட்டானே! 'அது ஒன்றும் பெரிய விஷயமல்ல' என்று வேறல்லவா கூறி இருந்தான். ஆனால் மந்திரக்கம்பளத்தில் பறந்து வரும்போது சிந்தித்தவனுக்கு அது எத்தனை சிக்கல் நிறைந்த விஷயம் என்பது புலனாயிற்று.

'முதலில் அந்த அக்கினி அரக்கன் எங்கே இருக்கிறது, அது எப்படி இருக்கும் என்பதை அறிந்தாக வேண்டும்' என்று தனக்குத்தானே கூறிக் கொண்டான். உத்தியான வனத்தின் ஓரமாக நடந்து கொண்டே வெகு நேரம் உலாவியவனுக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது. 'மந்திரப் பொருள்கள் குவிந்து கிடக்கும் வடக்குக் கோட்டை வாசலுக்குப் போனால் ஏதாவது வழி பிறக்கலாம்' என்ற முடிவுடன் வேகமாக நடந்தான். அவன் முடிவு அவனை ஏமாற்றவில்லை. அங்கு குவிந்து கிடந்த

பொருள்களில் ஓர் அதிசயப் பொருள் இருந்தது. அது ஒரு பளபளக்கும் பளிங்குக் கல் உருண்டை.... ரசகுண்டு.

அந்த உலகத்தில் எந்தக் கோடியில் யார் எது இருந்தாலும் அது அந்தப் பளபளக்கும் கோளத்தில் அப்படியே தெரியும். அதன் முன்னால் நின்றபடி காணவேண்டியதை நினைத்துக் கொண்டு அதன் மீதாக வலது கையினால் மூன்று தடவை வட்டமாகச் சுற்றிச் சட்டென்று விரல்களால் சொடுக்கினால் போதும் . காண வேண்டிய பொருள், நபர் - காட்சிகளாகப் பட்டென்று அதில் தெரியும். இப்படியொரு மந்திர சாதனம் உண்டென்று அரபு நாட்டு மந்திரக் கதைகளில் படித்திருந்தான் கீர்த்தி. அது நினைவுக்கு வரவே அந்த ரசகுண்டை மேஜை மீது வைத்து அதன் மீது படிந்திருந்த புழுதிகளைத் துடைத்தான். 'இப்போது குந்தளவல்லி என்ன செய்து கொண்டிருப்பாள் என்பதை இதன் மூலம் பார்க்கலாமா' என்ற ஆவல் எழுந்தது முதலில். உடனே பண்புடையவனான அவன் உள்ளம் 'அவள் அறியாமல் அவளைப் பார்ப்பது

நாகரிகமாகாது, அது கூடாது' என்று கூறவே அந்த எண்ணத்தைக் கைவிட்டவன் 'அக்கினி அரக்கனையும் அது இருக்குமிடத்தையும் எனக்குக் காட்டுவாயாக' என்று எண்ணியபடியே அதன் மீது மூன்று முறை வலக்கையால் சுற்றிச் சொடுக்கினான்.

அடுத்த விநாடி.... ஆ... ஆ...! அது என்ன? அந்த ரசகுண்டிலே விதம் விதமான வண்ணக்கலவைகள் வெகு வேகமாகச் சுழன்றன. ஏதோ ஒரு யந்திரத்தைப் போல அதனுள் காடு, மரம், மலை, ஆறு எல்லாம் வேகமாகத் தோன்றுவதும், மறைவதுமாக இருந்தது. கடைசியாகத் தளதளவென்று கொதிக்கும் எரிமலைக் குழம்பு...க்ளப், ப்ளப், க்ளுப் என்ற குமிழிகள் தோன்றி மறைந்தன. தளதளவென்று குழம்பு கொதிப்பது போல் அக்கினிக் குழம்பு கொதித்தது. திகுதிகு என்று தீ ஜ்வாலை விட்டு எரிந்தது. கொதித்துக் குமுறும் எரிமலைக் குழம்பிலே அநாயசமாக முங்கி மூழ்கி நீந்திக் கொண்டிருந்தது ஒரு பயங்கரமான ஜந்து. அதன் மூக்குத் துவாரங்களிலிருந்து நெருப்பு ஜ்வாலை நீர் ஊற்றைப் போல் பீச்சியடித்துக்

கொண்டிருந்தது. கடலில் திமிங்கிலத்தின் மூக்குத் துவாரத்திலிருந்து கடல் நீர் பீச்சியடிக்குமே அது போல்.

'இதுதான் அக்கினி அரக்கனா? காணச் சகிக்கவில்லையே! என்ன கோரம், என்ன பயங்கரம்! மந்திரக் கண்ணாடிக் குண்டில் காணும்போதே அந்த நெருப்பின் தகிப்பைத் தாங்க முடியவில்லையே. இதன் அருகில் எப்படிப் போவது? உருவை மறைக்கும் மாயக் குல்லாய், ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்கள் பாயும் மாயக்காலணி. எதையும் ஒரே வீச்சில் துண்டாக்கும் மந்திரக் கத்தியும் இருக்கும் போது கூட அதன் அருகே போக முடியாது போலிருக்கிறதே. பாவம், என் தம்பிகள் இன்பவண்ணனும் மோகரங்கனும் எந்தவிதச் சாதனமுமின்றி இதைச் சந்திக்கக் கிளம்பிப் போனார்களே!

'அன்றைய மனநிலையில் அப்படி ராட்சஸ மிருகம் இருக்க முடியாது என்று அசட்டுத் தனமாக வாதாடினேனே? கற்பனையும் கட்டுக்கதையுமான ஒரு மிருகத்தைத் தேடிப் போகிறவர்கள் விரைவிலேயே திரும்பி வருவார்கள் என்று

நினைத்தது எத்தனை தவறு? இதோ எதையும் சாம்பலாக்கும் வல்லமை கொண்ட மிருகம் இருக்கிறதே. பாவம் என் தம்பிகள். அது சரி... இந்தக் கொடிய மிருகத்தை வெற்றி கொள்வது எப்படி... இனி அடுத்து நான் செய்ய வேண்டியது என்ன?" இப்படிப்பட்ட சிந்தனையில் மூழ்கியவனாக கீர்த்தி மந்திரக் கண்ணாடியின் முன் சிலையாக அமர்ந்திருந்தான். அக்கினி அரக்கனாகிய கோர மிருகம் குமுறும் எரிமலைக் குழம்பிலே கும்மாளமிட்டு வாலைச் சுழற்றியடித்தபடி நீந்திக் களிப்பது ரசகுண்டிலே தெரிந்து கொண்டிருந்தது.

# அத்தியாயம் - 9

கீர்த்தி சிந்தனையில் ஆழ்ந்து சிலையாக உட்கார்ந்திருந்து கொண்டிருந்தான். சுறுசுறுப்பாக இயங்கும் அவன் மூளை ஏனோ முடங்கிக் கிடந்தது. இத்தனை நாளும் இல்லாத - அனுபவித்தறியாத ஒரு சோர்வு அவனை அழுத்திக் கொண்டிருந்தது. என்ன செய்வது, எப்படிச் செய்வது என்ற எந்த முடிவுக்கும் வர முடியாமல் உட்கார்ந்திருந்தான். "நெருப்பு அரக்கனைப் பார்த்தாகி விட்டது. 'இல்லை இருக்காது' என்று வாதிட்டதெல்லாம் தவறு என்றாகி தத்ரூபமாக இதோ எரிமலைக் குழம்பில் குளித்து கும்மாளமிட்டுக் கொண்டிருக்கிறது அது. அதனிடம் போய் அதை வெற்றி கொண்டு அதன் வாலையும் கொம்பையும் கொண்டு வந்தாக வேண்டும். இல்லாவிட்டால் குந்தளவல்லி என்னைப் பற்றி என்ன நினைப்பாள்?" - அவள் நினைவு அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது போல ஒரு குலுக்கலை ஏற்படுத்தியது.

குந்தளவல்லியும் நெருப்பு அரக்கனும் மனத்திரையிலே வந்து போய்க் கொண்டிருந்தார்கள். சூரியன் உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்தான். கீர்த்தியினால் எந்தவித முடிவுக்கும் வரமுடியவில்லை. "நெருப்பு அரக்கனை வெற்றி கொண்டாக வேண்டியதுதான். அதில் பின்வாங்குவது கிடையாது. ஆனால் அதைப் புத்தி பூர்வமாகச் செயல்படுத்த வேண்டும். அசட்டுத்தனமாகப் போய் அதனிடம் அகப்பட்டுக் கொண்டு விழிப்பதில் அர்த்தமில்லை. அது எப்படி?" சிந்தித்தான், சிந்தித்தான் - சிந்தித்துக் கொண்டேயிருந்தான். அவன் சிந்தனை வீண் போகவில்லை. சட்டென்று அரண்மனை நூல்நிலையத்தின் நினைவு வந்தது. பல மூதாதையர்களின் காலத்திலிருந்து பேணி வளர்க்கப்பட்ட அற்புதமான நூல் நிலையம் அது. இன்று கீர்த்தி மிகச் சிறந்த அறிவாளியாக விளங்குகிறான் என்றால் அது அந்த நூல்நிலையத்தினால்தான். அதில் எத்தனையோ அபூர்வமான நூல்களெல்லாம் இருந்தன. அநேகமாக அதிலுள்ள எல்லாவற்றையுமே அவன் படித்திருக்கிறான். மின்னல் வெட்டுப் போல ஏதோ ஓர் எண்ணம் தோன்றியது அவன் சிந்தனையில்.

அக்கினி அரக்கனை வெற்றி கொள்ள அங்குள்ள புத்தகங்களில் ஏதாவது வழி வகைகள் இருக்குமென்ற நம்பிக்கை ஏற்பட்டது.

'அக்கினி அரக்கனை அழுக்கும் வல்லமை எதற்கு உண்டு? நெருப்புக்குப் பகை எது? நீர்தானே? தணலாகத் தகிக்கும் அக்கினி அரக்கன் மீது குளிர் நீரை ஊற்றினால் அத்தனை தண்ணீருக்கு எங்கே போவது? தண்ணீர் கிடைத்தாலும் அதை இந்த மிருகத்தின் மீது கொண்டு வந்து கொட்ட முடியுமா? அப்படிக் கொட்டினாலும் இத்தனை பயங்கரமான தீக்குழம்பிலே எத்தனை நீரைக் கொட்டினாலும் அத்தனையும் ஆவியாகயல்லவா போகும்? அதனால் அது இன்னும் கனன்று அதிகச் சக்தியையல்லவா பெற்று விடும்?' - வாசக சாலையில் கீர்த்தி வர்மனின் கை விரல்கள் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தன. மனமோ மேற்குறிப்பிட்டபடி சிந்தனைகளைக் கிளறிக் கொண்டிருந்தது.

'நெருப்பு அரக்கனுக்கு எதிரி - பனி அரக்கன். ஆ...! ஆம். அக்கினியிலே வளர்ந்து வாழும் ஒரு மிருகம் இருக்கும் போது

நீரிலோ அல்லது பனியிலோ பிறந்து வளர்ந்து வல்லமை பெற்ற ஒரு மிருகம் இருக்கக் கூடாதா என்ன?" பளிச்சென்று உதயமான பனி அரக்கனின் நினைவு எப்போதோ படித்த ஏதோ ஒரு புத்தகத்தில் அப்படிப்பட்ட பனி அரக்கனைப் பற்றிப் படித்ததும் ஞாபகத்துக்கு வந்தது. எந்தப் புத்தகம் அது எங்கே இருக்கும்? இத்தனை நூல்களில் அதைத் தேடிக் கண்டு பிடிக்க முயற்சிப்பது முட்டாள்தனமில்லையா? கீர்த்தி முட்டாளா என்ன? பனி அரக்கன் என்ற ஒன்று இருக்குமானால் அதைக் காண்பதற்கான சாதனம் அவனிடம் இருக்கும் போது புத்தகங்களைத் தேடிக் கொண்டு இருக்கலாமா? அடுத்த விநாடி அவன் மந்திரப் பொருள்கள் குவிந்து கிடக்கும் அறைக்குள் இருந்தான். அங்கு மேஜையின் மீது இருந்தது, நினைக்குங் காட்சியைக் காட்டும் பளிங்குக் கல் உருண்டை. அதன் முன் போய் நின்ற கீர்த்தி 'பனி அரக்கனை நான் காண வேண்டும்' என்று நினைத்துக் கொண்டு அதன் மீதாக வலது கையால் மூன்று முறை சுழற்றி விரல்களைச் சொடுக்கினான்.

அடுத்த விநாடி...

அந்தப் பளிங்குக் கண்ணாடி உருண்டையிலே பல வண்ணக் கலவைகள் வேகமாகச் சுழன்றன. வனம், வனாந்திரம், மலை, நதி, வானம், வயல், நாடு, நகரம் - இப்படிப் பலவிதமான காட்சிகள் சுழன்று சுழன்று முடிவில் ஒரே வெண்மையாக உறை பனியால் மூடிய ஒரு பிரதேசம் வந்து நின்றது. எங்கும் ஒரே வெண்மை, வெண்மை! அதன் நடுவிலே நெடிதுயர்ந்து நின்றது ஒரு பெரிய மலை. மலையா அது? அசைகிறதே! அதோ அதென்ன? மலை தன்னைக் குலுக்கிக் கொள்கிறதா? பனிப்பாறைகள் பாளம் பாளமாகப் பெயர்ந்து விழுகின்றனவே.. அதோ மலைக்கு இரண்டு கைகள், ஒரு தலை... இது மலையல்ல. மலை போன்ற கொடிய மிருகம். ஆ! அதன் வாயிலே பனிக்கட்டியிலே செதுக்கியது போல ஈட்டி ஈட்டியாக வெள்ளை வெளேர் என்று பற்கள். சூரிய ஒளியிலே அவை எப்படி ஜ்வலிக்கின்றன. செக்கச் சிவந்த அதன் வாயிலே எத்தனை நீண்ட நாக்கு? ஒரு பெரிய பனிமலை நகருவது போல் அல்லவா

நகருகிறது இந்த மிருகம். நீலக் கண்கள். இதைப் பார்த்தாலே குளிரினால் உள்ளமும் உடலும் உறைந்து போகின்றனவே! கீர்த்தியின் பற்கள் அவன் அனுமதியில்லாமலே தடதடவென்று நடுங்கித் தாளமிட்டன. "அக்கினி அரக்கனுக்கு ஏற்ற வல்லமை பெற்ற விரோதிதான் இந்தப் பனி அரக்கன்!" என்ற மகிழ்ச்சியால் குழந்தையைப் போல குதூகலத்துடன் குதிக்கலானான். "அக்கினி அரக்கனை அழிப்பதற்கான சூட்சுமத்தைக் கண்டு விட்டேன். குந்தளவல்லியின் அந்தக் கரிய பெரிய விழிகள் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் விரியும் அழகைக் கண்டு ஆனந்தப்படலாம் விரைவிலேயே" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டே கீர்த்தி உருவத்தை மறைக்கும் மந்திரக் குல்லாயை எடுத்து அணிந்து கொண்டான். ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்களைக் கடக்கும் மந்திரக் காலணிகளை அணிந்து கொண்டான். மந்திர வாளையும் எடுத்து இடையில் கட்டிக் கொண்டான். அக்கினி அரக்கனைச் சந்திக்கக் கிளம்பி விட்டான் கீர்த்திவர்மன். "அக்கினி அரக்கன் வாழும் எரிமலைக்கு என்னைக் கொண்டு விடு" என்று கூறித் தரையில் 'டக் டக் டக்' என்று மூன்று முறை தட்டினான். அடுத்த

விநாடி பறக்கும் பாதரட்சைகள் கீர்த்தியைச் சுமந்தபடி வான வீதியிலே தாவிக் கொண்டிருந்தன.

தாங்க முடியாத தகிப்பு, பொறுக்க முடியாத புழுக்கம். பிறர் பார்க்க முடியாதபடி மறைந்திருந்தால் என்ற? எரிமலையின் உக்கிரமான அனல் காற்று அந்த உடம்பைத் தாக்காமல் இருக்குமா? கீர்த்தியை எரிமலைக்கு அருகில் ஒரு குன்றின் மீது கொண்டு போய் இறக்கியிருந்தது அந்தக் காலணி. அக்கனி அரக்கன் நீச்சலடிக்கும் எரிமலைக் குழம்புள்ள குளம் தகதகக்கும் கற்களைப் பந்தாடிக் கொண்டிருந்தது. அதிலிருந்து பறந்து வந்த சில கற்கள் மறைந்திருந்த கீர்த்தியின் மீதும் விழுந்தன.

தளதளக்கும் நெருப்புக் குழம்புக்குள் முக்குளித்து எழுந்த அக்கினி அரக்கனின் மூக்குத் துவாரத்திலிருந்த புகையும், தீ ஜ்வாலையும் நீராவியும் பீச்சியடித்தன. வைர நெஞ்சம் கொண்ட வீரனையும் கலங்க வைக்கும் காட்சியாக இருந்தது அது. அதைக் கொல்வதற்காக வந்த எத்தனை எத்தனையோ பேர்களையெல்லாம் தனது மூச்சுக் காற்றினால் கருக்கிச்

சாம்பலாக்கியிருந்தது அந்த மிருகம். எரிமலைக் குளத்தை அடுத்திருந்த மலைச்சுவர்களிலே இப்படிக் கருகியவர்களின் சாம்பலும் எலும்பும் படிந்து குவிந்து கிடந்தன. இந்த எலும்புகளில் என் சகோதரர்களின் எலும்புமே கூட இருக்கலாம் - உண்மையிலேயே அவர்கள் அதைச் சந்திக்க வந்திருப்பார்களாயானால்' என்று எண்ணமிட்டபடியே பார்த்தான் கீர்த்தி. அக்கினி அரக்கனோ, ஊர்க்குளத்திலே உல்லாசமாக நீந்தி மகிழும் வாத்தைப் போல எரிமலைக் குழம்புக் குளத்திலே மிதந்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

"ஹேய்.... ஹேய்!" என்று குரல் கொடுத்தான் கீர்த்தி. நெருப்பு குழம்புக்குள்ளிலிருந்து தலையை உயர்த்தி உற்றுக் கேட்டது அந்த மிருகம். அதன் கொம்புகள் தகதகவென்று ஜ்வலித்தன. கண்களிலிருந்து தீபாவளி வாணம் போல் நெருப்புப் பொறி பீச்சியடித்தது.

"யாரது? ... என்னை இத்தனை துணிவுடன் கூப்பிட்டது யார்?" கடுங்கோபத்துடன் கர்ஜித்தபோது அதன் வாயிலிருந்து தீப்பந்தமாக நெருப்பு 'குப் குப்' பென்று வழியலாயிற்று.

"நான்தான்" என்றான் கீர்த்தி. இப்படி மொட்டையாக அவன் பேசியது இதுதான் முதல் தடவை.

"நான்தான் என்றால் யார்? அத்தனை துணிச்சலுள்ள அந்த நரனைக் காண நான் ஆசைப்படுகிறேன்" என்று அந்தத் திரவமான நெருப்பிலிருந்து இன்னும் உயர்ந்து சுற்றுமுற்றும் பார்த்தது. அப்போது அதற்கு நீண்ட பரந்த இறக்கைகள் இருண்டு இருப்பதைக் கண்டான் கீர்த்தி. 'எத்தனை பெரிய பயங்கரமான இறக்கைகள்? அப்படியானால் அதனால் பறக்கவும் முடியும் போல இருக்கிறதே!" என்று நினைத்தபோது அவன் உடல் ஒரு கணம் நடுங்கி அடங்கிற்று. அதே சமயத்தில் குரல் வந்த திசையைக் குறி வைத்துக் கொண்டு அந்த அக்கினி அரக்கன் கீர்த்தியின் அருகே பறந்து வந்து அமர்ந்து கொண்டது. அதனால் கீர்த்தியைப் பார்க்க முடியவில்லை. பார்க்க முடிந்திருந்தால் தன் அகன்ற

வாயை ஒரு தடவை மூடித் திறந்து நெருப்பை உமிழ்ந்து அவனைச் சாம்பலாக்கியிருக்கும். கீர்த்தி உருவை மறைக்கும் குல்லாயை அணிந்திருந்தது நல்லதாகப் போயிற்று. சற்றும் எதிர்பாராதபடி அது பறந்து வந்து அருகே அமர்ந்ததும் அவன் தவித்துப் போனாலும் அடுத்த விநாடியே தடதடவென்று மலையடிவாரத்தின் அருகில் போய் நின்று கொண்டு மறுபடியும் "ஹேய்...!" என்று குரல் கொடுத்தான்.

"என்ன விஷயம்? வெறுமனே 'ஹேய், ஹேய்' என்று ஏன் அநாகரீகமாகக் கத்துகிறாய்? கௌரவமுள்ள மனிதனாகக் கௌரவமான முறையில் நடந்து கொண்டு சொல்லு. நீ யார், எங்கிருக்கிறாய் ? எதற்காக வந்திருக்கிறாய்? என்ற கேள்விக்குப் பதில் சொல்லு" என்றது மிருகம்.

"நான் கௌரவமான முறையில் பதில் அளிக்கிறேன். நீயும் நாணயமாக உன் இருப்பிடமான எரிமலைக் குழம்புள்ள குழிக்குப் போ" என்றான் கீர்த்தி. அப்படியே அது தன் இருப்பிடத்துக்குப் போயிற்று. போகும் போது அதன் நெருப்பு

இறக்கைகளிலிருந்து கிளம்பிய ஜ்வாலையின் உக்கிரம் தாங்காமல் வானத்தில் வெகு உயரத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு பெரிய கழுகு உருகிக் கரிக்கட்டியாக 'கிளிங் க்ளாங்' என்று கீர்த்தியின் அருகிலேயே விழுந்தது. தன் நெருப்புக் குளத்திலே போய் அது விழுந்து அதைக் கலக்கிய போது அருகிலிருந்த மலைகள் அதிர்ந்தன. கீர்த்தி அதன் மேலேகப் பறந்படி (அவன் இன்னும் மறைந்தபடியேதான் இருந்தான்). "பனி அரக்கனிடமிருந்து உனக்குச் சேதி கொண்டு வந்திருக்கிறேன். தன்னோடு போரிடத் திராணியில்லாத பயந்தாங்குள்ளி நீ என்கிறார் எங்கள் பனி அரசர்" என்றான் உரத்தக் குரலில்.

"என்னோடு போரிடவா? நான் பயப்படுகிறேனாமா? யார் அந்தப் பனி அரக்கன்? எங்கே இருக்கிறான் அந்தப் 'படா' அரக்கன்?" என்ற போது அந்த எரிமலைக் குளமே கொதித்துக் கொப்பளித்தது. திகுதிகுவென்று தீ ஜ்வாலையாகக் கொழுந்து விட்டு எரிந்தது. "எவனாக இருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் சரி, அவனோடு போரிட்டு அவனைச் சாம்பலாக்குவேன். வரச் சொல்

உன் பனி அரக்கனை; பஸ்மமாக்கி விடுகிறேன் என்று ஒரு மூச்சினாலேயே" என்றது அக்கினி அரக்கன்.

"சவாலை நீ ஏற்றுக் கொண்டதாக இப்போதே பனி அரக்கனிடம் போய்ச் சொல்லி அதனை அழைத்து வருகிறேன்" என்று கூறி விட்டு அங்கிருந்து கிளம்பினான் கீர்த்தி, பனி அரக்கனைச் சந்திக்க.

# அத்தியாயம் - 10

அக்கினி அரக்கனிடம் தானே பனி அரக்கனின் சார்பாகச் சவால் விட்ட கீர்த்தி, பனி அரக்கனைச் சந்தித்துச் செய்தியைக் கூறக் கிளம்பினான். அதை உசுப்பி விட்டுக் கோபமடையச் செய்ய வேண்டும். பிறகு அக்கினியும் பனியும் மோதுவதை எட்ட இருந்து கண்டு களிக்க வேண்டும். இதை நினைத்தபோது கீர்த்திக்கு சிரிப்பு வந்தது. காரணம். தான் படித்த ஒரு கதையுடன் தன் நிலையை ஒப்பிட்டுக் கொண்டதனால்தான். இரண்டு முரட்டுச் செம்மறியாடுகள் மடார் மடார் என்று தலையோடு தலை மோதிக் கொண்டிருந்தனவாம். அதை ஒரு நரி நாக்கைத் தொங்கப் விட்டுக் கொண்டபடி பார்த்துக் கொண்டிருந்ததாம். அந்த இரு ஆடுகளுக்கும் சண்டை மூட்டி விட்டதே இந்த நரிதான். அவை இரண்டும் முட்டி மோதி மண்டை பிளந்து மடியும் போது அவைகளின் ரத்தத்தை ருசித்து மகிழ நரி காத்திருந்தது.

"நரியின் நிலையில் நான் இருக்கிறேன். இப்போது...!" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் கீர்த்தி. "ஆனால் நரியைப் போல என் செயல் இழிவானதல்ல. எதிரியை வெற்றி கொள்ள நால்வகை உபாயங்களைக் கையாளலாம் என்று மனுதர்மமே சொல்கிறது. ஆகவே, இந்தக் கொடிய மிருகங்களைக் கொல்ல அந்த உபாயங்களில் ஒன்றை நான் கையாளுவதில் தவறில்லை" என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்ட கீர்த்தி, பனி அரக்கனின் இருப்பிடத்துக்குப் போக மந்திரக் கம்பளத்தின் மீது அமர்ந்து கொண்டான். தன்னை அதனிடம் கொண்டு சேர்க்குமாறு ஆணையிட்டான். கம்பளம் ககன மார்க்கத்திலே அநாயசமாக மிதந்து சென்றது.

சிறிது நேரத்துக்கெல்லாம் கம்பளத்தில் அமர்ந்திருந்த கீர்த்திக்கு வெடவெடவென்று உடல் நடுக்கம் கண்டது. 'சரி, பனி அரக்கனின் இருப்பிடத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்! அதனால்தான் இவ்வளவு குளிர்' என்று நினைத்தது அவன் உள்ளம். மந்திரக் கண்ணாடிக் கோளத்தில் கண்ட காட்சிகள்

தூரத்தில் தெரியலாயின. எங்கும் ஒரே வெண்மை. எங்கு திரும்பினாலும் பனிமலைகள். ஓர் இடத்திலிருந்து வெண்புகையாக வெளி வந்து கொண்டிருந்தது. ஆனால் புகை சற்றைக்கெல்லாம் சூழ்நிலையின் குளிர்ச்சியினால் பனித்துகள்களாகி உதிர்ந்தன. பனியோடு பனியாக அந்தக் கொடிய மிருகம் இருக்குமிடமே தெரியவில்லை. அந்தப் புகை வருவதிலிருந்துதான் அது அங்கு இருக்க வேண்டுமென்று புலனாயிற்று.

இன்னும் சற்று அருகே சென்ற போது கீர்த்தி அதிசயமான காட்டிகளைக் கண்டான். சலவைக் கல் சிலைகளாக வீரர்கள் பலவிதமான கோணங்களில் ஆயுதங்களை ஏந்திய நிலையில் ஆங்காங்கே காட்சியளித்தார்கள். குதிரைகளின் மீதமர்ந்தபடியும் கீழே நின்று வேல் வீசும் நிலையிலும் வாள் சுழற்றும் பாவனையிலும் பலப்பல சலவைக் கல் சிலைகள். "இந்தச் சிலைகளெல்லாம் இங்கு எப்படி எதற்காக வந்தன. ஒரு காலத்தில் இங்கு ஏதாவது பெரிய சாம்ராஜ்யம், அரண்மனை

இருந்திருக்குமா? பனி அரக்கனின் ஆக்கிரமிப்பினால் இந்த இடம் இப்படிப் பனி மூடி..."

இதற்குள் கம்பளம் அந்தச் சிலைகளுக்கு மிக மிக அருகே பறந்து சென்றது. கீர்த்தி சலவைக் கல் சிலைகளை உற்றுப் பார்த்தான். அவனுக்கு தூக்கி வாரிப் போட்டது. அவைகளெல்லாம் சிலைகளல்ல. நிஜமான மனிதர்கள். ஒரு காலத்தில் உயிரோடிருந்த வீரர்கள், குதிரைகள். பனி அரக்கனைக் கொல்லுவதற்காக வந்து இப்படிப் பனிக்கட்டியாக உறைந்து, போய் நிற்கிறார்கள். இந்த உண்மை தெரிந்த போது கீர்த்தியின் ரத்தமும் உறைவது போலிருந்தது. அத்தனைக் குளிரிலும் அவன் அகன்ற நெற்றியில் வியர்வை முத்துக்கள் பூத்தன. எத்தனை உறுதியாகப் பற்களைக் கடித்துக் கொண்டும் அவை தடதடவென்று தாளம் போட்டன. ஆனாலும் தைரியத்தை திரட்டிக் கொண்டான். பனி அரக்கன் இருக்கும் பக்கம் பார்த்து 'ஹேய்' என்றழைத்தான்.

"ஹேய்... ஹேய்... ஹேய்...!"

என்று நாலாபக்கமிருந்து பல குரல்களில் எதிரொலியாகக் கிளம்பி அதிர்ந்து அடங்கியது. திடீரென்று ஒரு பனிமலை புரண்டது. பனிக்கட்டிகள் சரிந்தன. கர்ண கடூரமான ஒரு கர்ஜனையை அடுத்து ஒரு நீண்ட வால் வானிலே சுழன்று சொடுக்கியது. படீர் என்று. அங்கே அந்த வெண்பனிப் பரப்பிலே கரேல் என்ற ஒரு ஜந்து தனது செக்கச் சிவந்த அகன்ற வாயைத் திறந்து மூடியபடி எழுந்து நின்றது. அப்படி நின்ற அதிர்விலே அதன் உடலை மூடியிருந்த பனிப்பாளங்கள் பலத்த ஒலியுடன் கீழே விழுந்தன. பனிப்பாறைகள் உடைந்தால் சிதறுமே அப்படிப் பனித்துளிகள் எங்கும் பறந்தன.

நீலமான கண்கள். அதைக் கண்டாலே மரணத்தின் நினைவு வந்தது. அதன் உடலெல்லாம் எஃகுத்தகடுகளை அடுக்கியது போலச் செதில்கள். சூறாவளிக் காற்றும் புயல் காற்றும் வீசும் போது, 'ஊ, ஊ' என்று ஒலி ஏற்படுமே அப்படி ஓர் ஒலி அது மூச்சு விடும் போது உண்டாயிற்று. அக்கினி அரக்கனைப் போல இதுவும் பேசிற்று.

"யார் நீ, எங்கிருக்கிறாய்? என்னை 'ஏய்' என்றழைக்கும் வல்லமை பெற்றவனை இன்றுதான் காண்கிறேன். கோழையைப் போல் ஒளிந்து கொண்டிருப்பானேன்? என் முன்னால் வா?" என்றது. ஊழிக் காற்றின் ஓலத்தைப் போல அதன் குரல் ஊங்காரமிட்டது.

அருகிலிருந்த ஒரு மலையின் உச்சியில் நின்று கொண்டிருந்த கீர்த்தி தன் உருவை மறைக்கும் மந்திரக் குல்லாயைக் கழற்றினான். "இதோ இருக்கிறேன் பார்" என்றான்.

தனது பயங்கரமான தலையைத் திருப்பிக் கீர்த்தியைப் பார்த்த அந்த மிருகம் அவனை நோக்கி நகர்ந்தது. பாம்பு ஊர்வதைப் போல் பனிப்படலத்தில் வளைந்து ஊர்ந்து வந்த அது மலை மீதும் ஏறலாயிற்று. அப்போதுதான் கீர்த்தி அதற்குச் சின்னஞ் சிறிய கால்கள் இருப்பதைக் கண்டான். வழுவழுப்பான அந்தமலையில் தான் மூச்சுக் காற்றினால் உண்டாக்கிய பனிப்படலத்தைப் பற்றிக் கொண்டு பாம்பைப் போல வளைந்து வளைந்து மலை மீது ஏறி அவனை நெருங்கிக் கொண்டிருந்தது.

அதன் தலை மட்டும் நிமிர்ந்து கீர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தது. கீர்த்தி கைகளைத் தேய்த்துச் சூடாக்கிக் கொண்டான். அந்த மிருகம் நெருங்கி வர வர அவன் உடல் உணர்விழந்து மரத்துப் போய்க் கொண்டிருந்தது. கைகால்கள் கெட்டியாகி அசைக்க முடியாதபடியாயின. 'இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருந்தால் நானும் இங்குள்ள சிலைகளைப் போலப் பனிக்கட்டிப் பாறையாகி மலையுச்சியிலிருந்து உருண்டு விழ வேண்டியதுதான். இந்தப் பனி அரக்கனிடமிருந்து எட்டப் போய் நின்று கொண்டால்தான் உயிர் பிழைக்கலாம்' என்ற முடிவுக்கு வந்த கீர்த்தி சட்டென்று தன் மந்திரப் பாதுகைகள் அணிந்த பாதத்தைத் 'தட்தட்' என்று மூன்று முறை தட்டினான். அடுத்த விநாடி அந்த மலை முகட்டிலிருந்து வெகுதூரத்திலிருந்த இன்னொரு மலை உச்சிக்கு அந்தப் பாதுகை அவனைப் பாதுகாப்புடன் கொண்டு சேர்த்தது.

"அப்பாடா! பிழைத்தேன்!" என்று விரைத்துப் போயிருந்த விரல்களை நீவி விட்டுக் கொண்டு பல தடவை மடக்கி மூடிக்

கை விரல்களில் ரத்த ஓட்டத்தை உண்டாக்கி உணர்ச்சி பெறச் செய்தான். அதேபோலத் தாளமிடும் பற்களைக் கட்டுப்படுத்தி நாக்குப் புரள்வதற்கு ஏற்பக் கொஞ்சம் உடலில் சூடு உண்டாக்கிக் கொண்ட பிறகு மறுபடியும் 'ஹேய்' என்று குரல் கொடுத்தான்.

"இங்கிருந்தவன் அதற்குள் அங்கு எப்படிப் போனாய்? ம்... ஆண் மகனானால் நான் அங்கு வரும் வரை அப்படியே அங்கேயே இரு" என்றது பனி அரக்கனாகிய மிருகம்.

இரும்பு போன்ற கருத்த மலைமீது அது ஏறியதனால், அதன் சீதளத்தினால் பனி மூடி வெண்மையாகிப் போயிருந்த அதிலிருந்து வழுக்கிச் சறுக்கியபடி வெகுவேகமாகக் கீழே இறங்கலாயிற்று. அதே சமயம்...

கீர்த்தி திடீரென்று தன் முதுகுப் பக்கத்திலே சுரீர் என்று சூடு உறைப்பதை உணர்ந்தான். முன்னால் ஜிலீர், பின்னாலோ திகுதிகு காந்தல். ஏன் இப்படி? கீர்த்தி திரும்பிப் பார்த்தான். 'புதன்' (மெர்க்குரி) கிரகத்துக்கு வந்து விட்டோமா,

அங்குதான் முன்பக்கம் தாங்க முடியாது தகிக்கும் வெப்பமாகவும் பின் பக்கம் சகிக்கக் கூடாத குளுமையாகவும் இருக்குமென்று வான சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது' இப்படி எண்ணமிட்டபடியே வெகு தூரத்துக்குப் பார்வையை ஓட விட்ட கீர்த்தி தொலை தூரத்துக்கப்பால் பச்சை மரங்களெல்லாம் கருகிக் கொண்டு வருவதைக் கண்டு திடுக்கிட்டான். பசும் புல்வெளி தகதகவென்று கொழுந்து விட்டு எரியும் அக்கினித் தடாகமாகக் காட்சியளித்தது. அதற்கும் அப்பால்... அதோ அதென்ன! கொள்ளி வாய்ப்பிசாசா? குப்குப்பென்று தீப்பந்தத்தில் குங்கிலியத்தை வீசினாற்போல் 'குபீர் குபீர்' என்று ஜ்வாலை நெளிந்து ஓடுகிறதே! அக்கினி அரக்கனின் மூக்கிலிருந்தல்லவா இப்படி ஜ்வாலை வரும்?... 'ஆமாம், அதோ அக்கினி அரக்கனே வந்து கொண்டிருக்கிறது! காத தூரத்துக்கு அப்பால் வரும் போதே இங்கு இப்படிக் காந்துகிறதே. அதே சமயம் தன் முன்னால் தன்னை நோக்கி முன்னேறிக் கொண்டு வரும் பனி அரக்கனைக் கண்டான். அதென்னது? அது வெகு வேகமாகத் தன்னுடைய வாழ்விடமான சீதளக் குழியை நோக்கித் திரும்பிப் போய்க்

கொண்டிருக்கிறதே? பனி அரக்கனின் பனி மூச்சினால் மூடியிருந்த உறைபனி அடுக்குகளெல்லாம் அக்கினி அரக்கனின் வெப்பத்தால் மளமளவென்று உருகிச் சரியலாயின.

தனது குல வைரியான பனி அரக்கன் வரும் வரை காத்திருக்க முடியவில்லை, அக்கினி அரக்கனால். விரோதியைத் தேடித் தானே வந்து விட்டது. இதோ அக்கினியும் உறை பனியும் சந்தித்துக் கொள்ளப் போகின்றன. முட்டி மோதிக் கொண்டு போரிடப் போகின்றன. தான் எண்ணியது கை கூடப் போகிறது என்று மகிழ்ந்த கீர்த்தி, "பனி அரக்கனே! உன்னைச் சந்திக்க அதோ உன் ஜன்ம விரோதி அக்கினி அரக்கன் வந்து கொண்டிருக்கிறான். வரவேற்கத் தயாராக இரு!" என்று உரக்கக் கூவியபடி நெடுந்தூரத்திலிருந்த வேறு ஒரு மலை உச்சி்க்உத் தன்னுடைய இருப்பிடத்தை மாற்றிக் கொண்டான் கீர்த்தி.

இரண்டு மிருகங்களும் கோபமும் கொதிப்பும் குரோதமும் கொண்டு கர்ஜித்தன. சுற்று வட்டாரத்து மலைகளெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கின. கீர்த்தி தன் இரு

காதுகளையும் இறுக்கிப் பொத்திக் கொண்டான். அக்கினியும் பனியும் மாறி மாறி உறுமித் தங்களது பலத்தையும் கோபத்தையும் காண்பித்துக் கொண்டிருந்தன. ஆனால் ஒவ்வொன்றும் வெகு வெகு தூரத்துக்கப்பால் விலகித் தானிருந்தன. பனி அரக்கன் தன்னுடைய குளிர்க் குகைக்குள் போய் முடங்கிக் கொண்டதானது, குறிப்பிட்ட எல்லைக்குள் அக்கினி அரக்கன் வரட்டும் என்று காத்திருந்தது போலிருந்தது. எந்த விநாடியும் தனது விரோதியின் பயங்கரமான தாக்குதலை நாலா திசைகளிலிருந்தும் எதிர்பார்த்தபடி அக்கினி அரக்கன் வாயைத் திறந்து திறந்து தீ ஜ்வாலைகளை உமிழ்ந்தபடி வழியெல்லாம் சாம்பலாக்கிக் கொண்டு மெள்ள மெள்ள முன்னேறிக் கொண்டிருந்தது.இவ்விரு பயங்கர மிருகங்களும் மோதிக் கொள்வதைக் காணத் துடிப்போடு காத்துக் கொண்டிருந்தான் கீர்த்தி. இரண்டு கோர மிருகங்களும் கோபமாகக் குமுறி எழுப்பும் கூச்சலால் அந்தப் பிராந்தியமே பீதி கொண்டு நடுங்கிக் கொண்டிருந்தது.

# அத்தியாயம் - 11

அதோ ஒரு பயங்கரமான போர். தன்னுடைய பரம விரோதியான அக்கினி அரக்கனின் பெயரைக் கேட்டதும் பனி அரக்கனிடம் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு கீர்த்தி வியந்து போனான். தன்னை நோக்கி வந்து கொண்டிருந்த அந்தப் பனி மிருகம் வெகு வேகமாகத் தனது சீதளக் குழியை நோக்கி விரைந்தது. போகும் போது சுற்றுச் சூழலில் இருந்த பாறைகளை எல்லாம் தனது பயங்கரமான மூச்சுக் காற்றை ஊதி எங்கும் எதிலும் பனிப்படலங்களைப் பாளமாக உறையும்படி செய்து விட்டுப் போயிற்று. கண்ணுக்கெட்டிய தூரம் வரை எல்லா இடங்களையும் பனி மூடியது. எங்கு நோக்கினாலும் தகதகவென்று பனிக்கட்டிகள் ஜ்வலித்துக் கொண்டிருந்தன. மிகக் கடுமையான சீதளத்தை உற்பத்தி செய்ததனால் பச்சை மரங்கள் எல்லாம் தங்கள் இலைகளை உதிர்த்து மொட்டையாக நின்றன. வானத்திலே பறந்து கொண்டிருந்த பறவைகள் பனி

அரக்கனுடைய சீதள மூச்சுக் காற்றின் குளுமை தாங்காமல் விரைத்துப் போய்க் கீழே விழுந்தன. இப்படிப் பனி அரக்கன் தனது இருப்பிடம் நோக்கிச் செல்லும் போது அந்தச் சூழ்நிலையைச் சொல்லுக்கு அடங்காத குளிர்ச்சிக்கு உள்ளாக்கி விட்டது.

பனி அரக்கனின் இந்த முன்னேற்பாடுகளையெல்லாம் முறியடிக்கும் வல்லமை அக்கினி அரக்கனுக்கு உண்டா? பொறுத்திருந்து பார்ப்போம் என்று ஆவலுடன் அதன் வரவை எதிர்நோக்கி நின்றான் கீர்த்தி. அக்கினி அரக்கனும் மூர்க்காவேசத்துடன் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தான். தீக்கொழுந்து போன்ற தனது இறக்கைகளை வீசிக் கொண்டு பறந்து வந்தான். அது அருகே நெருங்க நெருங்கப் பனி அரக்கனால் உருவாக்கப்பட்ட பனிக்கட்டிகளெல்லாம் உருகலாயின. அதனால் நெருப்பரக்கனுடைய உஷ்ணம் அந்தப் பிராந்தியத்தில் அமுங்கிப் போயிற்று. வேறு இடமாக இருந்தால் அதனுடைய கோபத்துக்கும் சீறலுக்கும் அது கக்கிய தீ ஜ்வாலைக்கும் எல்லாம் வெந்து

சாம்பலாகிப் போயிருக்கும். ஆனால் அத்தனை வெப்பத்தையும் பனி அரக்கனின் சீதளம் 'ஸ்வாஹா' செய்து விட்டதைக் கண்டு கீர்த்திக்கு வியப்பான வியப்பு.

மிருகங்கள் இரண்டும் ஒன்றை ஒன்று தாக்குவதற்கு ஏற்ற தூரத்தில் நெருக்கமாக வந்தன. இனிமேல்தான் யார் பலசாலி என்று தெரிய வேண்டும் என்று ஆவலுடன் உன்னிப்பாகக் கவனிக்கலானான் இளவரசன் கீர்த்திவர்மன். திடீரென்று நெருப்பு அரக்கனின் உடலிலிருந்த திகுதிகுவென்று நீலமும் மஞ்சளுமாகக் குபீர் குபீர் என்று தீப்பிழம்புகள் கொழுந்து விட்டு எரிந்தன. அதன் மூக்குத் துவாரங்களிலிருந்து நீரூற்றைப் போல் நெருப்புப் பீச்சியடித்தது. வாயைத் திறக்கும் போதெல்லாம் பயங்கரமான ஓசையுடன், காளவாய் போல... அக்கினி அரக்கனுக்கு மூர்க்காவேசமான கோபம் வந்தால் எப்படி இருக்கும் என்றபதைக் கண்கூடாகக் கண்டான் கீர்த்தி. எரிமலையே இடம் பெயர்ந்து வந்தது போலத் தனது நெருப்புக் கைகளால் பனி அரக்கனின் உடலில் ஓர் அடி கொடுத்தது அது.

அடுத்த விநாடி பனி அரக்கனிடமிருந்து நீராவி யந்திரம் வெடித்தது போல ஒரே வெண்புகையாக 'ஹோ' என்ற பேரிரைச்சலுடன் நீராவி வெளிப்பட்டு அக்கினி அரக்கனையும் ஏன், அந்தப் பிரதேச முழுவதையுமே மூடிக் கொண்டது. அந்த நீராவி மூட்டத்துக்குள் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாமல் கொஞ்ச நேரம் தவித்தான் கீர்த்தி. ஆனால் இரண்டு மிருகங்களும் போரும் பயங்கரமான இடி முழக்கம் போன்ற கூச்சல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. மெள்ள மெள்ள நீராவி மூட்டத்தின் கனம் குறைந்தது. பூதாகரமான பனி அரக்கனின் உடலிலே கொள்ளிக் கட்டையைச் செருகியது போல அக்கினி அரக்கன் கடித்துக் கொண்டிருந்தான். 'ஊ' என்ற அதன் தீ வாயிலிருந்து வெளிப்படும் தீ நாக்குகள் பனி உடலைப் பள்ளம் பண்ணிக் கொண்டிருந்தன. அந்தக் காயத்திலிருந்து பனிநீர் பெருக்கெடுத்து ஓடியது. அந்த நிலையிலும் அது தன் கால்களை உறுதியாகப் பதித்து நின்று அக்கினி அரக்கனின் உடலைச் சுற்றி, வளைத்துக் கொண்டிருந்தது. மெள்ள மெள்ள அதன் உடலைத் தன் குளிர்ப்பிடிக்குள் அழுத்தி இறுக்கிக் கொண்டு அதன்

இருப்புவரைப்ப போய் விட்டது. அக்கினி அரக்கனின் உடலெல்லாம் கொள்ளிக் கட்டையில் தண்ணீர் ஊற்றினால் நெருப்பு அவிந்து கரிக்கட்டை ஆகுமே அப்படி ஆகிக் கொண்டிருந்தது. அந்த வேதனை தாங்காமல் அக்கினி அரக்கன் ஆயிரம் காண்டா மிருகங்கள் ஒன்றாகக் கூச்சலிடுவது போல் பயங்கரமாகக் கதறியது. அதன் பிடிக்குள் அகப்படாத முன்னங்கால்களினால் பனி அரக்கனின் பளிங்கு உடலையும் முகத்தையும் வெறி கொண்டு மாறி மாறி தாக்கியது. கொம்பினால் குத்திக் குதற முற்பட்டது. இத்தனைக்கும் பனி அரக்கன் தன் பிடியைத் தளர்த்தவில்லை. அந்தத் தாக்குதலை அலட்சியமாக உதறி விட்டுத் தன் உடலை உலுக்கிக் கொண்டது. அக்கினியின் தாக்குதலால் அதன் பனி உடலின் பல பாகங்களில் காயம் பட்டிருந்தது. அதிலிருந்து ஊற்றென நீர் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. இருந்தாலும் அது தன் பலத்தை இழக்கவில்லை. மேலும் மேலும் அதைத் தன் பிடிக்குள் அழுத்த அக்கினி அரக்கனின் உடலைத் தழுவியபடி மேல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது பனி அரக்கன்.

கீர்த்தி வியப்பினால் கண் இமைக்கவில்லை. 'பயங்கரமான நெருப்பு எப்படி உஷ்ணமிழந்து போய் விட்டது! பனி நீராவியானாலும் பலம் குன்றவில்லையே!' ஆனால் இரண்டு மிருகங்களில் கீர்த்திக்கு அக்கினி அரக்கனைத்தான் பிடித்திருந்தது. விரோதியானாலும் கொடியவனாலும் பார்ப்பதற்குக் கௌரவமான மிருகம் அக்கினி அரக்கன்தான். பனி அரக்கனின் பூதாகரமான தலையும் நீண்ட கழுத்தும், மொழுமொழு உடலும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத அமைப்பு. சுத்த அவலட்சணம். 'இரண்டு மிருகங்களையும் மோத விட்டவன் இப்படி மௌனமாக இருப்பது முறையற்ற செயல்' என்று எண்ணினானோ என்னவோ திடீரென்று கூச்சலிட்டான் கீர்த்தி.

"பனி அரக்கனே! விடாதே, உன்பிடியைத் தளர்த்தாதே... ம்... வெற்றி உனக்கே' என்றவன், உடனே குரலை இன்னும் உயர்த்தி "அக்கினி அரக்கனே! கலங்காதே!.. நெருப்பை

உமிழ்வதை நிறுத்தாதே! உன் விரோதியை உருக்கியே ஒழித்துக் கட்டு!" என்று உற்சாகமூட்டினான்.

அத்தகைய பயங்கரமான, மூர்க்கமான போராட்டத்தை அதுவரையில் யாருமே பார்த்திருக்க முடியாத. வல்லமையில் ஒன்றுக்கொன்று சளைக்கவில்லை.

கீர்த்தி பார்த்துக் கொண்டிருக்கும் போதே போராட்டத்தில் திடீரென்று ஒரு திருப்பம் ஏற்படுவதைக் கண்டான். பனி அரக்கன் தான் பிடித்திருந்த அக்கினி அரக்கனைத் தன் பிடியிலிருந்து விட்டு விட்டு மெள்ள மெள்ள மெள்ளப் பின் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. அதன் உடலிலிருந்த ஆங்காங்கே 'புஸ்புஸ்' என்று சீறியபடி கிளம்பும் நீராவியின் வேகத்திலிருந்து பனி அரக்கனின் உடலில் ஏராளமான காயங்கள் ஏற்பட்டு விட்டதை உணர்த்தின. அக்கினி அரக்கனின் நிலையும் மோசமாகத்தான் இருந்தது. அதன் பின்னங்கால்களும் இடுப்புவரை உள்ள பாகமும் கரிக்கட்டையாகக் கறுத்து விட்டன. அந்தப் பகுதிகளில் அதன் உடலில் நெருப்போட்டம் அற்றுப் போய்

விட்டது. அதன், கொம்புகளும் கூடக் கறுப்பாகி விட்டன. அதன் முகமும் இதயப் பகுதியும் மட்டுமே செய்தணலாக தகதகத்துக் கொண்டிருந்தது. ஆனாலும் அதற்குக் கூட அத்தனை வெப்பமோ தகிப்போ இல்லை.

மெள்ளப் மெள்ளப் பின்வாங்கும் பனி அரக்கனை நோக்கிக் கத்தினான் கீர்த்தி. "விடாதே, பின்வாங்காதே பனி அரக்கனே! அக்கினியின் உடலில் பாதி அணைந்து விட்டது. அதன் உடலில் உஷ்ணம் தணிந்து கொண்டிருக்கிறது. முழு மூச்சுடன் இன்னும் ஒரு தாக்குதல் நடத்தினால் அதைக் குளிர வைத்து விடலாம். பனி அரக்கனே பணிந்து விடாதே!"

கீர்த்தியின் தெம்பூட்டும் வார்த்தைகளினால் திரும்பிக் கொண்டிருந்த பனி அரக்கன் சட்டென்று நின்றது. அதன் உடலிலிருந்து பீறிட்டுக் கொண்டிருந்த நீராவி நின்றது. 'கிரீச்'சென்று பயங்கரமாக ஓலமிட்டது. அது பலமிழந்து போயிருந்ததென்னவோ உண்மைதான். ஆனாலும் பனி அரக்கன் தன் உடலின் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு

திரும்பியது. வெகு வேகமாகப் பனிப்பாறைகளிலே வழுக்கியபடி அக்கினி அரக்கை மறுபடியும் சூழ்ந்து சுற்றிக் கொண்டது. அக்கினி அரக்கனின் உடலில் முன் போல் அத்தனை தகிப்பு இல்லை.

அக்கினி அரக்கனும் லேசுப்பட்டதா? அடிபட்ட புலி போல, காயம் பட்ட பாய்ச்சல் காளை போல, உறுமிக் கொண்டு நின்றது. அதன் பின்னங்கால்கள் முழங்கால் வரை பனியில் புதைந்து கிடந்தன. அதில் தகிப்பில்லை; வெப்பமில்லை, நெருப்பணைந்து போய் உணர்விழந்து கிடந்தன. பனி அரக்கன் தன் உடல் மீது சுற்றிக் கொண்டு ஏறுவதைக் கூடப் பாவம் அதனால் தடுக்க முடியவில்லை. அத்தனை தணலிழந்து, நெருப்பிழந்து, தகிப்பிழந்து போய்க் கிடந்தது அக்கினி அரக்கன்.

"அக்கினி அரக்கனே!" கத்தினான் கீர்த்தி. "ஏன் இப்படிச் செயலிழந்து போய் விட்டாய்? கலங்காதே உன் பலம் இன்னும் போய் விடவில்லை. பனி அரக்கன் படுகாயமடைந்து விட்டான். பயப்படாதே. ஒரு போடு போடு . உருகி உருக்குலைந்து

போவான். என்று உற்சாகமூட்டினான். அவனுக்குப் பயம், பனி அரக்கன் வெற்றி பெற்றால் அதன் பயங்கரமா சீதளத்திலே மூழ்கிக் கிடக்கும் அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் வெட்டி எடுப்பது ரொம்பக் கடினமான காரியமாயிற்றே என்று.

கீர்த்தியின் வார்த்தைகளால் தெம்பு கொண்ட அக்கினி அரக்கன் தன் உயிர் மூச்சையெல்லாம் நெருப்பாக்கி ஊது உலையைப் போல அதில் உஷ்ணத்தை உற்பத்தி செய்து தன் நெஞ்சருகே வந்துள்ள பனி அரக்கனின் முதுகெலும்பிலே போய்ப் பதியும்படி தனது ஈட்டி போன்ற பற்களைப் பதித்துக் குதறியது. அதே விநாடியில் பனி அரக்கன் தன் முழு பலத்துடன் அக்கினி அரக்கனின் இதயத்தை அழுத்திப் பிடித்து அங்கு மட்டுமே கனன்று கொண்டிருந்த நெருப்பை அவித்துப் 'புஸ்' என்று நீராவியாகப் போகச் செய்தது. ஒரே சமயத்தில் இரண்டு கொடிய மிருகங்களும் ஒன்றை ஒன்று மாய்த்தபடி தரையில் சாய்ந்தன. பிரும்மாண்டமான காளவாய் அவிந்தது போலிருந்தது அக்கினி அரக்கன் இறந்து கிடந்த நிலை. பனி அரக்கன் இருந்த

இடத்திலிருந்து ஒரு பெரிய நதி உற்பத்தியாகி ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த உருவத்தைக் காணோம். அந்த ஆற்று நீரிலே அக்கினி அரக்கனின் உடல் கரிக்கட்டையாகி நமுத்துப் போய் விரைத்துக் கிடந்தது.

கீர்த்தி தன் இருப்பிடத்திலிருந்து வெகு வேகமாகக் கீழிறங்கிப் போனான். இரும்பைப் போல் கிடந்த அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் வெட்டி எடுத்துக் கொண்டான். ரொம்பக் கனமாக இருந்தது. ஆனால் ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்களைக் கடக்கும் பாதரட்சைகளை அணிந்து கொண்டிருந்ததினால் நாலே தப்படிகளில் அவற்றோடு தன் அரண்மனையை அடைந்து விட்டான். நாட்டை நாசமாக்கி மக்களைப் பீதியில் ஆழ்த்திக் கொண்டிருந்த இரண்டு கொடிய மிருகங்களையும் ஒரே சமயத்தில் மாய்த்ததில் அவன் மனம் மகிழ்ச்சியால் நிரம்பியிருந்தது.

அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் மூலையில் போட்டு விட்டு 'உஸ், அப்பாடா' என்று பெருமூச்சு

விட்டான். வெப்பமும் குளுமையும் மாறி மாறித் தாக்கியதனால். அவன் உடல் வெகுவாகக் களைத்துப் போயிருந்தது. பொழுது சாயும் நேரமாகி விட்டதைக் கண்ட போது அவனது உடலில் பரபரப்பு ஏற்பட்டது. அன்று இரவு மங்களகிரியில் குந்தளவல்லி கொடுக்கும் விருந்தில் கலந்து கொள்ள வருவதாக வாக்களித்திருந்தது நினைவுக்கு வந்தது. உடல் சோர்வு ஓடியது. அதே வேகத்தில் குளியலறைக்கு ஓடினான் கீர்த்தி.

உன்னதமான உடையை வரவழைத்து உடுத்திக் கொண்டான். அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் ஒரு பட்டுத் துணியால் பக்குவமாகச் சுருட்டிக் கொண்டான். குந்தளவல்லியிடம் அதைக் கொடுக்கும் போது அவள் முகத்தில் தோன்றும் வியப்பு, மகிழ்ச்சி, மலர்ச்சி இவைகளைக் கற்பனைக் கண்களால் கண்டு மகிழ்ந்தபடியே பறக்கும் கம்பளத்தில் அமர்ந்தபோது இருட்டி விட்டது.

மங்களகிரி அரண்மனையின் உப்பரிகையில் போய்க் கம்பளம் இறங்கியது. தான் மந்திரக் கம்பளத்தில் வருவதைப்

பிறர் அறிந்து விடக் கூடாது என்பதில் அக்கறையோடிருந்தான் கீர்த்தி. ஆகவே, கம்பளத்தைச் சுருட்டிக் கொண்டு யாரும் அறியாதபடி அரண்மனையின் முக்கிய பகுதிக்கு வந்தான். அதுவரையில் உருவை மறைக்கும் குல்லாயை அணிந்திருந்தவன் அதைக் கழற்றி விட்டான். மந்திர ஜமுக்காளத்தையும் அக்கினி அரக்கனின் தலையும் வாலும் உள்ள பட்டுத் துணி மூட்டையையும் அங்கு ஒதுக்குப் புறமான ஓர் இடத்தில் பதுக்கி விட்டு குந்தளவல்லியைச் சந்திக்கச் சென்றான். அவன் மந்திரக் கம்பளத்தை மறைத்து வைத்த இடம் அரண்மனையின் சமையலறையை அடுத்துள்ள ஒரு மறைவிடம். குந்தளவல்லியிடம் 'திடும்' என்று அவள் கேட்ட பரிசுப் பொருள்களைக் கொண்டு போவது நாகரிகமற்ற செயல் என்று கருதியே கீர்த்தி அவைகளை ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுப் போனான்.

இளவரசன் தன் வாக்குப்படி விருந்துக்கு வருகை தந்ததில் குந்தளவல்லிக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. கீர்த்தியும்

அவளும் சூழ்நிலையை மறந்துபடி ஒருவரில் ஒருவர் மூழ்கி விட்டார்கள். விருந்து மண்டபத்தில் இளவரசன் வந்ததும் அங்கு கூடியிருந்தவர்கள் ஒருவிதமாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஏதோ ஒருவகையான அசாதரணத்தை அனுபவிப்பவர்கள் போல ஒருவரோடொருவர் கசமுசவென்று பேசிக் கொண்டார்கள். ஆனால் கீர்த்தியோ குந்தளவல்லியோ இவையெல்லாம் கவனிக்கவேயில்லை. கீர்த்திக்கு நல்ல பசி! சுவைத்து மகிழ்ந்தான் விருந்தை. குந்தளவல்லிக்கோ காதலே காதல்! கீர்த்தியையும் அவன் பேச்சையும் கண்டு கேட்டுச் சொக்கிப் போய்க் கிடந்தாள்! மற்றவர்களிடையே நிலவிய ஒருவிதத் தவிப்புக்குக் காரணம் என்ன? அது கீர்த்தியைப் பற்றியதுதானா! அப்படியானால் அது என்ன?

# அத்தியாயம் - 12

விருந்துக்கு வந்திருந்தவர்கள் ஒவ்வொருவராகக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். போகும் போது கூட அவர்கள் பேச்சும் பார்வையும் கீர்த்திவர்மனைச் சுற்றியே இருந்தன. மாணிக்கவர்மரின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. தன் சகோதரியின் செல்வ மகள் குந்தளவல்லியும் இளவரசன் கீர்த்தியும் இணைந்து அமர்ந்திருந்த காட்சி அவர் கண்களுக்கு விருந்தாக இருந்தது. ஆனால் மகாராஜாவின் அறிக்கையை நினைத்தபோது அவர் உள்ளமும் உடலும் நடுங்கின.

விசித்திரபுரி மன்னர் மந்தஹாசரிடமிருந்து ஒரு விசேஷத் தூதுவன் அவசரமான சுற்றறிக்கையோடு ஓடோடி வந்திருந்தான். மாணிக்கவர்மரிடம் அது பற்றிய மகாராஜாவின் கடிதத்தைக் கொடுத்து விட்டு மங்களகிரி வீரர்களின் உதவியுடன் மன்னர் பிரானின் அறிக்கையை நகரின் நாற்சந்திகள்,

முச்சந்திகள், அங்காடி, பிரதான ராஜபாட்டை எங்கிலும் தானே இருந்து ஒட்டிவிட்டுப் போயிருந்தான். நகரில் எங்கும் எல்லோரும் அதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். மாணிக்கவர்மரின் முகத்தில் கவலை இருள் படிந்திருந்ததற்கும் மகாராஜாவின் அந்த அறிக்கைதான் காரணம்.

மாணிக்கவர்மர் மறுபடியும் கீர்த்தியின் பக்கம் திரும்பிப் பார்த்தார். களங்கமில்லாத, கவலையில்லாதவனாக எதைப் பற்றியோ குந்தளவல்லியிடம் பேசிக் கொண்டிருந்தான். அவன் பேச்சைக் கேட்டு முத்து உதிர்வது போல மோகனமாகச் சிரித்துக் கொண்டிருந்தாள் குந்தளவல்லி.

'இளவரசருக்கு மகாராஜாவின் அவசர அறிக்கை பற்றி எதுவும் தெரியாதோ. தெரிந்திருந்தால் இத்தனை தெளிவோடு உரையாடிக் கொண்டிருக்க மாட்டாரே' என்ற எண்ணம் முதன்முதலாகத் தோன்றியது மாணிக்கவர்மருக்கு. காதலர்களின் அருகில் சென்றார். இளவரசன் கீர்த்தியிடம் "இளவரசே! கொஞ்சம் என்னோடு வருகிறீர்களா? ஒரு முக்கியமான விஷயம்" என்றார்.

பிறகு குந்தளாவின் பக்கம் திரும்பி, "குந்தளா! உன் அம்மா ரொம்ப நேரமாக உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள் அந்தப்புரத்துக்குப் போ" என்று அவளை அனுப்பினார். பிறகு கீர்த்தியை அழைத்துக் கொண்டு விருந்தினர்களின் சூழலிலிருந்து சற்று ஒதுக்குப்புறமான இடத்துக்கு அழைத்துப் போனார். சிங்காரித்துப் பொட்டிட்டுக் கொள்ளும் ஓர் அற்புதமான கலையழகுள்ள சிலையருகே போய் நின்றார். பார்ப்பவர்களுக்கு இளவரசனும் மாணிக்கவர்மரும் அந்த சிலையின் அற்புத எழில் பற்றிப் பேசுவதாகத் தோன்றியது.

"இளவரசே! தங்களைச் சூழ்ந்துள்ள அபாயம் பற்றி ஏதுமே தெரியாதே உங்களுக்கு?" என்றார்.

"அபாயமா? இன்னுமா?" என்று கேட்டான் கீர்த்தி. அவன் உள்ளத்தில், 'அக்கினி அரக்கனைக் கொன்று விட்டோமே; இன்னும் எந்த அபாயம்?' என்ற வினாவே மேலோங்கி நின்றது. மாணிக்கவர்மருக்கோ கீர்த்தி வர்மன் அக்கினி அரக்கனோடு போரிட்டு அதைக் கொன்றது தெரியாது. ஆகவே "அபாயம்தான்

இளவரசே!" அவர் தொய்ந்த தலையோடு துவண்ட குரலில் "இதோ இந்த இரு அறிக்கைகளையும் பாருங்கள்" என்று கூறியபடி தமது மேலங்கியின் உன்பையில் வைத்திருந்த இரு சுற்றறிக்கைகளையும் எடுத்துக் கீர்த்தியிடம் கொடுத்தார். "இவ்விரு அறிவிப்புகளும் இந்த நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒட்டப்பட்டுள்ளன. ஆனால் உங்கள் கண்ணில் படவில்லை போலும்."

ஊருக்குள்ளோ, நாடு நகரத்திலோ நடந்தோ அல்லது குதிரை மீதோ வந்திருந்தாலல்லவா அவனுக்கு நாட்டு நடப்புத் தெரிந்திருக்கும். அவன்தான் மந்திரக் கம்பளத்திலும் மாயப் பாதரட்சையிலும் பவனி வருகிறானே! நிதானமாக மாணிக்கவர்மர் கொடுத்த அறிக்கையைப் பார்த்தான். முதல் அறிக்கை பேசியது மகாராஜா மந்தஹாஸரின் குரலாக:

*இதனால் சகல விதமான பிரஜைகளுக்கும் அறிவிப்பது என்னவென்றால் -- என்னுடைய மூத்த மைந்தன் கீர்த்தி வர்மன் மன்னிக்க முடியாத பல குற்றங்களைச் செய்து அந்நாட்டில்*

குழப்பத்தை விளைவித்ததற்காக நான் அவனை நாடு கடத்தி விட்டேன்.

குற்றங்கள்: ஒன்று - விசித்திரபுரி நாட்டை நாசத்துக்கு இழுத்துக் கொண்டு போகும் பயங்கர அக்கினி அரக்கனை அழிக்க மறுத்தது. இவன் செய்ய வேண்டிய பணியில் இவனது சகோதரர்களை ஏவி விட்டு அவர்கள் உயிரை இழக்கச் செய்தது.

இரண்டு - மன்னர் மகனாக கௌரவமாகப் பழகாதது. மங்களகிரி மக்களிடையே கிலியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் வகையில் கேவலமாக நடந்து கொண்டது.

மூன்று - விசுவாசமிக்க இந்த நாட்டு மக்களின் மனத்திலே விரோதத்தையும் புரட்சியையும் உண்டாக்கும் விதமாக நடந்து கொண்டு எனக்கு எதிராகச் செயல்படுவது.

ஆகிய குற்றங்களுக்காக கீர்த்திவர்மன் நாடு கடத்தப்படுகிறான். புரட்சிக்காரனான அவருக்கு யாராவது எந்த வகையிலாவது உதவினாலோ, ஆதரித்தாலோ, அவனோடு நட்பு

*கொண்டாலோ அவர்களும் துரோகிகளாகக் கருதி தண்டிக்கப்படுவார்கள்.*

*தலைமறைவாகி திரியும் நாடு கடத்தப்பட்டிருக்கும் இளவரசனை உயிரோடு கொண்டு வந்து ஒப்புவிப்பவர்களுக்குப் பத்தாயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப்படும்*

*இப்படிக்கு,*

*மந்தஹாச மகாராஜா*

*விசித்திரபுரி*

அடுத்த அறிக்கையைப் பார்த்தான் கீர்த்தி.

*நமது நாட்டின் எல்லையில் இருந்து கொண்டு பல இன்னல்களைச் செய்து வருகிறது கொடிய மிருகமான அக்கினி அரக்கன். அதன் அட்டகாசத்தினால் விசித்திரபுரியில் பஞ்சமும் பட்டினியும் தவிரப் பல கஷ்டங்களையும் மக்களாகிய நீங்கள் அனுபவித்து வருகிறீர்கள்.*

*ஆகவே ---*

*குடிமக்களில் யார் ஒருவர் அந்தக் கொடிய மிருகத்தைக் கொன்று அதன் கொம்புகளையும் வாலையும் அதன் அடையாளமாகக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்குப் பத்தாயிரம் பொற்காசுகளும் விசித்திரபுரியின் இளவரசுப் பட்டமும் அரச குடும்பத்து அழகியான மஞ்சுளாவின் கணவனாகும் பாக்கியமும் காத்திருக்கின்றன.*

*இப்படிக்கு*

*மந்தஹாச மகாராஜா.*

*விசித்திரபுரி*

**அறிக்கைகளைப் படித்த கீர்த்தியின் முகத்தில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை. "ம்..." என்றதோரு பெருமூச்சுடன் அந்த அறிக்கைகளை மடித்து மாணிக்கவர்மரிடம் நீட்டியபடியே, "என் அப்பா இத்தனை அழகாக அறிக்கைகளைத் தயார் செய்திருக்கிறாரே என்று எனக்கே வியப்பாக இருக்கிறது.**

சரி, நாம் விருந்தாளிகளுடன் கலந்து கொள்ளப் போவோமா?" என்று கேட்டான் சர்வ சாதாரணமாக.

"இளவரசே!" என்றார் மாணிக்கவர்மர். அவர் குரலில் பீதி கப்பி நின்றது. "மங்களகிரியின் தெருவெல்லாம் மகாராஜாவின் வீரர்கள் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பார்வையிலிருந்து தப்பி நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள் என்று நாங்கள் வியந்து கொண்டிருக்கிறோம். இந்த அரண்மனையில் இப்போதைக்கு நீங்கள் பத்திரமாக இருக்கிறீர்கள். ஆனால் இதுவும் கூட -- அதாவது மன்னிக்க வேண்டும் இளவரசே. தங்களை நான் என் பாதுகாப்பில் அதிக காலம் வைத்திருக்க முடியாதே. விசித்திரபுரி மன்னரின் விரோதியாவதை நான் விரும்பவில்லை. அதே சமயம் உங்களைப் புறக்கணிக்கவும் என்னால் முடியவில்லை... " என்றார் சிற்றரசரான மாணிக்கவர்மர்.

"மகாராஜாவுக்கு எதிராகப் புரட்சிக் கொடு உயர்த்தவோ போராடவோ வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். உங்கள்

அபிப்பிராயம் என்ற?" என்று கேட்டான் கீர்த்தி. முகத்தில் மாறாத அதே முறுவலுடன்.

"அப்படியானால் மகாராஜாவின் இந்த அறிக்கைகளைப் பற்றித் தங்கள் முடிவு என்ன?"

"இருபதாயிரம் பொற்காசுகளையும் பரிசாகப் பெற்றுக் கொள்ளுவோம். இருபது ஆயிரம் என்பது சாதாரணத் தொகையா என்ன? அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இளவரசன் இன்றிரவே உயிருடன் மகாராஜாவின் முன்னால் ஆஜராவான்! அது மட்டுமல்ல, அவர் இரண்டாவது அறிக்கையின் படி அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும் அவர் முன் சமர்ப்பிக்கப் படும்! ஆனால் அந்த இளவரசன் தன் மாமன் மகளான மஞ்சுளாவை மட்டும் மணக்க விரும்ப மாட்டான்!"

கீர்த்தியின் வார்த்தைகள் மாணிக்கவர்மரின் விழிகளை விசாலமாக்கிய அதே சமயத்தில் ஒரு சந்தேகமும் புகையாக வந்து சூழ்ந்து கொண்டது.

"ஆனால் இளவரசே! மகாராஜாவின் இருப்பிடம் இங்கிருந்து முந்நூறு மைல்களுக்கப்பால் உள்ளதே. இன்றிரவே நீங்கள் எப்படி...? அதுவுமன்னியில் என் அரண்மனைப் பிரதான சமையல்காரனான நளசர்மா திடீரென்று விருந்து ஆரம்பமாவதற்கு முன்பு மாயமாக மறைந்து போயிருக்கிறான். அவன் மறைவு எனக்குக் கவலையையும் பயத்தையும் தருகிறது. தாங்கள் இங்கு இருப்பதாக மகாராஜாவின் பிரதான தளபதிக்குத் தகவல் தருவதற்காகப் போய் விட்டானோ என்று சந்தேகிக்கிறேன்" என்றார் மாணிக்கவர்மர்.

"நீங்கள் கவலையோ கலக்கமோ அடைய வேண்டாம். எத்தகைய சிக்கலான சூழ்நிலையையும் என்னால் சமாளிக்க முடியும். அரசரின் அறிக்கைகளை மறந்து விடுங்கள். அதை விட முக்கியமான ஒரு காரியம் இருக்கிறது. குந்தளவல்லிக்கு நான் ஒரு பரிசு அளிப்பதாக வாக்களித்திருந்தேன். என்ன பரிசுப் பொருள் என்று கேட்கிறீர்களா? வேறொன்றுமில்லை. அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும்தான்! குந்தளவல்லியை

அழைத்து வாருங்கள். அவள் கண்கள் என் பரிசுப் பொருள்களைக் கண்டு மின்னிச் சிரிப்பதை நான் காண வேண்டும்" என்றான் கீர்த்தி.

மாணிக்கவர்மருக்கு மூச்சு நின்று விட்டது போலிருந்தது. 'அக்கினி அரக்கனின் கொம்பும் வாலுமா?' அவருக்குப் பேச முடியவில்லை. அதிசயத்திலும் அதிசயமாக இருக்கிறதே. இத்தனை வீரரான, பராக்கிரமசாலியான, அழகான இளவரசரையா மகாராஜா நாடு கடத்தியிருக்கிறார்?" மாணிக்கவர்மருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. பைத்தியக்காரரைப் போல் 'குந்தளா, குந்தளா!'; என்று கூவிக் கொண்டே அந்தப்புரத்துக்கு ஓடினார். அவளைக் கையோடு அழைத்து வர பணியாளர்களிடம் கூறிக் கூட்டி வரச் சொல்ல வேண்டும் என்பதையும் மறந்து விட்டார். அத்தனை பரவசம், பதற்றம், மகிழ்ச்சி, வியப்பு.

"குந்தளா... குந்தளா...! ஓடிவாயேன்! உனக்கு இளவரசர் என்ன கொண்டு வந்திருக்கிறார் என்று வந்து பாரேன்..." என்று

கூவிக் கொண்டே ஓடி வரும் மாணிக்கவர்மரைக் கண்டு குந்தளவல்லி மனோகரமாகச் சிரித்துக் கொண்டே அவர் கையைப் பற்றியபடி அமைதியாக விருந்து மண்டபத்தை நோக்கி நடந்தாள். கீர்த்தி அவளுக்காகக் கொண்டு வந்துள்ள பரிசுப் பொருளைப் பற்றி அவளிடம் அவன் சொல்லாவிட்டாலும் அது என்னவாக இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டு விட்டாள் அவள்.

"இளவரசே, இதோ குந்தளா...! எங்கே உங்கள் பரிசுப் பொருளைக் காட்டுங்கள்!" என்று பரபரத்தார் மாணிக்கவர்மர். கீர்த்திக்கு அவர் தவிப்பு தமாஷாக இருந்தது. முகமெல்லாம் சிரிப்பாக, மௌனமாகௌ மோகனமாக நின்று கொண்டிருக்கும் குந்தளவல்லியின் கரங்களைப் பற்றியபடி அவளை அந்த விருந்துக் கூடத்திலிருந்து வெளியே அழைத்துப் போனான். மாணிக்கவர்மரும் அவர்களைப் பின்தொடர்ந்து போனார். மந்திரக் கம்பளத்தையும் அக்கினி அரக்கனின் தலை வால் அடங்கிய பட்டுத் துணி மூட்டையையும் வைத்த இடத்துக்கு

வந்ததும் கீர்த்தியின் மந்தஹாசமான முகம் வெளுத்தது. அவன் தலை சுற்றுவது போலிருந்தது.

அவைகளை அங்கு காணவில்லை! எத்தனை பெரிய அதிர்ச்சி, அவமானம்! ஒரு சில விநாடிகள் யாருமே பேசவில்லை. கீர்த்தியின் வெளுத்த முகம் மாணிக்கவர்மரிடம் கிலியை ஏற்படுத்தியது. குந்தளவல்லியோ ஏதோ விபரீதம் நடந்து விட்டதென்று ஊகித்துக் கொண்டாள்.

அந்த நிலையிலும் கீர்த்தி தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசினான்: "ஐயா, தங்கள் அரண்மனைப் பணியாளர்களை அழையுங்கள். முஸ்லீம்கள் தங்கள் தொழுகைக்காக கீழே விரித்துக் கொள்ளும் கம்பளம் போன்றதும், வேலைப்பாடு மிகுந்ததுமான ஒரு ரத்தினக் கம்பளத்தையும் பட்டுத் துணி மூட்டையையும் இங்கு பார்த்தார்களா என்று விசாரியுங்கள்" என்றான்.

மாணிக்கவர்மர் கை தட்டிக் குரல் கொடுத்தார். அரண்மனைப் பணியாளர்கள் அத்தனை பேர்களையும் அங்கு வந்து கூடும்படி ஆணையிட்டார். அவர்குள் உதவி சமையல்காரர்களும் பரிசாரகர்களும் இருந்தார்கள். அவர்களிடம் கீர்த்தி விவரித்தபடி அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருள்களைப் பற்றிக் கேட்டார் மாணிக்கவர்மர். யாராலும் அதற்கு விடை கூற முடியவில்லை. கொஞ்ச நேரம். பிறகு உதவிச் சமையல்காரன் தயங்கியபடி முன்வந்து, "அரசே நீங்கள் குறிப்பிடும் பொருள்களை நளசர்மாதான் தன்னுடன் எடுத்துப் போனார்" என்றான.

"நளசர்மா எங்கே போனான்!"

"தெரியவில்லையே. இப்படி ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துதான் இங்கு இத்தனை நாட்கள் இருந்தான் போலிருக்கிறது" என்றான் உதவி சமையற்காரன்.

"சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தா?" கிரீச்சிட்டது மாணிக்கவர்மரின் கோபக் குரல்.

"ஆம்..." என்றான் அவன். அங்கு மறுபடியும் பயங்கர அமைதி நிலவியது..

# அத்தியாயம் - 13

உதவிச் சமைல்காரன் கூறியதைக் கேட்ட மாணிக்கவர்மருக்கு பேசவே நா எழவில்லை. நளசர்மாவிடம் அவர் ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தார். அவருடைய அன்புக்குப் பாத்திரமானவர்களுக் அவனும் ஒருவன். சமையல் கலையில் வல்லவன். விதம் விதமான பதார்த்தங்களை வாய்க்கு ருசியாகத் தயாரிப்பதில் சமர்த்தன். அப்படிப்பட்ட நளசர்மாவுக்கு மாணிக்கவர்மர் பல சலுகைகளை வழங்கி இருந்தார். அப்படிப்பட்டவனா இப்படி ஒரு காரியம் செய்து விட்டு ஓடிப் போயிருக்கிறான். அதுவும் எப்படி? இளவரசருடைய உடைமைகளைத் தூக்கிக் கொண்டல்லவா போய் விட்டான்? நடந்ததை விவரமாகக் கூறும்படி வற்புறுத்தினார் உதவி சமையல்காரனிடம். அவனும் நடந்தது நடந்தபடி கூறினான்.

"இளவரசர் சுருட்டிய ஜமுக்காளத்துடன் அந்தப் பக்கம் வந்த போதுதான் நளசர்மா ஜீராவில் மிதக்கவிட்டிருந்த குலாப்ஜாமூன்களை ஒரு தடவை கிளறி விட்டு விட்டு பதிர்ப்பேணிக்குப் பாலைச் சுண்டச் சுண்டக் காய்ச்ச உத்தரவிட்டுக் கொண்டிருந்தார். அநேகமாக விருந்துச் சமையல் பூர்த்தியாகி இருந்தது. முகத்து வியர்வையை தோளிலிருந்த காசித் துண்டினால் துடைத்துக் கொண்டே இங்கு வந்தார் நளசர்மா. நானும் அவருடைய வெள்ளி வெற்றிலைப் பெட்டியுடன் பின்தொடர்ந்தேன். இன்னும் சிலரும் அவருடன் இங்கு வந்தோம். ஏனென்றால் சமையல் அறையில் எல்லா வேலைகளுமே முடிந்து விட்டன.

"இங்கு வந்த நளசர்மா அதோ அந்த மூலையில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த இளவரசருடைய ஜமுக்காளத்தின் மீது போய் உட்கார்ந்தார். 'இன்னும் சற்று நேரத்தில் இலை போடலாம்' என்றவர், 'உஸ்... அப்பாடா!' என்று மேல் துண்டை சுற்றி விசிறிக் கொண்டே, இங்கு வந்து இருபது வருஷங்களுக்கு மேல் ஆகப்

போகிறது. என்ன உழைப்பு? எத்தனை விருந்துகள், கேளிக்கைகள், கொண்டாட்டங்கள்... போதுமடா சாமி...! மந்தஹாச மகாராஜாவுக்கு நான் உழைத்திருந்தேனானால்? என் கதையே வேறு விதமாக இருந்திருக்கும். என்னை ஒரு சமஸ்தானாதிபதியாக்கியிருப்பார். ம்... எதற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா? மந்தஹாசர் நல்ல சாப்பாட்டுப் பிரியர். இந்தக் கணத்தில் நான் அவர் அவையில் -- அவர் முன்னிலையில் -- அவருக்குப் பால் போளி பரிமாறிக் கொண்டிருந்தேனானால் எப்படி இருக்கும்?' என்று அவன் சொல்லி முடிக்கு முன் வில்லிலிருந்து கிளம்பி அம்பைப் போல் அவர் உட்கார்ந்திருந்த ஜமுக்காளம் குபீரென்று உயரக் கிளம்பியது நளசர்மாவுடன். அதோ அந்தச் சாளரத்தின் வழியே விருட்டென்று வெளியே பாய்ந்து பறந்தது ஆகாய வீதியிலே. முதலில் நளசர்மா பீதியினால் 'ஓ' என்று கத்தினார். தடுமாறியவர் ஜமுக்காளத்தில் படுத்தபடி அதன் முனையை இறுகப் பற்றிக் கொண்டார். ஜமுக்காளத்தினுள்ளிருந்த அந்த முட்டையும் அவர் அருகிலேயே இருந்தது. நாங்கள்

பிரமிப்படைந்து சாளரத்துக்கு ஓடினோம். வான வீதியிலே நளசர்மாவைச் சுமந்தபடி தெற்கு நோக்கி அந்தக் கம்பளம் மிதந்தபடி பறந்து போய்க் கொண்டிருந்தது. நாங்கள் பார்த்துக் கொண்டே நின்றோம். வேறு என்ன செய்வது. செய்ய முடியும்? கொஞ்ச நேரம் எங்களுக்கே ஒன்றும் புரியவில்லை. நளசர்மா அப்படிப் பறந்து போனதை எங்களால் நம்பவே முடியவில்லை. இதுதான் நடந்த உண்மை" என்று முடித்தான் உதவி சமையல்காரன்.

"சரி நீ போகலாம்" என்று அவனை அனுப்பினார் மாணிக்கவர்மர். பிறகு மௌனமாக நிலா மண்டபத்தை நோக்கி நடந்தார். அவர் உள்ளத்திலே பெரிய போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. எதை நம்புவது எதை நம்பாமல் இருப்பது என்று ஒன்றுமே புரியவில்லை. இளவரசன் அக்கினி அரக்கனைக் கொன்று அதன் தலையையும் வாலையும் ஒரு துணி மூட்டையில் கொண்டு வந்து வைத்திருந்ததாகக் கூறுகிறான். அது சாத்தியமா? முதல்நாள்தான் இங்கிருந்து விடைபெற்றுப்

போனான். அதற்குள் அந்தக் கொடிய மிருகத்தைக் கொன்றிருக்க முடியுமா? முடியக் கூடிய காரியமா? நம்ப முடியவில்லை. பிரதம சமையல்காரன் நளசர்மா, ஜமுக்காளத்தில் பறந்து போனதாக உதவி சமையல்காரன் சொல்லுகிறான். அது அதை விட அதிசயமாக இருக்கிறது! இப்படி எண்ணமிட்டபடியே நிலா முற்றத்தில் நின்று கொண்டிருந்தார் மாணிக்கவர்மர். ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

அவர் மட்டுமா பேசவில்லை? அவர் கூட இருந்த கீர்த்தியும்தான் பேசவில்லை. குந்தளவல்லியும் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். மௌனத்தில் மூழ்கியிருந்த மூவரின் உள்ளங்களிலும் வெவ்வேறு விதமான எண்ணங்கள் அலை மோதிக் கொண்டிருந்தன. வெள்ளியை உருக்கி ஓட விட்டது போல நிலா வீசிக் கொண்டிருந்தது. இளந் தென்றல் இதமாக வீசிக் கொண்டிருந்தது. அவர்கள் உப்பரிகையின் மீது நின்று கொண்டிருந்ததால் மங்களகிரி நகரத்தின் இரவுக் காட்சி அற்புதமாக இருந்தது. நகரைத் தழுவினாற்போல் ஓடிய நதியில்

சில உல்லாசப் படகுகள் நிலவு காயும் இரவின் இன்பத்தை விளக்குவது போல் மிதந்து கொண்டிருந்தன.

கடைசியில் கீர்த்திதான் வாய் திறந்தான். "இது ஒரு விநோதமான அனுபவம்!" என்றான்.

"விநோதம் மட்டுமல்ல. விசித்திரம் விபரீதம் என்று கூடச் சொல்லலாம்" என்றார் மங்களகிரி அதிபர்.

"ஆனால் இதில் ஆச்சரியமோ அதிசயமோ ஏதும் இல்லை"

"என்னால் நம்பவே முடியவில்லை, இளவரசே! நளசர்மாவுக்கு நான் எத்தனை அன்பும் ஆதரவும் அளித்து வந்தேன். அவனே இப்படி...?"

"அவன் மீது குற்றமே இல்லை. எதிர்பாராது நிகழ்ந்த செயல் இது. அவன் மட்டுமல்ல. எந்த என் கம்பளத்தின் மீது யார் உட்கார்ந்தாலும் அவர்களுக்கும் அதே கதிதான் ஏற்பட்டிருக்கும். அதன் விசேஷம் பற்றி நளசர்மாவிக்குத் தெரியாது.

தெரிந்ததினால்தான் அவன் அந்த மூட்டையோடு அப்படிப் பறந்து போனான் என்பதை நான் நம்பவில்லை" என்ற கீர்த்திவர்மன, அந்தக் கம்பளத்தின் மந்திர சக்தியைப் பற்றி சுருக்கமாக அவரிடம் விளக்கினான். விரிந்த கண்களோடு குந்தளவல்லியும் கேட்டுக் கொண்டிருந்தாள். "அதில் உட்கார்ந்திருப்பவர், தான் எங்கு போக வேண்டும் என்று கூறினாலும் அவர்களை அது அங்கு கொண்டு போய் விடும். அது தெரியாமல், களைத்துப் போய் அதில் உட்கார்ந்த நளசர்மா 'நான் விசித்திரபுரியில் இருந்தால் எப்படி இருக்கும்' என்று கூறி இருக்கிறான். மந்திரக் கம்பளம் உடனே அவனைத் தூக்கிக் கொண்டு பறந்து விட்டது!"

"அக்கினி அரக்கனை அழித்து விட்டு அரசருடன் -- அதாவது என் அப்பாவுடன் -- சமரசம் செய்து கொள்ளலாம் என்றுதான் எண்ணி இருந்தேன். இதன் கொம்புகளையும் வாலையும் நேரே மன்னரின் முன்னிலையில் கொண்டு சேர்த்திருப்பேன். ஆனால் குந்தளவல்லி அவைகளைக் காண ஆசைப்பட்டாள். அதற்காகவே இங்கு கொண்டு வந்தேன்.

இல்லாவிட்டால் அது இந்நேரம் மன்னரின் முன்னிலையில்தான் இருக்கும்" என்றான் கீர்த்தி.

தனக்காக தன்னிடம் காண்பிப்பதற்காக அதை இங்கு கொண்டு வந்ததாகக் கீர்த்தி கூறியதும் குந்தளவல்லியின் ரோஜாமுகம் நாணத்தினால் சிவந்தது. "என் பொருட்டுத் தாங்கள் அதை இழ்நது விட்டீர்களே!" என்றாள்.

தன் சகோதரி மகளின் அழகில் இளவரசன் மயங்கிப் போயிருக்கிறான் என்பதில் மாணிக்கவர்மருக்குப் பெருமையாகத்தான் இருந்தது. ஆனால் மன்னருடன் இளவரசனுக்குச் சரியான ஒட்டுதல் உறவு இல்லையே என்பதில் கொஞ்சம் வேதனையாகவும் இருந்தது. 'மகாராஜாவைப் பகைத்துக் கொண்டுள்ள மகனுடன் எப்படி உறவு வைத்துக் கொள்ள முடியும்? இங்கு இவன் அதிக நாள் தங்க முடியாது. மந்திரக் கம்பளத்தின் உதவி இல்லாமல் இவன் இங்கிருந்து வெளியேறவும் முடியாது. வெளியே போனால் உடனே இவனைக் கைது செய்து கொண்டு போக மகாராஜாவின் வீரர்கள் காத்துக்

கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமா? இதற்குள் நளசர்மா விசித்திரபுரி அரண்மனையில் மந்தஹாச மகாராஜாவின் முன்னே அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் சமர்ப்பித்து அதைத் தானே கொன்றதாகக் கூறிக் கொண்டிருப்பான். இளவரசனின் மாமன் மகளான மஞ்சுளாவின் கணவனாகப் பாக்கியத்தையும், விசித்திரபுரியின் இளவரசுப் பட்டத்துக்கு உரியவனாகவும் ஆகி விடப் போகிறான் நளசர்மா. என்னிடம் சமையற்காரனாக இருந்தவன் இந்த நாட்டின் இளவரசன். என்ன கேவலம்!' இப்படி எண்ணக் கடலிலே தன்னை மறந்து மூழ்கி முக்குளித்துக் கொண்டிருந்தார் மாணிக்கவர்மர்.

கீர்த்தியோ குந்தளவல்லியிடம் உல்லாசமாக உரையாடிக் கொண்டிருந்தான். அந்த நிலவும், தென்றலும் அவள் அழகும் அவனிடம் புதிய உற்சாகத்தை உண்டாக்கி இருந்தன. அக்கினி அரக்கனின் தலையும் வாலும் பறி போனதைப் பற்றி அவன் கொஞ்சமும் வாட்டமடைந்ததாகத் தெரியவே இல்லை. அறிவாளியல்லவா? குந்தளவல்லியுடன் அப்படி என்ன பேசிக்

கொண்டிருந்தான். கீர்த்தி? எதைப் பற்றி? அக்கினி அரக்கனின் தலையையும் வாலையும் தான் கொண்டு வந்த கதையைத் தான் விவரித்துக் கொண்டிருந்தான் அவளிடம். அக்கினி அரக்கனைத் தான் சந்திக்கச் சென்றதையும் அத்துடன் அதன் ஜென்ம விரோதியான பனி அரக்கனை மோதவிட்டு அவை இரண்டும் போரிட்டு மடிவதற்கு திட்டமிட்ட தன் திறமையை பற்றிக் கூறிக் கொண்டிருந்தான்.

நேர்மையும் நாணயமும் உள்ள அறிவாளியானதால், கீர்த்தி எதையும் ஒளிக்கவில்லை. உண்மையை உள்ளபடி கூறினான். "அக்கினி அரக்கனை நான், கொல்லவே இல்லை. உண்மையில் அதை அழித்தது பனி அரக்கன்தான். மஞ்சுளாவை மணப்பதற்கு உரிமையுடையது அதுதான். ஆனால் பாவம் அதற்கு அதிர்ஷ்டமில்லை. மஞ்சுளாவின் கணவனாகும் வாய்ப்பை இழந்து விட்டது. பயங்கரப் போரில் அதுவும் இறந்து விட்டதே என்ன செய்ய?" என்றான் கீர்த்தி. குந்தளவல்லியினால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

இவர்கள் இப்படி உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. வான வீதியிலே 'விஷ்' என்று ஒரு சப்தம் கேட்டது. நீல வானத்திலே நிலவொளியிலே; ஏதோ ஒன்று தங்கள் தலைக்கு மீதாகப் பறந்து போனதைக் கண்டாள் குந்தளவல்லி. அதுமட்டுமல்ல, அந்தப் பறக்கும் சாதனம் அரண்மனையின் பெரிய சாளரத்தின் வழியாக உள்ளே புகுவதையும் கண்டாள் குந்தளவல்லி. அவளுக்கு வியப்பும் பயமும் ஏற்பட்டன. அதே காட்சியைக் கீர்த்தியும் கண்டான். ஆனால் அவனுக்கு வியப்போ திகைப்போ ஏற்படவில்லை. ஏனென்றால் அந்தப் பறக்கும் சாதனம் தன்னுடைய மந்திரக் கம்பளம்தான் என்பதை அவன் ஒரு நொடியில் அறிந்து கொண்டான். அது மட்டுமல்ல. அந்தக் கம்பளத்தில் தன் தந்தையும் தாயும் இன்னொரு நபரும் அமர்ந்திருப்பதையும் கண்டான் கீர்த்தி. அந்த இன்னொரு நபர் மங்களகிரி அரண்மனையின் பிரதம சமையற்காரன் நளசர்மாவாகத்தான் இருக்க வேண்டும் என்பதும் அதிபுத்திசாலியான அரசகுமாரனுக்கு விளங்கி விட்டது. என்ன

நடந்திருக்கும் என்பதை யூகிக்கலானான் கீர்த்தி. இது என்ன அதிசயம் என்று விழிகளால் வினவினாள் குந்தளவல்லி. 'வியப்படையாதே, விளக்குகிறேன்!' என்று பார்வையால் பதில் கூறினான் இளவரசன். அதே வேளையில் ஒரு சேவகன் வந்து, "விசித்திரபுரி மகாராஜா மந்தஹாசர் வருகை புரிந்திருக்கிறார் நம் அரண்மனைக்கு. உங்களை உடனே காண விரும்புகிறார்" என்று கூறினான் மாணிக்கவர்மரிடம்.

"மந்தஹாஸரா..? வந்திருக்கிறாரா?" என்று கலவரப்பட்டுப் போனார். இளவரசனைத் தான் இருத்திக் கொண்டிருப்பது தெரிந்துதான் இப்படித் திடீர் விஜயம் செய்திருக்கிறாரோ? என்று பதறியது அவர் நெஞ்சம். 'அந்தப் பயல் நளசர்மாவின் வேலையாகத்தான் இருக்கும்' என்று சஞ்சலப்பட்டது.

"கலக்கமடையாதீர்கள். உங்கள் கையும் காலும் ஏன் இப்படித் தாளம் போடுகின்ற! தைரியமாகப் போய் மகாராஜாவுக்கு

வரவேற்புக் கொடுங்கள். நானும் பின்னாலேயே வருகிறேன்" என்று அவருக்கு தெம்பூட்டி அனுப்பினான் கீர்த்தி.

"ஆமாம்... நீங்களும் என் பின்னாலேயே வாருங்கள். அதுதான் நல்லது" என்று கூறியபடியே முன்னால் போனார் மாணிக்கவர்மர். கீர்த்தி மனோகரமான புன்னகையுடன் குந்தளவல்லியின் கரம் பற்றியபடி சாவகாசமாக நடந்தான். எந்த சூழ்நிலையையும் சமாளித்து வெற்றி கொள்ளும் வல்லமை பெற்றவனான கீர்த்தி வர்மன்.

# அத்தியாயம் - 14

மந்தஹாஸ மகாராஜாவும் ராணி ரத்தினாவதியும் மங்களகிரி அரண்மனை முன் விசாலமான அந்த வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தார்கள். மாணிக்கவர்மர் அவசர அவசரமாக வந்தார். மகாராஜாவுக்குத் தர வேண்டிய மரியாதைப்படி முகமன் கூறி வணங்கினார். 'மகாராஜா அந்த வேளை கெட்ட வேளையில் முன் அறிவிப்பின்றித் திடீர் விஜயம் செய்திருக்கிறாரே, எப்படி வந்தார் எதற்காக வந்திருக்கிறார்' - இப்படிப் பல கேள்விகளை உள்ளத்துள் எழுப்பிக் குழப்பிக் கொண்டிருந்த போது புன்னகை பூசிய முகத்துடன் கீர்த்தியும் அங்கு வந்தான். அவனைக் கண்டதும் முகத்தைத் தூக்கிக் கொண்டார் மந்தஹாசர்.

"உங்கள் மூத்த மகன் கீர்த்திவர்மன் நமஸ்காரம் செய்கிறான் அப்பா!" என்று வணக்கம் செலுத்தினான் இளவரசன்.

அரசர் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். கீர்த்தி சிரித்துக் கொண்டான்.

"அம்மா, உனக்கும் நமஸ்காரங்கள்!" என்றான் கீர்த்தி. ராணி ரத்னா தேவி வெடுக்கென்று முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு அந்தப் பக்கம் திரும்பிக் கொண்டாள். கீர்த்தியிடம் தனிப்பட்ட பாசங் கொண்டிருந்த ரத்னாவதிக்குத் திடீரென்று என்ன வந்து விட்டது? அவளுக்குப் பிடித்தமில்லாத நம்பிக்கை இல்லாத மந்திர ஜாலங்களுக்கு கீர்த்தி ஆட்பட்டு விட்டான் என்ற கோபம்தான் ராணிக்கு. தந்தையும் தாயும் இளவரசனுக்கு முகம் கொடுத்துப் பேசாததைக் கண்ட மாணிக்கவர்மருக்கு உடம்பெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கியது. தான் கீர்த்திக்குப் புகலிடம் கொடுத்திருப்பதாகக் குற்றம் சாட்டித் தண்டனை வழங்கத்தான் வந்திருக்கிறாரோ என்று எண்ணிய போது அவர் தலை சுற்றியது.

குந்தளவல்லியும் கிட்டத்தட்ட இதே நிலையில்தான் இருந்தாள். இளவரசரை ஏறெடுத்தும் பார்க்க விரும்பாத

மன்னரையும் மகாராணியையும் கண்ட போது அவர்கள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும்படியான வெறுப்பையும் கோபத்தையும் கண்டபோது அவளது ரோஜா வண்ண முகம் பனியில் நனைந்த போது அவளது ரோஜா வண்ண முகம் பனியில் நனைந்து ரோஜா இதழாக வெளுத்தது. அவளது தவிப்பை, கலவரத்தைக் கண்டான் கீர்த்தி. தான் அங்கு இருப்பதை அப்பாவும் அம்மாவும் விரும்பவில்லை என்பதையும் புரிந்து கொண்டான். ஆகவே குந்தளவல்லியின் பீதியைப் போக்கி அவளுக்கு ஆறுதல் சொல்லுவதை விட முக்கியமான காரியம் அப்போதைக்கு வேறு ஏதுமில்லை என்ற முடிவோடு அவளை நோக்கி நடந்தான். வாஞ்சையோடு அவள் கரம் பற்றி அதே கூட்டத்தில் கொஞ்சம் தள்ளி இருந்த ஒரு சாளரத்தின் அருகே அழைத்துப் போனான்.

கீர்த்தி நகர்ந்ததும் நிலைமையைச் சமாளிக்க வேண்டி மாணிக்கவர்மர் மகாராஜாவிடம் ஏதேதோ சமாதானமாகப் பேசலானார். ஆனால், ராணியிடம் அவர் ஏதும் பேசவில்லை.

ராணியின் குணம் அவருக்குத் தெரியும். ஆனால் மாணிக்கவர்மரின் சமாதானங்களுக்கு மந்தஹாசர் பதில் ஏதும் கூறவில்லை. ராணி இருக்கும்போது அவர் அவசரப்பட்டுப் பேச மாட்டார். ராணிதான் பேசினாள்.

"என்ன மந்திரமோ மாயமோ? ஆனால் எனக்கு மந்திர மாயங்களில் நம்பிக்கை கிடையாது. எப்படியோ நான் அதிகாலையில் விசித்திரபுரியில் எழுந்திருக்க வேண்டும். ஜமுக்காளத்தில் பறந்து வந்ததை என்னால் நம்பவே முடியவல்லை. "மாணிக்கவர்மரும் இதை குழப்பத்தில்தானே இருந்தார்! எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது?

இதற்குள் நளசர்மா மன்னருக்கும் மகாராணிக்கும் தன் கைப்படவே தயாரித்த பழரச பானங்களைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துக் கொண்டு வந்தான். மந்தஹாசர் எந்தச் சூழ்நிலையானாலும் சாப்பாட்டு விஷயம் எதையும் ஒதுக்குவதில்லை. உற்சாகத்துடன் ருசிக்கலானார். ஆனால் ராணி ரத்னாவதியோ அதைத் தொடக்கூட இல்லை.

"என்ன நடந்தது, நாங்கள் எப்படி இங்கு திடீர்ப் பிரவேசம் செய்தோம் என்பதை அறிந்து கொள்ள ஆவலோடு இருக்கிறாய், இல்லையா?" என்ற மாணிக்கவர்மரிடம் மந்தஹாசர், பழரசத்தை உறிஞ்சிக் கொண்டே.

"ஆமாம், மகாராஜா! இம்மாதிரி முன்னிறிவிப்பின்றி நீங்கள் வந்ததே கிடையதே" என்றார் மங்களகிரி மன்னர்.

"சாங்கோபாங்கமாகச் சொல்லுகிறேன் கேட்டுக் கெள். இன்று இரவு சாப்பிட உட்காரும்போதே கொஞ்சம் நேரமாகி விட்டது. உனக்கு நல்ல பசி வேறு. ஆவலோடு ஒரு பிடி எடுத்து வாயில் போடும் போது அறைக்கு வெளியே ஏதோ அரவம் கேட்டது. சாப்பிடும்போது எனக்கு அமைதியான சூழ்நிலை வேண்டும். அதுதான் உனக்குத் தெரியுமே! உண்பதை நிறுத்தித் தலை நிமிர்ந்து பார்த்தேன். அரண்மனைக் காவல் தலைவன் பரபரப்புடன் உள்ளே ஓடி வந்தான். வெளியில் யாரோ ஒருவன் அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் வைத்துக் கொண்டு பரிசுப் பொருளைத் தரும்படி கேட்பதாகக் கூறினான்.

எனக்குப் பசி பறந்தது. கையை உதறி விட்ட ராணியும் நானும் வரவேற்பறைக்குள் போனோம். அங்கே கையில் ஒரு மூட்டையுடனும் தோளில் ஒரு ரத்தினக் கம்பளத்துடனும் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அது உன்னுடைய அரண்மனையின் பிரதான சமையல்காரன் நளசர்மா என்று பின்னால் தெரிந்து கொண்டான்.

"எங்களைக் கண்டதும் நளசர்மா, 'மகாராஜா! தாங்கள் அறிவித்தபடி இதோ அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும். இப்போதுதான் அதைக் கொன்று இவைகளை வெட்டி எடுத்து வந்தேன்.' என்று என் முன்னிலையில் மூட்டையைப் பிரித்து அவைகளைப் பிரித்து அவைகளைப் பரப்பினான். என் கண்களை நம்பவே முடியவில்லை.

"அக்கினி அரக்கனை எங்கு கண்டாய் எப்படிக் கொன்றாய்?" என்று கேட்டேன்.

"மங்களகிரியை அடுத்துள்ள கானகத்தில் அக்கினி அரக்கனைச் சந்தித்து அதனுடன் போராடிக் கொன்றதாகக் கூறிய

அவன் நான் குறிப்பிட்டிருந்தபடி, அதற்கான பரிசுத் தொகையைக் கொடுக்கும்படி கேட்டான்" என்று கூறிய மந்தஹாசர் மாணிக்கவர்மரைப் பார்த்து, "நீ அந்த என் அறிக்கையைப் பார்த்தாயில்லையா? அதை நானே தயாரித்தேன்" என்றார் பெருமையோடு.

"ரொம்பவும் சிறப்பாக இருந்தது" என்று பாராட்டினார் மாணிக்கவர்மர்.

"ம்.. என்ன சொன்னேன்? ஆ! அவன் பரிசுப் பொருளைக் கேட்டான். நான் வாக்குத் தவறாதவன். ஆனால் மஞ்சுளாதான் என் எண்ணத்துக்கு இணங்கி வரமாட்டாள் போலிருக்கிறது. அவள் என் இரண்டாவது மகன் இன்பவாணனிடம் உயிரையே வைத்திருந்தவளாயிற்றே. ம்... பாவம், அக்கினி அரக்கனைச் சந்திக்கப் போன அவன் திரும்பி வராததிலிருந்து அவள் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகத்தான் இருக்கிறாள். அது இருக்கட்டுன். ராணி இருக்கிறாளே, இவள் ரொம்பக் கெட்டிக்காரி. எதையும் ஆழ்ந்து ஆலோசிக்கக் கூடியவள். உன்னுடைய

சமையற்காரன் சொல்வது உண்மையா பொய்யா என்பதைக் கண்டறிய அவனிடம் ஒரு கேள்வி கேட்டாளே பார்க்கலாம். எனக்குக் கூட அது தோன்றவில்லை.

'அக்கினி அரக்கனைக் கொன்ற அசகாய சூரனே நீ ஒரு அயோக்கியன், ஏமாற்றுக்காரன். மோசக்காரன் என்றாள். உடன் நளசர்மா வெலவெலத்துப் போய் விட்டான்! அவனிடமிருந்து பேச்சே கிளம்பவில்லை. ராணி கேட்டாள், 'மங்களகிரி இங்கிருந்து முன்னூறு மைல்களுக்கப்பால் இருக்கிறது. அதையும் தாண்டியுள்ள காட்டில் அக்கினி அரக்கனைக் கொன்ற நீ, அங்கிருந்து இத்தனை விரைவாக, இத்தனை பெரிய பளுவான அக்கினி அரக்கனின் கொம்பு, வால் கொண்ட மூட்டையையும் தூக்கிக் கொண்டு உன்னால் எப்படி வர முடிந்தது?' ராணி இப்படிக் கேட்டதும்தான் எனக்கும் அது நியாயமான வாதம் என்று தோன்றியது. நானும் கேட்டேன், 'எப்படியப்பா உன்னால் இங்கு இவ்வளவு சீக்கிரத்தில் வர முடிந்தது?' என்று.

'உன் சமையல்காரன் சொன்னார், ஏன் மகாராஜா முடியாது? இதோ இந்தக் கம்பளத்தின் மீது உட்கார்ந்து கொண்டு நான் எங்கு போக வேண்டுமென்று நினைக்கிறேனோ அங்கு என்னை இது விநாடியில் கொண்டு போய் இறக்கி விடுமே!' என்றான்.

'சுத்த அபத்தம். வெறும் கட்டுக்கதை. ஜமுக்காளமாவது பறப்பதாவது பறக்கும் குதிரை, பாய்ந்து ஓடும் பாதரட்சை இதெல்லாம் வெறும் கற்பனைகள்' என்றாள் ராணி கோபத்துடன். எப்போதுமே அவளுக்கு இந்த மாதிரி மந்திர தந்திரங்களிலும் மாயாஜாலங்களிலும் நம்பிக்கையே கிடையாது.

"எங்கே உன் மந்திரக்கம்பளத்தை விரி. அதில் மகாராஜாவும் நானும் உட்கார்ந்து கொள்ளுகிறோம். நீயும் எங்களுடன் அதில் அமர்ந்து கொள். நாம் மூவரும் மங்களகிரியில் இதே விநாடியில் இருக்க வேண்டுமென்று நான் நினைத்துக் கொள்ளுகிறேன். உன் கம்பளம் எங்களை அங்கு கொண்டுபோய் இறக்கினால் நீ பிழைத்தாய். இல்லாவிட்டால்

உன் தலை உன் கழுத்தில் இருக்காது' என்றாள். உடனே சமையல்காரனும் தன் தோளிலிருந்த அந்தக் கம்பளத்தைக் கீழே விரித்தான். நாங்கள் அதில் அமர்ந்து கொண்டோம். ராணிதான் கட்டளையிட்டாள். 'நாங்கள் மங்களகிரியில் இப்போதே இருக்க வேண்டும்!' என்று.

"அவ்வளவுதான். அடுத்தவிநாடியே கம்பளம் ஜிவ்வென்று தரையிலிருந்து எழும்பியது. ஆகாயத்திலே மிதந்தபடி வெகுவேகமாகப் பறக்கலாயிற்று. நடந்தது என்ன என்பதை நாங்கள் அறிந்து கொள்வதற்குள் கம்பளம் எங்களை இங்கு கொண்டு வந்து இறக்கி விட்டது. ஆகவே உன் சமையல்காரன் நளசர்மா கூறியதெல்லாம் உண்மைதான் என்பது உறுதியாகி விட்டது. நானும் என் வாக்குப்படி நடந்து கொள்வேன். கோழையும் குதர்க்கப் புத்திக்காரனுமான என் மூத்த மகனின் இடத்தை உன் சமையல்காரன் பெற்று விட்டான்" என்று தன் நீண்ட பிரசங்கத்தை முடித்தார் மந்தஹாசர்.

வெகு நேரம் பேசியதனால் அவருக்கு மூச்சு வாங்கியது. மாணிக்கவர்மருக்கு தர்ம சங்கடமாக இருந்தது. இளவரசர் கீர்த்திவர்மனை மந்தஹாசர் வர்ணித்தபடி கோழையாகவோ குதர்க்கப் புத்திக் காரராகவோ ஏற்க அவர் மனம் ஒப்பவில்லை. அதே சமயத்தில் தன் சமையல்காரனை மாவீரனாக மதிக்கவும் முடியாமல் தவித்தார்.

"சாப்பிட உட்காரும்போதுதான் உன் சமையல்காரன் திடும் பிரவேசம் செய்தான் என் அரண்மனைக்குள். ஆகவே நான் இன்னும் சாப்பிடவில்லை. பசியோடு படுத்தால் எனக்குத் தூக்கம் வராது" என்றார் மந்தஹாச மகாராஜா.

"அடடா! என்னை மன்னிக்க வேண்டும். உங்களிடம் கதை கேட்டுக் கொண்டிருந்த என் மதியீனத்தை என்ன சொல்வது?" என்று பரபரப்புடன் ஓடினார். அடுத்த நிமிடம் பல பணியாளர்கள் இங்கும் அங்கும் பரபரத்தார்கள். மந்தஹாசரின் முன்னிலையில், அறுசுவை உண்டிகள் வரிசைகட்டி வந்து நின்றன. மகாராணி எதையும் தொடவில்லை. "அமைதியாகத்

தூங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள்" என்றாள். அதன்படியே ராணி ரத்னாவதிக்கு ஹம்ஸதூளிகா மஞ்சமும் அகிற்புகை வாசனையும் தயாரித்துக் கொடுக்கப்பட்டன.

யாருமே கீர்த்திவர்மனைப் பற்றி அக்கறை காட்டவில்லை. அதற்காக இளவரசனும் வருத்தப்படவில்லை. குந்தளவல்லியுடன் நிலா மாடத்தில் இருந்த அவனுக்குப் பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருந்தன. முடிவாக அவளிடம் கீர்த்தி அதைக் கேட்டே விட்டான். " நீ என்னை மணந்து கொள்ளுவாயா?"

"உங்கள் தகப்பனாரும், என் பெற்றோரும் சம்மதிப்பார்களானால் நான் உங்கள் மனைவியாவதற்கு ஆட்சேபணை இல்லை" என்றாள் குந்தளவல்லி.

ஊர் அடங்கி, அரண்மனையிலும் அமைதி ஏற்பட்டபிறகு, குந்தளவல்லியின் இமைகளையும் உறக்கம் அழுத்திச் சொக்க வைத்த பிறகுதான் அவளுக்கு விடை கொடுத்தான் கீர்த்தி. முதல் நாள் முழுவதும் அவன்

தூங்கவில்லை. அவனுக்கும் அசதியாகத்தான் இருந்தது. தர்பார் மண்டபத்திலேயே மந்தஹாஸர் வந்து இறங்கிய மந்திரக் கம்பளம் அதே விரித்த நிலையில் அங்கேயே அப்படியே இருந்தது. கீர்த்தி அதன் நடுவில் போய் நின்று கொண்டான்.

"அக்கினி அரக்கன் இறந்து கிடக்கும் அந்த மலைப்பிரதேசத்துக்குப் போ" என்று கட்டளையிட்டான். அடுத்த சில நிமிஷங்களில் அவன் கொம்பிழந்து வாலிழந்து கிடக்கும் அக்கினி அரக்கனின் அருகில் இருந்தான். தன் இடையிலிருந்த மந்திரவாளை உருவி அதன் நான்கு பாதங்களையும் வெட்டி எடுத்துக் கொண்டான். மந்திர ஜமுக்காளத்தில் ஏறி மறுபடி மங்களகிரி அரண்மனைக்குத் திரும்பினான்.

மாணிக்கவர்மர் அப்போதுதான் மகாராஜாவுக்குப் படுக்கையறை வசதிகளைச் செய்து கொடுத்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். தான் உறங்கி ஓய்வு பெற ஓர் இடம் காட்டும்படி கீர்த்தி கேட்டுக் கொண்டான். மாணிக்கவர்மர்

அவனுக்கும் ஒரு படுக்கை அறையைக் காட்டி விட்டுத் தூங்கப் போனார்.

கீர்த்தி தனக்கு அளிக்கப்பட்ட அறையில் மந்திரக் கம்பளம், உருவை மறைக்கும் மாயக் குல்லாய், பாதரட்சை மற்றும் தன்னிடமிருந்த மந்திரப் பொருள்களையும் அக்கினி அரக்கனின் கால் குளம்புகளையும் ஒரு பெட்டியில் வைத்துப் பூட்டினான். அதன் பிறகு படுத்துத் தூங்கியும் போனான்.

# அத்தியாயம் - 15

மங்களகிரியில் மறுநாள் கதிரவன் வெகு உற்சாகமாக உதயமானான். ஆனால் அரண்மனையில் கண் விழித்தவர்களிடம்தான் உற்சாகமில்லை. சொந்த இடத்தில் படுத்து எழுந்திருப்பவர்களுக்கே சில நாளைக்கு உற்சாகம் இருக்காது. விசித்திரபுரி மகாராஜாவும் மகாராணியும் படுத்திருந்ததோ, அந்நியர்களின் அரண்மனைப் படுக்கை அறையில். ஆகவே, அவர்கள் எழுந்திருக்கும் போதே குழப்பத்துடன்தான் எழுந்திருந்தார்கள். பிரதான சமையற்காரன் நளசர்மாவுக்கு, தான் இளவரசனாக முடியுமா முடியாதா என்ற குழப்பம். ஆனால் அவன் உறுதியாக இருந்தான். எப்படியும் அரசரின் அறிவுப்புப்படி இளவரசி மஞ்சுளாவைக் கல்யாணம் செய்து கொண்டு விட வேண்டும் என்று!

மாணிக்கவர்மரோ திடீர் விருந்தாளிகளாக வந்துள்ள மகாராஜாவும் மகாராணியும் இளவரசனும் எப்படியாவது அங்கிருந்து கிளம்பினால் போதும் என்ற கவலையுடனேயே கண் விழித்தார். மகாராஜாவுக்குத் தன் அரண்மனையில் இருந்தால்தான் வேலை ஓடும். ஆகவே அவர் விரைவில் விசித்திரபுரி போய் விட விரும்பினார். அங்கு போன பிறகுதான் நளசர்மாவின் விஷயத்தில் மேற்கொண்டு தாம் ஒரு முடிவுக்கு வர முடியும் என்று அறிவித்தார்.

மாணிக்கவர்மர் மகாராஜாவிடம் தமது அபிப்பிராயத்தைக் கூறினார். எல்லோரும் மந்திரக் கம்பளத்தில் அமர்ந்து வந்தது போலவே ககன மார்க்கமாக விசித்திரபுரி அரண்மனைக்குப் போய் விட வேண்டியது. இந்த யோசனைக்கு ராணி ரத்தினாவதி இணங்கவில்லை. கம்பளத்தில் பறந்து வந்தும் கூட அவள் மாய மந்திரங்களை நம்பவோ ஏற்றுக் கொள்ளவோ தயாராக இல்லை. "மந்திரக் கம்பளத்தில் பறந்து செல்வது சுத்த அசட்டுத்தனம். கௌரவம் மிக்க செயலுமில்லை. நான் ரதத்தில்தான்

விசித்திரபுரிக்குத் திரும்பிச் செல்லுவேன். ஆகவே உடனே ஆறு குதிரைகள் பூட்டிய ரதம் தயாராகட்டும்" என்று ஆணையிட்டு விட்டு அந்த நெடுந்தூரப் பிரயாணத்துக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளுவதில் முனைந்து விட்டாள். அவள் முடிவை யாராலும் மாற்ற முடியாது என்பதை அறிந்து மாணிக்கவர்மர் உடனே ரதத்துக்கு ஏற்பாடு செய்தார். சற்றைக்கெல்லாம் ராணி ரத்தினாவதி விசித்திரபுரிக்குக் கிளம்பி விட்டாள். யாரிடமும் விடைபெற்றுக் கொள்ளக்கூட இல்லை.

மந்திரக் கம்பளத்தில் மந்தஹாச மகாராஜாவும் இளவரசன் கீர்த்தியும் சமையல்காரன் நளசர்மாவும் பறந்து சென்று விசித்திரபுரியை அடைவது என்று தீர்மானமாயிற்று. மந்திரக் கம்பளம் அரண்மனையின் நிலா முற்றத்தில் விரிக்கப்பட்டது. அதில் மூவரும் சென்று அமர்ந்தார்கள். கீர்த்தி மறக்காமல் இரவு சில பொருள்களை வைத்து மூடிய பெட்டியை எடுத்துக் கொண்டான். மாணிக்கவர்மரும் - குந்தளவல்லியும் மற்றும் மந்திரி பிரதானிகளும் மன்னரையும் இளவரசரையும் வழியனுப்ப

வந்து கூடினார்கள். குந்தளவல்லியிடம் தன் பார்வையினாலேயே விடைபெற்றுக் கொண்டான் கீர்த்தி. அந்த முகத்தில் தவழும் அந்த மென்னகையோடு ஓர் ஏக்கமும் இழையோடுவதைக் கவனித்தான் கீர்த்தி. அது தன் பிரிவினால் ஏற்பட்ட தாபம் என்று உணர்ந்த போது அவன் நெஞ்சத்திலே உவகை பொங்கியது. மந்திரக் கம்பளம் 'ஜிவ்' என்று வானத்துக்கு எழுந்து மிதந்தபடி பறந்தது. பெரிய பாரம் இறங்கியது போல ஆசுவாசப் பெருமூச்சுடன் அரண்மனைக்குள் சென்றார் மாணிக்கவர்மர். மறுபடி கீர்த்தியை எப்போது சந்திக்கப் போகிறோம் என்ற ஏக்கத்தினால் கனத்த நெஞ்சத்துடன் தன் இருப்பிடம் திரும்பினாள் குந்தளவல்லி.

ராணி ரத்தினாவதி விசித்திரபுரி ராஜபாட்டை மூலம் வந்து சேர நான்கு நாட்களாகும். ஆனால் மகாராஜாவும் இளவரசரும் நளசர்மாவும் நாலே மணியில் நலுங்காமல் போய்ச் சேர்ந்து விட்டார்கள், மந்திரக் கம்பளத்தின் மகிமையினால்.

அரண்மனைக்குத் திரும்பிய உடனேயே அரசவையைக் கூட்டினார் மந்தஹாசர். மந்திரி பிரதானிகள் நாட்டுப் பெருங்குடி மக்களின் முன்னிலையில் அக்கினி அரக்கனின் கொம்புகளும் வாலும் பார்வைக்கு வைக்கப்பட்டன. அதைக் கொன்றதாகக் கூறும் நளசர்மாவும், இளவரசன் கீர்த்திவர்மனும் தங்கள் தங்கள் வாதங்களைச் சபையின் முன்னால் கூறலாம் என்று சொல்லப்பட்டது.

முதலில் நளசர்மா தன்னுடைய உரிமையைக் கோரி குரல் எழுப்பினான். வக்கணையாகப் பேசுவதில் வல்லவன் அவன். சமையலறை வேலை நேரம் போக மற்றபோதெல்லாம் நகரில் ஆங்காங்கே நடக்கும் நாடகங்கள், தெருக்கூத்துக்களைக் கண்டு ரசிக்கும் வழக்கம் உடையவன் நளசர்மா. ஆகவே வித்தாரமாகப் பேசுவதில் சமர்த்தன்.

"அக்கினி அரக்கனை எப்படி எங்கே கொன்றேன் என்பதெல்லாம் உங்களுக்குத் தேவையற்ற விவரங்கள். அவைகளை நான் சொல்லப் போவதுமில்லை. மன்னர் பிரானின்

அறிவிப்பில் பரிசும் பாணிக்கிரஹணமும் அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் கொண்டு வருபவருக்குத்தான் என்பது திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொல்பவருக்கு என்று குறிப்பிடவில்லை. தவிர அதைக் கொல்லாமல் அதன் கொம்பையும் வாலையும் எப்படிக் கொண்டு வர முடியும்? ஆகவே கனம் சபையோர்களே, இதோ இருக்கும் இந்தக் கொம்புகளையும் வாலையும் கொண்டு வந்தவன் நான்தான் என்பது மன்னருக்குத் தெரியும் ஆகவே அவர் வாக்குப்படி எனக்குரிய பரிசுகளை வழங்குவார் என்றும் நம்புகிறேன்."

நளசர்மாவின் நயமான பேச்சில் நியாயமிருப்பதாகச் சபையோரில் பலர் கைதட்டி ஆரவாரித்துப் பாராட்டினர். அவர்களுக்கெல்லாம் கீர்த்தியைப் பிடிக்காது. எப்படியாவது ஆட்சிப் பொறுப்பு அந்நியன் கையில் போனால் சரி என்று ஆசைப்படுபவர்கள் அவர்கள். பாவம் மஞ்சுளா, அவள் நளசர்மாவின் பேச்சையும் அவனுக்குக் கிடைத்த பாராட்டுக்களையும் கேட்டு 'கோ' வென்று கதறினாள். கீர்த்தியை

அவளும் வெறுத்தாள்தான். ஆனால். அதற்காக நளசர்மாவை கணவனாக ஏற்க அவள் மனம் ஒப்பவில்லை.

இளவரசன் கீர்த்திவர்மன் தன்னுடைய உரிமையை உறுதிப்படுத்த அழைக்கப்பட்டான். கீர்த்திக்கே உரிய கம்பீரத்துடன் எழுந்து நின்று அவையை ஒரு முறை பார்த்தான். பிறகு பேசலானான்.

"அக்கினி அரக்கனின் கொம்புகளையும் வாலையும் கொண்டு வருபவர்களுக்கே பரிசும் பாவையும் என்ற நிபந்தனையை ஒப்புக் கொள்கிறேன். அதைக் கொல்கிறவர்களுக்கு என்று அரசர் குறிப்பிடவில்லைதான். ஆனால் மாட்சிமை தாங்கிய மன்னர் பிரானின் எண்ணம் என்ன என்பதை இங்கு யோசிக்க வேண்டும். நாட்டுக்கும் மக்களுக்கும் தொல்லை தந்து வரும் ஒரு கொடிய மிருகத்தைக் கொன்று அழிக்க வேண்டும் என்பதுதான் அவருடைய எண்ணமே தவிர, கொம்புகளையும் வாலையும் காண வேண்டும் என்கிற காரணத்துக்காகவா அப்படியொரு அறிக்கையைத் தயாரித்தார்?

இல்லவே இல்லை. கொம்புகளும் வாலும் மட்டுமானால் எத்தனையோ பேர் வண்டி வண்டியாகக் கொண்டு வந்து குவிப்பார்களே! நளசர்மாவின் வாதத்தை எற்றுக் கொள்வதானால் மகாராஜாவினுடைய அறிவிப்பின் உண்மையான அவசியம் அலட்சியப்படுத்தப்பட்டதாகி விடும். "

மகனுடைய வாதத்திறமையைக் கேட்டு மந்தஹாசர் தன் மனதுக்குள்ளேயே 'சபாஷ் கீர்த்தி, சபாஷ்!' என்று பாராட்டினார். சபையில் கீர்த்தியின் ஆதரவாளர்களும் அரச பரம்பரை அலங்கோலமாகி விடக் கூடாதே என்ற கவலை உடையவர்களும் கை தட்டிக் கீர்த்தியைப் பாராட்டினார்கள்.

கீர்த்தி தொடர்ந்தான். "அக்கினி அரக்கனைக் கொன்றவர்கள் யாராக இருந்தாலும் அது இருக்குமிடம் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் கொம்பும் வாலும் இழந்த அதன் கால் குளம்புகளை யார் கொண்டு வருகிறார்களோ அவர்களே அதைக் கொன்றவர்களா இருக்க முடியும். அதன் குளம்புகளை நளசர்மா

கொண்டு வந்தாரானால் நிபந்தனைப்படி அவரே இந்நாட்டின் இளவரசராகலாம்" என்றான் கீர்த்தி.

இதைக் கேட்டதும் நளசர்மாவின் உடல் ஆட்டம் கண்டது. அக்கினி அரக்கனின் குளம்புக்கு அவன் எங்கே போவான்.! குழம்பு பண்ணத்தான் தெரியும் அவனுக்கு. "இதெல்லாம் வீண் வாதம்" என்று அடம் பிடித்தான்.

மந்தஹாசரின் பாடு திண்டாட்டமாகியது. பொறுப்பை மஞ்சுளாவின் மீது திணிக்க எண்ணி, "இளவரசி மஞ்சுளா எப்படிச் சொல்லுகிறாளோ அதன்படி செய்வோம்" என்றார். மஞ்சுளாவோ, 'ஓ' என்று பெருங்குரல் எடுத்து அழலானாள். மந்தஹாசர் அவளது அழுகையைத் தாங்க முடியாதவராக "அக்கினி அரக்கனுடைய கால் குளம்புகளை யார் கொண்டு வருகிறார்களோ, அவர்களுக்கு இளவரசியையும் இந்த ராஜ்யத்தில் பாதியையும் தருகிறேன்" என்று தீர்ப்புக் கூறினார்.

"மகாராஜா அவர்களே உங்கள் புதிய அறிவிப்புப்படி இதோ அரக்கனின் கால் குளம்புகள்" என்று கூறிக் கீர்த்தி தன் கையோடு

கொண்டு வந்திருந்த பெட்டியிலிருந்து குளம்புகளை எடுத்து வெளியே வைத்தான். மயங்கி விழுந்த நளசர்மாவை இரண்டு வீரர்கள் தூக்கிக் கொண்டு போனார்கள் சமையற்கட்டுக்கு. அவனது மூர்ச்சையைத் தெளிவித்துச் சுடச் சுட மிளகு ரசம் கொடுத்தார்கள். கிடைத்தற்கரிய அதிர்ஷ்டம் இப்படி வந்து கைநழுவிப் போனதை எண்ணிய நளசர்மா அப்படியே இடிந்து போய் விட்டான். அவனுக்கு ஒரு குதிரையையும் ஒரு பொற்கிழியையும் கொடுத்து மங்களபுரிக்கே அனுப்பி வைத்தார் மந்தஹாசர். அவன் கதை அதோடு முடிந்தது.

கீர்த்தி தன் இளவரசுப் பட்டத்தை உறுதிப் படுத்திக் கொண்டான். ஆனாலும் மன்னரின் அன்புக்கு அருகதையுள்ளவனாகவில்லை. அவன் மீதிருந்த கோபமும் வெறுப்பும் இன்னமும் குறையவலில்லை. ஏன், அதிகமாயிற்று என்றே கூற வேண்டும். அக்கினி அரக்கனைக் கொன்றது கீர்த்திதான் என்பது உறுதியானதும் இளவரசுப்பட்டம் அவனுக்குத்

திரும்பக் கிடைத்ததும் சபையோர் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியபோது, மந்தஹாஸர் வெகுண்டார்.

"என்ன கூச்சல் இது? எதற்காக இப்படி ஆனந்தப் படுகிறீர்கள்? தன் தம்பிகளைக் கொன்ற இவனைப் பாராட்ட வெட்கமாக இல்லை.? கீர்த்திவர்மனிம் வெற்றியில் மகிழ்கிறவர்களைக் கொலைக்களத்துக்கு அனுப்பி வைப்பேன், ஜாக்கிரதை!" என்றதும் அவையில் நிசப்தம் நிலவியது.

"கீர்த்தி!..." என்றழைத்தார் மந்தஹாஸர். இளவரசன் வந்து வணங்கி நின்றான். "நீ மறுபடியும் பட்டத்துக்கு உரியவனாகி விட்டாய். ஆனால் சுயநலக் காரனான உன்மீது எனக்கு மதிப்போ அன்போ கிடையாது. கடமையைச் செய்யத் தவறியவன் நீ. இன்று அந்த அக்கினி அரக்கனைக் கொல்ல முடிந்த உன்னால் அன்று அதை நிறைவேற்றாமல் உன் தம்பிகளை அதற்குப் பலி கொடுத்தாய். இன்று நீ என்ன கூறினாய்? 'அக்கினி அரக்கனாவது ஒன்றாவது? அப்படி ஏதுமே கிடையாது' என்றாயல்லவா? இன்று அதைக் கொல்லுமளவுக்கு திறமை படைத்திருக்கும் நீ அன்று

நாங்கள் கூறியதெல்லாம் உண்மைதான் என்று அறிந்த அறிவாளியாகவுமிருந்திருக்கிறாய். ஆனால், அதை மறைத்துத் தம்பிகளைக் கொல்வதற்காக சதி செய்து நாடகமாடினாய். வஞ்சகனான உனக்கு நான் என் வாக்குப்படி பத்தாயிரம் பொற்காசுகளைத் தருகிறேன். பெற்றுக் கொள்" என்று கூறித் திரும்பினார். பொக்கிஷ அதிகாரி ஒரு பொற்கிழியுடன் முன்வந்தார். அவர் கையிலிருந்த பொற்காசுகள் கொண்ட மூட்டையைக் கீர்த்தியின் முன்னால் தூக்கிப் போட்டார் மந்தஹாஸர்.

"இதை எடுத்துக் கொண்டு நீ இந்நாட்டை விட்டுப் போய் விடு. என் முன்னால் நிற்காதே" என்று கத்தினார்.

கீர்த்திவர்மன் இத்தனைக்கும் ஆத்திரப்படவில்லை. அமைதியாகவே இருந்தான். தன் காலடியில் வந்து விழுந்த பொற்காசுகள் அடங்கிய மூட்டையைக் குனிந்து எடுத்துக் கொண்டு வெளியேறத் திரும்பினான். அப்போது மந்தஹாஸரின் குரல் மறுபடியும் அதிர்ந்தது.

"நில்! நான் இன்னொன்றை மறந்து விட்டேனே. மஞ்சுளாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாமா? வா இங்கே" என்றார்.

# அத்தியாயம் - 16

"உருவை மறைக்கும் அந்த அதிசயக் குல்லாயோ ஒரு தப்படிக்கு ஒன்பது மைல்கள் தூரத்தை ஒரே விநாடியில் கடக்கும் மந்திரப் பாதுகைகளோ மட்டும் இப்போது அந்த விநாடியில் என் வசம் இருக்குமானால் குந்தளவல்லியைக் கூட்டிக் கொண்டு இந்த நாட்டின் எல்லையை விட்டு வெகுதூரத்தில் ஒரு ரமணீயமான வனத்தில், ஒரு பளிங்கு நீரோடைக் கரையில், பவளமல்லிகை மரத்தின் கீழே போய் உட்கார்ந்து விடுவேன். பவள மல்லிகை மலர்கள் எங்கள் மீது பொல பொலவென்று உதிர்ந்து கொண்டே இருக்கும். ஆகா, அந்தக் காட்சி! குந்தளவல்லியின் முகம் வெட்கத்தால் சிவக்கும் அந்த அழகு! அப்பாவின் முன்னிலையிலிருந்து என்னால் இப்போதே மறைந்து விட முடியுமானால் எத்தனை நன்றாக இருக்கும்?"

மன்னர் மந்தஹாசரின் குரல் ஒலித்தபோது இளவரசன் கீர்த்தியின் உள்ளத்திலே உருண்டு கொண்டிருந்த எண்ணங்கள்தான் இவை.

ஆனால் அந்த மந்திரப் பொருள்கள் அப்போது அவன் வசம் இல்லை. ஆகவே அப்பாவின் அழைப்புக்கு மதிப்பளித்துத் திரும்பினான் கீர்த்தி.

"எங்கே கிளம்பி விட்டாய் கனவேகமாக? என்னுடைய அறிவிப்பு பத்தாயிரம் பொற்காசுகள் மட்டுமல்ல, இளவரசி மஞ்சுளாவின் மணாளனாகவும் ஆக வேண்டும், தெரிந்ததா? இன்று உன்னுடைய திருமண நாளும் கூட. மஞ்சுளா ரொம்ப நல்ல பெண் என்று தெரியுமில்லையா உனக்கு?" என்றார் மந்தஹாஸர்.

"மஞ்சுளாவிடம் எவ்விதக் குறையையும் நான் கூறவில்லை, அரசே! அவளிடம் எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. ஆனால் ..." கீர்த்தி தன் பேச்சை முடிக்கும் முன்பு

மஞ்சுளா மன்னரின் காலடியில் விழுந்து கதறினாள்: "நான் கீர்த்திவர்மனை மணக்க மாட்டேன் மாட்டவே மாட்டேன்!"

"இதையேதான் நானும் சொல்வதற்கிருந்தேன். மஞ்சுளாவை மனைவியாக்கிக் கொள்ள எனக்கு விருப்பமில்லை" என்றான் கீர்த்தி குனிந்த தலையுடன்.

"யாரங்கே? என்று கடுமையான குரலில் கர்ஜித்தார் மந்தஹாஸர். "அரண்மனைக் கொலைக் களத் தலைவன் எங்கே?" என்று கேட்டார்.

கறுத்த வாட்டசாட்டமான ஒருவன் கையில் பெரிய வெட்டு வாளுடன் முன் வந்து வணங்கி நின்றான்.

"கத்திக்குச் சாணை பார்த்து வைத்திருக்கிறாயல்லவா?"

"எல்லாம் தயார் நிலையில் உள்ளன மகாராஜா!"

இப்போது மந்தஹாஸரின் பார்வை கீர்த்தியின் பக்கம் திரும்பியது. "கீர்த்திவர்மா! இதோ இளவரசி மஞ்சுளா, அதோ கொலைக்களத்துக்குக் கூட்டிப் போகும் ஆள். இரண்டில் எதைத்

தேர்ந்தெடுப்பாயோ அது உன் விருப்பம். நான் என் அறிவுப்புப்படி நடத்தியே தீருவேன். மஞ்சுளாவா? மரணமா? சீக்கிரம் சொல்" என்றார் மந்தஹாஸர்.

அழகனும், அறிவாளியும், ஆண்மை மிக்கவனுமான கீர்த்திவர்மன் ஒரு விநாடி மௌனமாக நின்றான். பிறகு மஞ்சுளாவின் அருகில் சென்றான்.

"மஞ்சுளா உன்னிடம் எனக்குப் பரிவும் அனுதாபமும் உண்டு. உன் அழகையோ அறிவையோ நான் குறைகூறவில்லை. ஆனால் என் வாழ்க்கைத் துணைவியாக என்னை ஏற்றுக் கொள்ள என்னால் இயலாதிருப்பதற்காக என்னை மன்னித்து விடு" என்றவன் கொலையாளியின் பக்கம் திரும்பி, "கொலைக்களத் தலைவனே! நீ உன் கடமையைஞ் செய்யலாம். என்னை எங்கு அழைத்துப் போய் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொள்ளலாம். நான் தயாராக இருக்கிறேன்" என்றான்.

அப்போது மஞ்சுளாவிடமிருந்து விம்மல்களும் கேவல்களும் எழுந்தன. அவையின் கவனம் முழுவதும் அவள் மீதே பதிந்தன. "என்னை மணப்பதை விட மரணத்தை ஏற்பது மேல் என்ற முடிவுக்கு வந்து விட்டீர்களா இளவரசே? இத்தகைய முடிவுக்கு வர வேண்டுமானால் என்னைப் பற்றி எவ்வளவு தாழ்வான ஒரு எண்ணம் தங்களுக்கு இருக்க வேண்டும் என்பதை உணர்கிறேன்..." என்றவளால் அதற்கு மேல் பேச முடியவில்லை. துக்கமும் அழுகையும் அவள் தொண்டையை அடைத்துக் கொண்டன. மஞ்சுளா நல்ல பெண். அவள் காதலன் இன்பவண்ணன் என்ன ஆனான் என்று தெரியவில்லை. அவனை நினைத்து அவள் விடும் கண்ணீர் அவனை உயிரோடு கொண்டு வந்து விடப் போவதில்லை. இந்நிலையில் கீர்த்திவர்மன் இறப்பதையும் அவளால் தாங்க முடியவில்லை.

"மஞ்சுளா... நான் உன்னைத் தாழ்வாக மதிப்பிடவில்லை. ஆனால்...?"

"கீர்த்தி நீங்கள் அறிவாளி, அபார ஆற்றல் மிக்க வீரர். உங்களை இந்த நாடு இழக்கக் கூடாது." என்றாள் மஞ்சுளா விம்மல்களுக்கிடையே.

"ஆனால் நாம் ஒருவரையொருவர் விரும்பவில்லை. என் உள்ளத்தில் இடம் பிடித்துக் கொண்டிருப்பவள் வேறு ஒருவள். உன் எண்ணத்திலும் இதயத்திலும் யார் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். உயிர் வாழ்வதற்காக மகிழ்ச்சியையும் மதிப்பையும் விலை பேச வேண்டாம் மஞ்சுளா" என்றவன் மன்னரின் பக்கம் திரும்பி கம்பீரமான குரலில் கேட்டான்:

"மணம் அல்லது மரணம் என்ற இந்த நிபந்தனையில் எவ்வித மாற்றத்துக்கும் வழியில்லையா அரசே? உங்கள் அறிவிப்பில் அரைப்பாகத்தை மட்டும் நிறைவேற்றச் சம்மதிக்க மாட்டீர்களா? பரிசுத் தொகையான இப்பொற்கிழியைப் பெறுகிறவர்கள் தம்மை மணக்க விருப்பமில்லாத பாவை மஞ்சுளாவையும் ஏற்க வேண்டுமென்ற இந்த நிபந்தனை தளர்த்தப்பட மாட்டாது என்றால் இந்தப் பொற்காசுகளும் எனக்கு

வேண்டாம். இந்தாருங்கள்!" என்று பொற்கிழியைத் தூக்கி மன்னர் மந்தஹாஸரின் காலடியில் வீசினான் கீர்த்தி.

தன் காலடியில் வந்து விழுந்த பொற்காசுகள் கொண்ட மூட்டையை ஒரு விநாடி பார்த்தார் மன்னர். அடுத்த விநாடி அவர் குரல் அரண்மனையையே அதிர வைத்தது. "இது உன்னுடைய பொருள். அதை நீயே வைத்துக் கொள். நான் என்னுடைய வாக்களிப்பிலிருந்து நழுவ மாட்டேன். ஆண்டவன் சந்நிதானத்தில் அவள் கழுத்தில் மங்கல நாணை அணிவிக்கிறாயா? அல்லது மரணத்தை நோக்கி நடக்கிறாயா? சொல் சீக்கிரம்."

"விசித்திரபுரியின் வருங்கால மன்னனோடு விதி வினோதமான முறையில் விளையாடுகிறது. ஓர் இளவரசனின் வாழ்வை அவன் விரும்பாத ஒரு பெண்ணின் வாழ்வோடு இணைத்து வாழ்வா சாவா என்று கேட்டுச் சவால் விடுகிறார் மன்னர்!" என்று ஏளனமாக நகைத்து நின்றான் கீர்த்தி.

மந்தஹாஸருக்கும் தன் பிடிவாதம் அர்த்தமற்றது என்று தோன்றியதோ என்னவோ, அவர் முகத்தின் கடுமை கொஞ்சம் குறைந்தது போலிருந்தது. விசும்பிக் கொண்டிருந்த மஞ்சுளாவையும் பார்த்தார். "ஒரு நிபந்தனையின் மீது என்னுடைய முடிவில் மாற்றம் செய்கிறேன்." என்றார் மன்னர்.

"நிபந்தனை என்னவோ!" என்று கேட்டான் கீர்த்திவர்மன்.

"என் இளைய குமாரர்களான இன்பவண்ணனையும், மோகனரங்கனையும் அவர்கள் இங்கிருந்து எப்படிப் போனார்களோ அதே போல் எனக்குத் திருப்பி அளிப்பதானால் நீ மஞ்சுளாவை மணப்பதிலிருந்து உனக்கு விடுதலை அளிக்க முடியும்" என்றார் மந்தஹாஸர்.

மன்னரின் வார்த்தைகளைக் கேட்ட கீர்த்திரவர்மன் சில விநாடிகள் சிந்தனை வசப்பட்டிருந்தான். அவையே அவன் முகம் பார்த்தபடி அசையாமலிருந்தது. மஞ்சுளா கூடத் தன் கேவலை நிறுத்தி விட்டுக் கேள்விக் குறியைப் பார்வையிலே

மிதக்கவிட்டபடி நிமிர்ந்து கீர்த்தியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உங்கள் நிபந்தனைக்கு ஒப்புக் கொள்கிறேன். ஆனால் எனக்கும் நீங்கள் சில வாக்குறுதிகளை அளிக்க வேண்டும்" என்றான்.

"கேட்கலாம். நேர்மையானதாக இருந்தால் நிச்சயம் அளிக்கப்படும்"

"என்னை நம்முடைய பழைய அரண்மனைக்குள் போக அனுமதிக்க வேண்டும். எவ்விதக் கட்டுக்காவலும் இருக்கக் கூடாது. என்னைத் தொடர்ந்து யாரும் வரவும் கூடாது. என் செயல்களை ரகசியமாகக் கண்காணிப்பதும் தடுக்கப்பட வேண்டும். மூன்று நாட்களில் நான் என் தம்பிகளுடன் மன்னர் முன் வந்து நிற்பேன். அப்படி நான் என் தம்பிகளுடன் வராவிட்டால் அதன் பிறகு நீங்கள் உங்கள் விருப்பம் போல் எனக்குத் தண்டனை அளிக்கலாம். ஆனால் அதற்கு அவசியமிருக்காது. என் தம்பிகளை உயிரோடு மீட்க

முடியாவிட்டால் இளவரசன் கீர்த்திவர்மன் தன்னைத்தானே அழித்துக் கொண்டு விடுவான்."

தன் மகனுடைய வீரம் மிக்க வார்த்தைகளைக் கேட்ட மன்னர் கொஞ்ச நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார். கீர்த்தியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொளவதினால் அவர் இழக்கப் போவது ஏதுமில்லை. அவருடைய அருமைக் குமாரர்கள் திரும்பிக் கிடைக்க வழி ஏற்படலாம். இல்லா விட்டால் மூத்த மகனைக் கொன்ற தந்தை என்ற அவப்பெயரிலிருந்து தப்பலாமே. தம்பிகளை உயிரோடு தர முடியாத நிலையில் தன்னையே அழித்துக்கொள்வதாகக் கூறி விட்டானே கீர்த்தி - இத்தகையை எண்ண ஓட்டத்தின் முடிவில், "உன் நிபந்தனைகள் ஏற்கப்பட்டன" என்றார் மந்தஹாசர்.

மன்னரின் அனுமதி பெற்று பறக்கும் கம்பளத்தைச் சுருட்டி எடுத்துக் கொண்டான் கீர்த்தி. அவையிலுள்ள அத்தனை கண்களும் அவன் மீதே பதிந்திருந்தன. அமைதியாக எவ்வித அவசரமுமின்றி வெளியேறிய கீர்த்தி பறக்கும் கம்பளத்தைக்

கொண்டு போய் நந்தவனத்திலிருந்த புல்தரையில் விரித்தான். அதன் நடுவில் அமர்ந்து கொண்டான். மங்களகிரியை நோக்கிப் போகுமாறு கம்பளத்துக்கு ஆணையிட்டான். பழைய அரண்மனைக்குப் போவதற்கு அனுமதி கேட்ட கீர்த்தி மங்களகிரிக்குப் போவானேன்?

குந்தளவல்லியைக் காணாமல் அவனால் எந்த காரியத்தையும் செய்ய முடியாது போலிருந்தது. வெறும் புத்தகப் புழுவாக இருந்த அவனைச் செயல்வீரனாக மாற்றியது அவளுடைய அழகும் சிரிப்பும்தானே? குந்தளவல்லியின் மோகனமான சிரிப்பை எண்ணி மகிழ்ந்தபடியே மங்களகிரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான் இளவரசன் கீர்த்திவர்மன்.

# அத்தியாயம் - 17

இளவரசன் கீர்த்திவர்மனின் வரவினால் மகிழ்ச்சியடையக் கூடியவர்கள் குந்தளவல்லியைத் தவிர வேறு யாராவது இருக்க முடியுமா? இருவரும் நந்தவனத்துக்குச் சென்றார்கள். குந்தளவல்லியுடன் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசி மகிழத் துடித்துக் கொண்டிருந்தான், கீர்த்தி. நந்தவனத்தின் மையப் பகுதியில் மெத்தென்ற பசும்புல் வெளி. அழுத்தமான பச்சைக் கம்பளத்தை விரித்தது போல் இருந்தது. அதன் நடுவே ஓங்கி வளர்ந்த ஒரு சரக் கொன்றை மரம். சரக் கொன்றையின் பூக்களைப் பார்த்திருக்கிறீர்களா?.... பொன்னை உருக்கிக் காசுகளாகவும் மணிகளாகவும் வார்த்துக் கோத்துக் கட்டித் தொங்க விட்டாற் போல மரம் முழுவதும் சரம் சரமாகப் பூத்துக் குலுங்கும். மஞ்சள் நிறப் பூக்கள் மரகதக் கம்பளம் போன்ற புல்தரையில் பொற்காசுகள் போன்ற சரக் கொன்றை மலர்த் தூவலின் மீது போய் இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.

நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் கீர்த்தி கூறினான். "இன்னும் மூன்றே நாட்கள்தான். நான் திட்டமிட்டபடி எல்லாம் முடிந்தாக வேண்டும் அல்லது என் வாழ்வே முடிந்து விடும். நான் என் சகோதரர்களை உயிரோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாக அப்பாவுக்கு வாக்களித்திருக்கிறேன். அப்படி முடியாவிட்டால் அந்த முயற்சியிலேயே என்னை நான் அழித்துக் கொள்வேன்."

கீர்த்தியின் பேச்சைக் கேட்ட குந்தளவல்லியின் உடல் நடுங்கியது. அவளால் பேசவே முடியவில்லை. கீர்த்திதான் பேசினான்.

"அக்கினி அரக்கனைச் சந்திக்க நான் முதலில் போயிருந்தேனானால். அதில் நான் மடிய நேரிட்டிருக்குமானால், என்னை அடுத்து என் தம்பிகளை அப்பா அந்தக் காரியத்துக்கு அனுப்பியே அருக்க மாட்டார். அதே மாதிரி உன்னைச் சந்திப்பதற்கு முன்பாக நான் அந்தக் கொடிய மிருகத்தைச்

சந்தித்திருப்பேனானால் அதை என்னால் கொன்றிருக்கவும் முடியாது.. "

"அக்கினி அரக்கனை நீங்கள் வெற்றி கொள்வதற்கு அப்படி நான் என்ன செய்து விட்டேனாம்?" என்றாள் குந்தளா.

"உன்னைக் காண்பதற்கு முன்னால் எனக்கு மந்திர மாயங்களில் நம்பிக்கையே இல்லையே! கணிதம், ரசாயனம். நிலநூல், வானியல், உடல் நூல், மண் இயல் என்று இப்படி ஏதேதோ அறிவியல் விஷயங்களில் ஆழ்ந்து போயிருந்தேன். அப்படி அந்த நிலையில் நான் அக்கினி அரக்கனின் முன்னிலையில் போயிருந்தால் என்னைத் தன் ஒரு கவள உணவாக்கிக் கொண்டிருக்கும் அது. உன்னைக் கண்ட பிறகுதான் எனக்கு வாழ்க்கையிலேயே புதிய உற்சாகமும் ஒரு பிடிப்பும் ஏற்பட்டன. வெறும் படிப்பைத் தவிர உலகில் உன்னைப் போல வேறு பல உருப்படியான விஷயங்களும் இருக்கின்றன என்பதை அறிந்தேன். உன் சிரிப்பும் பார்வையும்தான் அந்தக் கொடிய

மிருகத்தை எப்படியும் கொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தை என்னுள் வளர்த்து விட்டன."

குந்தளவல்லிக்கு கீர்த்தியின் ஒவ்வொரு வார்த்தையும் பெருமையாகவும் பூரிப்பாகவும் இருந்தது. அவள் உள்ளத்து மகிழ்ச்சியை அவளது பளபளக்கும் கண்கள் மூலம் கண்டான் கீர்த்தி. குந்தளவல்லியின் இதயத்தை அத்தனை ஆனந்தத்துக்கும் ஊடாக ஒரு கவலையும் கடித்துக் கொண்டிருந்தது.

"அக்கினி அரக்கனை கீர்த்தி வெற்றி கொண்டது அவனுடைய அறிவாற்றலுக்கு எடுத்துக் காட்டு. பனி அரக்கனையும் அதையும் மோத விட்டு இரண்டையும் ஒரு சேர அழித்த அவன் சாகஸத்தை எத்தனை பாராட்டினாலும் போதாது. ஆனால் இப்போது அவன் மேற்கொண்டிருப்பது கருகிச் சாம்பலானா அவன் சகோதரர்களை உயிரோடு கொண்டு வருவதல்லவா? இது எப்படிச் சாத்தியமாகும்? இதை நிறைவேற்றாவிடில்? ஐயோ, என் கீர்த்தியை நான் இழந்து விடுவேனோ?" குந்தளவல்லியின் கண்கள் குளமாயின. ஆனால்

கீர்த்தி குன்றாத அதே குதூகலத்துடன் அவள் கண்களைத் துடைத்து ஆறுதல் கூறினான். அது அவளுக்கு எத்தனையோ இதமாக இருந்தாலும் உள்ளத்தின் கனம் மட்டும் குறையவில்லை.

அன்றிரவு மங்களகிரியிலேயே தங்கினான் கீர்த்தி. மறுநாள் அதிகாலையில் அரண்மனையில் எவரும் எழுந்திருக்கும் முன்பாக எழுந்திருந்து மந்திரக் கம்பளத்தை விரித்து அதில் அமர்ந்து கொண்டான். குந்தளவல்லியிடம் மானசிகமாக விடைபெற்றுக் கொண்டான். கம்பளம் வானத்திலே மிதந்து பறந்தது. விசித்திரபுரியின் பழைய அரண்மனையை நோக்கிழ மந்தஹாசர் தமது தலைநகரை மாற்றிக் கொண்ட பிறகு அந்தப் பழைய அரண்மனை பாழடைந்து கிடந்தது. அங்கு யாருமே அல்லை. யாருமற்ற அதன் நிசப்தமான நிலையே மிகப்பயங்கரமாக இருந்தது. அரண்மனையின் நிலா முற்றத்தில் நின்றபடி 'ஹோ' என்று வெறிச்சோடிக் கிடக்கும் அந்தப் பழங்கால அரண்மனையை ஒரு முறை பார்த்தான் கீர்த்தி.

ஏதாவது ஜீவன் அங்கு தென்படாதா என்று. கிழட்டுக் குதிரை, மாடு, காளை இப்படி ஏதாவது... ம்ஹூம்.. ஈ காக்கை கூட இல்லையே என்று ஏக்கத்தோடு பெருமூச்சு விடும் வேளையில் 'மியாவ்' என்று மெல்லிய ஓசை கேட்டது. ஒரு கிழட்டுப் பூனை. நோயால் மெலிந்து போன ஜீவன். அதற்குக் கண்கூடச் சரியாகத் தெரியவில்லை. உடலின் ரோமங்கள் ஆங்காங்கே உதிர்ந்து விகாரமான தோற்றம். எலியையோ பறவையையோ பிடிக்கும் வலிமை இழந்த நிலையில் எப்படியோ எதையோ உண்டு உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும். அதைக் கண்ட கீர்த்திக்கு வேதனையாக இருந்தது. யாருமற்ற இந்தப் பாழடைந்த அரண்மனையில் இது இன்னும் அதிகநாள் உயிர்வாழ முடியாது. பசியினாலும் நோயினாலும் வருந்திச் சாவதை விட இதை இப்போதே நிம்மதியாக அமைதி பெறச் செய்வோம் என்று தன் உடையிலிருந்த வாளை உருவினான். அடுத்த விநாடி ஒரே மூச்சில் பூனையின் மூச்சும் அடங்கிற்று. ஆதரவற்ற ஒரு ஜீவன் அல்லல்படக் கூடாதென்ற நல்லெண்ணத்தினால்தான் கீர்த்தி அதைக் கொன்றான். பாழடைந்த அரண்மனையில் சிதறிக் கிடந்த

மரம், கட்டை, சுள்ளிகளைக் குவித்துத் தீமூட்டி அதில் அந்தப் பூனையின் உடலை வைத்துத் தகனம் செய்தான். கொஞ்ச நேரத்தில் பூனையின் உடல் சாம்பலாகியது.

கீர்த்தி வடக்குக் கோட்டை வாசல் உப்பரிகையின் அச்சியில் உள்ள மந்திரப் பொருள்கள் நிறைந்த அறையை நோக்கிப் போனான். விரிசல் விழுந்த கதவிடுக்கின் வழியாகக் காலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் அவ்வறையினுள்ளே புகுந்து அங்கு குவிக்கப்பட்டிருந்த மந்திரப் பொருள்களின் மீது விழுந்து விளையாடிக் கொண்டிருந்தது. கீர்த்தி அந்த விநோதப் பொருள்களைப் புரட்டிப் புரட்டி எதையோ தேடினான். அவன் முயற்சி வீண் போகவில்லை. சீனா தேசத்துப் பாசி வண்ண 'ஜேடு' என்ற கல்லினால் செய்யப்பட்டிருந்த ஒரு சிறு குடுவையைக் கையில் எடுத்தான். அதன் தோற்றமே வினோதமாக இருந்தது. அதன் கழுத்தில் ஒரு சுருக்குப்பை தொங்கியது. அதைப் பார்த்தபோது அதனுள் ஒரு ஓலைச் சுருள் இருந்தது. அதில்

'ஜீவநீர் ஊற்றின் உயிரளிக்கும் தண்ணீர்' என்று எழுதி அதன் தன்மைகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தது.

"இது இங்கு இருக்கும் என்று நான் எண்ணியது பொய்க்கவில்லை. என் தம்பிகளை உயிரோடு மீட்டு விடலாம்" என்று கீர்த்தி தனக்குத் தானே சொல்லிக் கொண்டே அந்தக் குடுவையுடன் அரண்மனை நிலா முற்றத்துக்கு ஓடி வந்தான்.

சற்றுமுன்பு நோய்வாய்ப்பட்ட கிழட்டுப் பூனைக்குத் தகனக்கிரியை நடந்த இடத்தை நோக்கி நடந்தான். தீ எரிந்து தணிந்து சாம்பல் மூடிக் கிடந்தது. குடுவியிலிருந்த ஜீவநீரின் சில துளிகளை அந்தச் சாம்பல் மீது தெளித்தான். அடுத்த விநாடி அவிந்திருந்த அதிலிருந்து குபீரென்று சிகப்பும் பச்சையுமான தீச்சுடர் நெளிந்தபடி, தனது ஒளி நாக்கை நீட்டிச் சப்புக் கொட்டுவது போல் உயர்ந்தது. அத்துடன் புகையும் மூண்டது. சற்றைக்கெல்லாம் புகை நடுவிலிருந்து அழகான கொழுகொழு பூனைக்குட்டியொன்று 'மியாவ்' என்று இனிய குரல் எழுப்பியபடி வெளியே வந்தது. எந்தக் கிழட்டுப் பூனையை அது

துன்பப்படுவிதிலிருந்து அதற்கு விடுதலை அளித்தானோ கீர்த்தி, அதே பூனை அதன் இளமையில் எப்படி இருக்குமோ அப்படி அந்தச் சாம்பல் மூட்டத்திலிருந்து உயிர் பெற்று வந்தது. கீர்த்தி சிறுவனாக இருந்தபொழுது அந்த அழகுப் பூனையுடன் ஓடி விளையாடியிருக்கிறான். அது இப்போது அவன் நினைவுக்கு வந்தது. உயிர் பெற்ற அந்தப் பூனையும் இளவரசனை இனம் கண்டு கொண்டு தன் வாலை உயர்த்தித் தலையை திமிர்த்து வாஞ்சையோடு 'மியாவ்' என்று பேசிற்று. கீர்த்தி அதை வாரி அணைத்துக் கொண்டு அதன் பட்டு உடலைத் தடவிக் கொடுத்து மகிழ்ந்தான்.

"சாம்பலான பூனையை இந்த ஜீவ ஊற்றின் மந்திர நீரினால் மறுபடியும் இளமையோடு உயிர்ப்பிக்க முடியும் பொழுது அக்கினி அரக்கனால் எரிக்கப்பட்ட என் தம்பிகளை ஏன் உயிர்ப்பிக்க முடியாது?" இப்படிக் கேட்டுக் கொண்டே கிளம்புவதற்குத் தயாராகி விட்டான் கீர்த்தி. எங்கே? அக்கினி அரக்கனின் இருப்பிடத்துக்குத்தான்.

நினைத்ததைக் கொடுக்கும் மந்திரக் கோலை உயர்த்தி சுவையாக உணவுப் பொருள்களை வரவழைத்துப் பக்குவமாக அதைக் கட்டி எடுத்துக் கொண்டான் வழித்துணைக்கு. மந்திரக் கம்பளத்தில் ஜீவநீர் ஊற்று மந்திர நீருள்ள குடுவையுடன் அமர்ந்து கொண்டு அக்கினி அரக்கன் கரிக்கட்டையாகியுள்ள இடத்துக்குப் போகும்படி கம்பளத்துக்குக் கட்டளையிட்டான்.

மந்திரக் கம்பளம் வானில் மிதந்தபடி பறந்து கொண்டிருக்கும்போதே கீர்த்திக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. 'அக்கினி அரக்கனைக் கொல்ல எத்தனையோ ராஜகுமாரர்கள் எத்தனையோ ஆண்டுகளாக வந்து முயன்று சாம்பலாகியிருப்பார்கள். அங்குள்ள சாம்பல் குவியல்களின் இன்பவாணனுடையது எது என்று எப்படிக் கண்டுபிடிப்பது?' ஒரு விநாடிதான் அந்தக் குழப்பம் இருந்தது கீர்த்திக்கு. உடனே அதைச் சமாளிக்கும் மார்க்கம் அவனுக்குப் புலனாகி விட்டது. அவன் எல்லோரையும் போல் சாதாரண அறிவாளியா? இல்லையே!

'மந்திரக் கம்பளத்துக்குக் கட்டளையிட்டால் அது இன்பவண்ணனுடைய சாம்பல் குவியல் அருகே கொண்டு போய் இறக்கி விடுகிறது! மனிதர்களால் முடியாத காரியத்தை மந்திரக் கம்பளம் சுலபமாக நிறைவேற்றி விடுமே!' அதன்படியே கட்டளையிட்டான் கம்பளத்துக்கு. அதுவும் 'விர்' என்று அக்கினி அரக்கனின் சுடுகாட்டுப் பகுதியில் ஒரு 'கிர்' அடித்துப் பறந்தபடி ஓர் இடத்தில் போய் இறங்கியது. கீர்த்தி குடுவையுடன் கவனமாகச் சாம்பல் குவியலை உற்றுப் பார்த்தான் பிறகு கிளறினான். பளீரென்று ஒரு உடைவாள் சாம்பல்களுக்கிடையே மின்னியது. நவரத்தினக் கற்கள் வைத்து இழைக்கப்பட் அதன் கைப்பிடியைக் கண்டதுமே அது இன்பவண்ணனுடையதுதான் என்று தெரிந்து விட்டது. குடுவையிலிருந்து சில துளி ஜீவநீரை எடுத்து அந்தச் சாம்பல் குவியலின் மீது தெளித்தான். அடுத்த விநாடி நெருப்பும் புகையும் சீறிக் கொண்டு கிளம்பின. அதன் நடுவிலிருந்து கண்களைக் கசக்கிக் கொண்டே துள்ளி எழுந்து ஓடி வந்தான் இளவரசன் இன்பவண்ணன்.

"அண்ணா, நீங்களும் அக்கினி அரக்கனைத் தேடித்தான் வந்தீர்களா? நான் கொஞ்சம் கண்ணயர்ந்து விட்டேன். அதில் கனவு வேறு. அந்தப் பொல்லாத மிருகம் என்னை அடித்து வீழ்த்துவது போல! நல்லவேளை விழித்துக் கொண்டேன். நீங்களும் வந்திருக்கிறீர்கள். இருவரும் சேர்ந்து அதை யமனுலகுக்கே அனுப்புவோம். அது சரி ஊரில் மஞ்சுளா எப்படி இருக்கிறாள்?" என்று மடமடவென்று பேசிக் கொண்டே போனான்.

"மஞ்சுளா முன்னை விட அழகாக இருக்கிறாள். உன்னை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறாள். அக்கினி அரக்கனைக் கொன்றாகி விட்டது. ஆகவே நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே. தம்பி, மோகனரங்கனை இங்கு எங்கோ இருக்கச் சொன்னேன். தேடி அழைத்து வரும் வரை நீ சற்று இங்கேயே அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிரு" என்றான் கீர்த்தி. அவனும் மோகனும் அக்கினி அரக்கனால் சாம்பலானதை அவனிடம் தெரிவிக்கக் கீர்த்திவர்மன் விரும்பவில்லை.

# அத்தியாயம் - 18

இன்பவண்ணனிடம் அவன் இத்தனை நாள் எப்படி இருந்தான் என்பதை விளக்க விரும்பாத நிலையில் விடைபெற்றுக் கொண்ட கீர்த்தியிடம் அவன் ஒரு வேண்டுகோள் விடுத்தான்.

"அண்ணா ஒரு சின்ன வேண்டுகோள். பசிக்கு ஏதாவது கொண்டு வந்திருக்கிறாயா? என்னவோ தெரியவில்லை, எனக்கு ஒரே பசி! இப்படிப் பசித்து நான் பார்த்ததே இல்லை" என்றான்.

உயிர் பெற்று எழும் தம்பிகளுக்கு அப்படி அபாரமாகப் பசி எடுக்கும் என்பதை முன்கூட்டியே ஊகித்திருந்த கீர்த்தி அதற்காகவே உணவுடன் தயாராக வந்திருந்தானே. உணவுப் பொட்டலத்தை இன்பவண்ணனிடம் கொடுத்துக் கொண்டே, "தம்பி இதோ இந்தக் கம்பளத்தின் மீது மட்டும் உட்கார்ந்து விடாதே" என்று எச்சரித்தான். நளசர்மாவிற்கு ஏற்பட்ட அனுபவத்தைப் போல மறுபடி ஏற்பட்டு விடக் கூடாதே என்ற கவலை கீர்த்திக்கு.

இன்பவண்ணனை எச்சரித்து விட்டு மோகனரங்கனின் சாம்பலைத் தேடிக் கரடுமுரடான மலைகளில் தட்டுத் தடுமாறி ஏறினான் கீர்த்தி. ஒரு மலை இடுக்கில் ஒரு சாம்பல் குவியலும் அதன் அருகே ஒரு இரும்புக் கவசமும் இருந்தன. அந்தக் கவசத்தின் அமைப்பிலிருந்து அது மோகனரங்கனுடையதுதான் என்பதைத் தெரிந்து கொண்ட கீர்த்தி அந்தச் சாம்பலில் ஜீவநீர்த் துளிகளை தெளித்தான். அடுத்த விநாடியே மோகனரங்கன் முறுவலித்தபடி அந்தச் சாம்பல் குவியலிலிருந்து எழுந்து உட்கார்ந்தான்.

"என்ன தூங்குமூஞ்சிக் கவிராயரே? பலமான உறக்கம் போலிருக்கிறது? சரி, சரி, சீக்கிரமாக எழுந்து வா, இல்லா விட்டால் நம் பசிக்கு ஏதும் கிடைக்காது. இன்பவண்ணன் எல்லாவற்றையும் ஏப்பம் விட்டு விடுவான்." என்று கூறி அவனையும் அழைத்துக் கொண்டு இன்பவண்ணன் இருக்குமிடம் வந்தான் கீர்த்தி. நல்லவேளை, இன்னும் கொஞ்சம் தாமதமாகி வந்திருந்தால் கீர்த்தி கூறியபடி அவர்களுக்கு ஏதுமே இருந்திருக்காது.

மூவரும் உண்டு பசியாறிய பிறகுதான், கீர்த்தி அக்கினி அரக்கனுடன் தான் போரிட்டு அதை அழித்ததைக் கூறினான். ஆனால் தம்பிகள் இருவரும் சாம்பலாகி புத்துயிர் பெற்றதை மட்டும் கீர்த்தி அவர்களுக்குக் கூறவில்லை. கீர்த்தி புத்திசாலியாயிற்றே. அவர்கள் நம்பும்படியாக ஒரு கதை கட்டி விட்டான்.

"தம்பிகளா, இந்த அக்கினி அரக்கன் வசித்த பிராந்தியம் இருக்கிறதே அது மந்திர சக்தியினால் காக்கப்பட்ட எல்லைகளைக் கொண்டது. இதற்குள் நுழைபவர்கள் நினைவிழந்து அப்படியே நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்து விடுவார்கள். அதனால்தான் அதை வெற்றி கொள்ள விரும்பும் யாரும் வெற்றியோடு திரும்புவதில்லை. நீங்களும் கூட அந்த மந்திரத்தினால் மயங்கித்தான் உறங்கிப் போனீர்கள். இந்த ரகசியத்தையறிந்த நான் முதலில் உறக்கத்துக்கு உட்படுத்தும் அந்த மந்திரக் கட்டிலிருந்து விடுபடுவதற்கான வழி செய்து கொண்டேன். அதன் பிறகு அக்கினி அரக்கனையும் பனி அரக்கனையும் மோத விட்டு இரண்டையும் அழிப்பது

சுலபமாயிற்றே." என்றான். இப்படிக் கீர்த்தி அவர்கள் செத்துப் பிழைத்ததைக் கூறாமல் உறங்கி எழுந்திருப்பதாக நம்பும்படியாகச் செய்து விட்டான். மற்றும் மந்திரக் கம்பளத்தைப் பற்றியும் அவர்களிடம் விவரித்தான். ஆனால் அதைக் கேட்டு அவர்கள் வியப்படையவில்லை. அவர்கள்தான் மந்திர தந்திரங்களில் நம்பிக்கையுள்ளவர்கள் ஆயிற்றே!

"இப்போது நாம் மந்திரக் கம்பளத்தில் உட்கார்ந்து ஆகாய வீதியில் பறந்து செல்லப் போகின்றோம். பனி அரக்கனின் இடத்தை நீங்கள் பார்க்க வேண்டாமா? அதுவும் தவிர அங்கு ஏராளமான வீரர்கள் பனி அரக்கனின் கொடிய சீதளத்தில் உறைந்து சிலையாக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உயிர்ப்பித்து விட வேண்டும்" என்றான் கீர்த்தி.

"மந்திரக் கம்பளத்தைக் கொண்டு வந்திருக்கிறாயா? எங்கே?" என்றான் இன்பவண்ணன்.

"நீ சொகுசாகச் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே, அதுதான் மந்திரக் கம்பளம்" என்று கூறி அதை எடுத்து விரித்தான். மூவரும் அதில் ஏறி அமர்ந்து

கொண்டார்கள். கீர்த்தி கம்பளத்துக்குக் கட்டளையிட அது 'ஜிவ்' வென்று ஆகாயத்தில் எழும்பிப் பறந்து பனி அரக்கன் உருகி நதியாக ஓடிக் கொண்டிருக்கும் பகுதிக்குப் போய் இறங்கிற்று. கீர்த்தியின் தம்பிகள் பிரமிப்பினால் திக்குமுக்காடிப் போயிருந்தார்கள். அது மந்திரக் கம்பளத்தில் பிரயாணம் செய்ததினால் மட்டுமல்ல. அந்தப் பிரதேசத்தில் வரிசையாக ஏராளமான போர் வீரர்கள் பல்வேறு நாட்டு உடைகளிலும் குதிரை மீதும் தேர்களிலும் சிலைகளாகி நிற்கும் காட்சியுமே அவர்களை அப்படி ஆக்கியிருந்தது.

கீர்த்தி அங்கிருந்த ஒரு கொடியின் பெரிய இலைகளைப் பறித்துத் தொன்னை போலச் செய்து அதில் கொஞ்சம் ஜீவநீரை ஊற்றித் தம்பிகளிடம் கொடுத்து "இதிலிருந்து ஒவ்வொரு துளி எடுத்து இங்குள்ள சிலைகளின் மீது தெளியுங்கள்" என்று கூறினான். தானும் தன்னிடமுள்ள குடுவியிலிருந்து அந்த மந்திர நீரைக் கொண்டு சிலைகளை உயிர்ப்பிக்கலானான்.

கொஞ்ச நேரத்தில் சலனமற்று நிசப்தமாக இருந்த அந்தப் பிராந்தியத்திலே கோலாகலமான கூச்சல் எழுந்தது. சிலைகளாக உறைந்து போய் இருந்த அத்தனை வீரர்களும் உயிர் பெற்று விட்டார்கள். குதிரைகள் கனைத்தன. வாள்கள் மின்னின. கவசங்களும் கேடயங்களும் கலகலத்தன. அப்போதுதான் வந்து கூடியவர்களைப் போல அத்தனை போர் வீரர்களும் தங்கள் தங்கள் மொழிகளில் உற்சாக ஆரவார கோஷமிட்டாரகள். உலகத்து மொழிகள் அத்தனையும் அறிந்த கீர்த்தி அவர்கள் எல்லோருடனும் அளவளாவினான். அவர்களை வரிசைப்படுத்தி விசித்திரபுரிக்குத் தன் விருந்தினர்களாக வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

"வாழ்க வாழ்க .. இளவரசர் கீர்த்திவர்மர் வாழ்க!"

"பனி அரக்கனை மாய்த்த பராக்கிரமர் கீர்த்திவர்மர் வாழ்க!"

"அக்கினி அரக்கனை அழித்த அற்புத வீரர் கீர்த்திவர்மர் வாழ்க, வாழ்க!" என்ற கோஷம் வானை முட்ட புழுதிப் படலம் விசித்திரபுரியை எட்டியது. அத்தனை வீரர்களும் அணிவகுத்து

ஆர்ப்பாட்டமிட்டபடி விசித்திரபுரியை நோக்கி வீறு நடை போட்டார்கள். வெள்ளமென் வரும் வீரர்களையும் அவர்கள் போடும் கோஷங்களையும் கேட்ட மந்தஹாசரின் மனத்திலே மகிழ்ச்சி பொங்கிற்று. கீர்த்தியின் மீதிருந்த கோபமெல்லாம் அக்கினி அரக்கனின் பிடியில் பனி அரக்கனின் உடல் உருகியது போல ஓடி மறைந்தது.

இளவரசர்கள் மூன்று பேரும் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு இன்பவண்ணனும் மோகனரங்கனும் உயிர்பெற்று விட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டார் மந்தஹாசர். அவர் உள்ளம் தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தது.

மந்திரக் கம்பளத்தில் ஏறி ககன மார்க்கமாக இளவரசர்கள் மூவரும் மங்களகிரிக்கு வந்தார்கள். மூன்று இளவரசர்களையும் ஒரே சமயத்தில் கண்ட மாணிக்கவர்மர் திகைப்பினாலும் பரபரப்பினாலும் தவித்துப் போனார். கீர்த்தி அவரிடம் நடந்தவைகளைச் சுருக்கமாக விளக்கினான்.

மகிழ்ச்சியால் மலர்ந்த முகத்துடன் அத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்தாள் குந்தளவல்லி.

"இங்கு தாமதிப்பதற்கில்லை. நீங்களும் குந்தளவல்லியும் எங்களோடு விசித்திரபுரிக்கு வருகிறீர்கள். மந்திரக் கம்பளத்தில் வந்து அமர்ந்து கொள்ளுங்கள்" என்றான் கீர்த்தி. அவன் விருப்பப்படியே அவர்கள் இருவரும் மந்திரக் கம்பளத்தில் வந்து அமர்ந்து கொண்டார்கள். குந்தளவல்லி கீர்த்தியின் அருகில் அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

மந்திரக் கம்பளத்தில் வந்து இறங்கிய இளவரசர்களை அங்கு கூடி இருந்த பல தேசத்து ராஜகுமாரர்களும் வீரர்களும் உற்சாகமாக ஆரவாரமிட்டு வரவேற்றார்கள். மந்தஹாசர் இன்பவண்ணனையும் மோகனரங்கனையும் இரு கைகளாலும் தம் உடலோடு அணைத்து கொண்டு கண்ணீர் விட்டார். இன்பவண்ணனுக்கும் மோகனரங்கனுக்கும் தகப்பனார் ஏன் விக்கி விக்கி அழ வேண்டும் என்றோ மஞ்சுளாவும் கனகாவும் விசித்து விசித்து அழுவதற்கான காரணம் என்ன என்றோ

புரியவில்லை! ஆனால் கொஞ்ச நேரத்தில் எல்லோரும் கலகலவென்று மகிழ்ச்சியினால் சிரிக்கலாயினர்.

மூத்த மகன் கீர்த்தியை மார்போடணைத்துத் தழுவிக் கொண்டார் மந்தஹாஸர். "என்னை மன்னித்து இந்த நாட்டின் அரசப் பொறுப்பை ஏற்றுக் கொள்" என்றார். "என் மகன் வீராதி வீரன் கீர்த்திவர்மனுக்கு...!' என்று தானே குரல் எடுத்துக் கூவினார். "ஜே ஜே!" என்ற கோஷம் அரண்மனையை அதிர வைத்தது.

குந்தளவல்லியைத் தன் வாழ்க்கைத் துணையாக ஏற்கப் போவதாகவும் அதற்கு ஆசியும் அனுமதியும் வேண்டித் தகப்பனாரை வணங்கினான் கீர்த்தி. குந்தளவல்லியின் எழிலிலே மந்தஹாசர் மகிழ்ந்து போனார்.

"நாளைக்கே மூன்று மணவறைகள் தயாராகட்டும். நாள் நட்சத்திரம் சம்பிரதாயச் சடங்குகள் எல்லாம் வேண்டாம். மூன்று ராஜகுமாரர்களுக்கும் நாளைக்கே திருமணம். தகுந்த ஏற்பாடுகளைச் செய்யுங்கள். விருந்து மட்டும் பிரமாதமாக

இருக்க வேண்டும்" என்று தம் மந்திரிக்கு ஆணையிட்டார் மந்தஹாசர்.

மறுநாள் கீர்த்தியின் கரத்தைக் குந்தளவல்லியும், இன்பவண்ணனின் கையை மஞ்சுளாவும், மோகனரங்கனின் அருகிலே கனகாவுமாகத் திருமணம் முடிந்து ஆலய தரிசனத்துக்குப் போய்க் கொண்டிருந்தார்கள் ஊர்வலமாக. அப்போது வெகுவேகமாக ஆறு குதிரைகளைப் பூட்டிய ரதமொன்று ராஜவீதியிலே புழுதியைக் கிளப்பியபடி வந்தது. அதிலிருந்தது யார் என்று நினைக்கிறீர்களா? மகாராணி ரத்னாவதிதான்! சாலை மார்க்கமாக மங்களகிரியிலிருந்து கிளம்பியவள் அன்றுதான் விசித்திரபுரிக்கு வந்து கொண்டிருந்தாள்.

ஊர்வலத்தைக் குறுக்கிட்ட ரதம் நிறுத்தப்பட்டது. தம் இளைய பிள்ளைகள் இருவரையும் உயிரோடு கண்டதும் மகிழ்ந்து போனாள்.

குந்தளவல்லியுடன் கீர்த்தி எங்கு போனான் தெரியுமா? அந்தப் பாழடைந்த அரண்மனைக்குத்தான்! இப்போது அது

அத்தனை மோசமாக இல்லை. மன்னருக்கும் இளவரசனுக்கும் சமரசம் ஏற்பட்டு விட்டதனால் கீர்த்தியை விரும்பும் குடிபடைகளும் அரண்மனை நிர்வாகிகளும் அங்கு திரும்பியிருந்தார்கள். அங்கு கலகலப்புக் கூடிக் கொண்டிருந்தது. வருங்கால மன்னர் இனி கீர்த்திவர்மன்தானே? இறந்து இளமையோடு உயிர்பெற்ற பூனைக்குட்டி தன் வாலை நிமிர்த்தி உயர்த்திக் கீர்த்தியை வரவேற்றது. அவன் காலோடு தன் உடலை உரசிக் குலாவிற்று. அந்த அரண்மனையே தனக்குச் சொந்தமானது போல, கீர்த்தி குந்தளவல்லி இருவருக்கும் வழி காட்டிக் கொண்டு முன்னால் நடந்தது அந்தப் பூனை.

குந்தளாவும் கீர்த்தியும் மகிழ மரத்தடியில் உட்கார்ந்திருந்தனர். கீர்த்தி கேட்டான்: "குந்தளா, உனக்கு மகிழ்ச்சிதானே?"

"மகிழ்ச்சிதான்..." என்றாள் குந்தளவல்லி. ஆனால் அவள் அப்படிச் சொன்னபோது அவள் குரலில் ஏதோ ஒரு குறை இருப்பதாகப் பட்டது கீர்த்திக்கு.

"இல்லை, உன் குரலில் ஏதோ ஒரு ஏக்கம் இழையோடுகிறது. பூரண மகிழ்ச்சியாக அது ஒலிக்கவில்லையே குந்தளா. கண்ணே! உன் மனத்தைத் திறந்து என்னிடம் உண்மையைச் சொல்லு."

குந்தளா கீர்த்தியின் அகன்ற மார்பில் தன் முகத்தைப் பதித்தபடி "என்னைப் போலவே எல்லோரும் உங்களை விரும்பி நேசிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். நீங்கள் அரசர் என்ற பயத்தினாலும் மதிப்பினாலும் மட்டுமில்லாமல் ஒவ்வொருவரும் உங்களை உண்மையாகவே விரும்ப வேண்டும். நீங்கள் எல்லோரையும் விட மிக மிக அறிவாளியாக, சாமர்த்தியக்காரராக இருப்பதில் எல்லோருக்கும் இப்போது உங்களிடம் பயம்தான் இருக்கிறது. ஆகவே நினைத்ததைக் கொடுக்கும் மந்திரக் குல்லாயை அணிந்து கொண்டு 'எல்லோரையும் போலவே சாதாரண அறிவாளியாகவும் சராசரியான சாமர்த்தியக் காரராகவும் நான் மாற வேண்டும்' என்று நினைத்துக் கொள்ளுங்கள். உங்கள் விருப்பத்தை அந்த மந்திரக் குல்லாய் நிறைவேற்றி வைக்கும். அதன்பிறகு

எல்லோருமே உங்களிடம் பயம் கொள்ளுவதை விட்டு உண்மையான அன்போடு நேசிப்பார்கள்" என்றாள் குந்தளவல்லி.

கீர்த்தி சில விநாடிகள் மௌனமாக இருந்தான். பிறகு "குந்தளா, உன் விருப்பம்தான் இனி எனக்கு வாழ்க்கையின் நியதி. நீ விரும்பினாயானால் அப்படியே ஆகட்டும். கொஞ்சம் பொறு இதோ என்னை மாற்றிக் கொண்டு வருகிறேன். இங்கேயே இரு" என்று கூறியபடி வடக்குக் கோட்டை வாசல் உப்பரிகையில் உள்ள உச்சாணி அறையை நோக்கி ஓடினான் கீர்த்திவர்மன்.

நினைத்ததை நினைத்தபடி நிறைவேற்றும் குல்லாயை எடுத்து அணிந்து கொண்ட கீர்த்தி தனக்குத் தானே கூறிக் கொண்டான். "குந்தளா விரும்பியபடி நான் மாறப் போவதில்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் தன் மனைவிக்குத் தெரியாத ஒரு ரகசியம் இருக்கும். அந்த ரகசியம் எனக்கு இதுவாக இருக்கட்டும்" என்றவன் குல்லாயிடம் கூறினான்: "மற்றவர்களை விட அதிகமான அறிவாளியாகவோ, சாமர்த்தியக்காரனாகவோ பிறருக்கு நான் தோன்றக் கூடாது. ஆனால் அதே நேரத்தில் என் நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படக் கூடாது." அவன்

விரும்பியபடியே பிறர் மனத்தில் அவனைப் பற்றி இருந்த பழைய எண்ணமும் பயமும் மறைந்தன.

கீர்த்தி மந்திரப் பொருள்கள் நிறைந்த அறையிலிருந்து திரும்பி குந்தளவல்லியிடம் வந்த போது தன் கணவனிடம் மகத்தான மாறுதல் ஏற்பட்டிருப்பதாக எண்ணினாள் அவள். குந்தளவல்லியைப் போலே அந்த விநாடியிலிருந்து எல்லோருமே கீர்த்தியைப் பற்றி நினைக்கலானார்கள். ஆனால் கீர்த்தி எப்போதும் போல எல்லோரையும் விட அதிக சாமர்த்தியசாலியாகவும் வீரனாகவும் விளங்கினான். ஆனால் முன்போல மற்றவர்களுக்கு அவனுடைய சிறப்புகள் எடுப்பான மனதில் படவில்லை. நினைத்ததைக் கொடுக்கும் மந்திரக் குல்லாயின் மகிமை அது.

விசித்திரபுரியை ஆண்ட அரசர்களிலேயே மக்களால் மிகவும் விரும்பி நேசிக்கப்பட்ட ஒரு மகாராஜாவாகக் கீர்த்திவர்மன் விளங்கினான்.

கீர்த்தியின் மகன் எப்படி இருந்தான்? அது ஒரு தனிக்கதை. கீர்த்தியின் வாழ்க்கையை விடச் சுவாரசியமானது. அதை மற்றோர் புத்தகத்தில் பார்க்கலாம்.

# முற்றும்